# பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்

## மகாத்மா காந்தி

மொழிபெயர்ப்பு:

அ·லெ·நடராஜன்

N45
100212

# பிரிட்டிஷாருக்கு

எனது

# வேண்டுகோள்

காந்தி மலர்,

சிறுநூல் வரிசை,

= உ =

# எமது வெளியீடுகள்

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

மலரும் மாலையும் — மூன்றும் பதிப்பு
ஆசிய ஜோதி — இரண்டாம் பதிப்பு
* இளந்தென்றல்
நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்

**ராஜாஜி**

கதைகள் — இரண்டாம் பதிப்பு
கட்டுரைகள்
அறநூல்கள் — இரண்டாம் பதிப்பு

**'கல்கி'**

* சாரதையின் தந்திரம்
மகுடபதி — இரண்டாம் பதிப்பு

**காந்திஜி**

* மாணவருக்கு
* பெண்களுக்கு
நமது மொழிப் பிரசினை
பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்

* விற்பனையாகிவிட்டது. கைவசமில்லை.

பிரிட்டிஷாருக்கு

# எனது வேண்டுகோள்

மகாத்மா காந்தி

(எழுதியதும் பேசியதும்)

மொழிபெயர்த்தவர் ;

அ. லெ. நடராஜன்

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்

காரைக்குடி

முதல் பதிப்பு: 26—9—45

நூ
N45

விலை ரூபா இரண்டரை

உரிமை பதிவு செய்யப்பெற்றது

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸில்) அச்சிடப்பெற்றது.



போட்டோ : கனு காந்தி

தீனபந்துவும் காந்திஜியும்

# முன்னுரை

ஜப்பான் யுத்தத்தில் கலந்துகொண்ட பிறகு, அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் அதிகமான பேர்கள் இந்தியாவுக்கு வரத் தொடங்கினர்கள். முக்கியமாக, அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள்தான் அதிகம். அவர்கள், காந்திஜியைக் கண்டு பேசி, யுத்தம்பற்றி அவரது அபிப்பிராயத்தையும் காங்கிரஸ் மகாசபையின் அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்ள விரும்பினர். அவர்களுக்கு, யுத்தம் சம்பந்தமாக, காந்திஜி அளித்த பேட்டிகளின் விபரமும், யுத்தம்பற்றி காந்திஜி எழுதியுள்ள கட்டுரைகளும் இந்தப் புத்தகத்தில் அடங்கி இருக்கின்றன.

காந்தி மலர் நூல் வரிசைகளைத் தொகுத்து வெளியிட்ட ஆனந்த டி. ஹிங்கோராணி அவர்களே, பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள் என்ற இந்த நூலையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். அவருடைய அனுமதிபெற்று, இந்த நூலைத் தமிழில் மொழிபெயர்த்து இருக்கிறேன். அவருக்கும், மொழிபெயர்ப்பைச் சரிபார்த்துத் திருத்தி உதவிய, காசி ஹிந்து சர்வகலாசாலை பேராசிரியர் மு. அருணாசலம் எம். ஏ. அவர்களுக்கும் எனது நன்றி

காரைக்குடி
26-9-1945

அ. லெ. நடராஜன்

## பொருளடக்கம்


பக்கம்

1. இந்தியாவில் அன்னியப் போர்வீரர்கள் .... 3
(ஹரிஜன்—ஏப்ரல் 26, 1942)

2. ஜப்பானியரை நீங்கள் வரவேற்பதாகத்தானே அர்த்தம்? .... 7
(ஹரிஜன்—மே 3, 1942

3. ஒன்று தேவை .... 8
(ஹரிஜன்—மே 10, 1942)

4. ஒவ்வொரு பிரிட்டிஷாருக்கும் .... 13
(ஹரிஜன்—மே 17, 1942)

5. குழப்பம் .... 20
(ஹரிஜன்—மே 24, 1942)

6. வெளியேறுவதில் உள்ள சிக்கல்கள் .... 22
(ஹரிஜன்—மே 24, 1942)

7. சில கேள்விகளும் பதிலும் .... 25
(ஹரிஜன்—மே 24, 1942)

8. நட்புரிமையோடு கூடிய ஆலோசனை .... 33
(ஹரிஜன்—மே 31, 1942)

9. தொடர்பே இல்லை .... 36
(ஹரிஜன்—மே 31, 1942)

10. சுதந்திர இந்தியா தான் நன்கு உதவி புரிய முடியும் .... 39
(ஹரிஜன்—ஜூன் 7, 1942)

11. 'முடிவான அபிப்பிராய மன்று' .... 43
(ஹரிஜன்—ஜூன் 7, 1942)

12. முக்கியமான கேள்விகள் .... 46
(ஹரிஜன்—ஜூன் 14, 1942)

13. முக்கியமான ஒரு பேட்டி .... 51
(ஹரிஜன்—ஜூன் 14, 1942)

14. பிணத்தைத் தூர எறிந்து விடுங்கள் .... 64
(ஹரிஜன்—ஜூன் 21, 1942)

பக்கம்

15. வெளியேறுதல் என்பதற்கு விளக்கம் .... 78
(ஹரிஜன்—ஜூன் 28, 1942)

16. வேண்டுமென்றே திரித்துக் கூறல் .... 82
(ஹரிஜன்—ஜூன் 28, 1942)

17. போலி நியாயம் .... 85
(ஹரிஜன்—ஜூலை 5, 1942)

18. ஓ, இந்தத் துருப்புகளா? .... 87
(ஹரிஜன்—ஜூலை 5, 1942)

19. இந்தியாவில் நண்பர்களின் ஆம்புலன்ஸ் யூனிட் .... 91
(ஹரிஜன்—ஜூலை 5, 1942)

20. வார்தாவில் கொடுத்த பேட்டி .... 99
(ஹரிஜன்—ஜூலை 19, 1942)

21. இரண்டு நிமிஷத்தில் நடந்த ஒரு பேட்டி .... 106
(ஹரிஜன்—ஜூலை 19, 1942)

22. என்னைக் குறை கூறுவோருக்கு .... 109
(ஹரிஜன்-ஜூலை 26, 1942)

23. பத்திரிகை நிருபர் மூவருடன் .... 113

அனுபந்தம்

1. காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானம் .... 125
(ஹரிஜன்—ஜூன் 19, 1942)

2. ஜப்பானியர் ஒவ்வொருவருக்கும் .... 131
(ஹரிஜன்—ஜூன் 26, 1942)

# இந்தியாவில் அன்னியப் போர்வீரர்கள்

"இந்தியாவுக்கு என்னதான் நேரிட்டாலும் சரி, அதனைக் கவனியாது, தனது நலத்தையும் இந்தியாவின் நலத்தையும் உத்தேசித்து, ஒழுங்கானபடி, தக்க காலத்தில் இந்தியாவைவிட்டு, பிரிட்டன் வெளியேறிவிடுவதுதான் நல்லதாகும். சமஸ்தானாதிபதிகளுடன் செய்துகொண்டிருக்கிற ஒப்பந்தங்கள், சிறுபான்மையோருக்குச் செய்யவேண்டிய கடமைகள் என்ற பேச்செல்லாம் வெறும் அபத்தம். அவை யாவும் தங்களது நலன்களையும், ஆட்சியையும் பாதுகாத்துக்கொள்ள, பிரிட்டிஷார் சிருஷ்டித்துக் கொண்ட கைச்சரக்குகளே யாகும். உண்மையின் வேகம் நம்மை வந்து தாக்கும்போது, இவை யனைத்தும் மறைவது திண்ணம்."

கேள்விகள் கேட்டு, எத்தனையோ கடிதங்கள் எனக்கு வருகின்றன. அவற்றில் ஒன்று, இந்தியாவில் வந்திறங்கும் அன்னியப் போர்வீரர்களைப்பற்றியதாகும். நம் நாட்டில்வந்திறங்கியிருக்கும் அயல்நாட்டுயுத்தக் கைதிகளுக்கோ பஞ்சம் இல்லை. போதாக்குறைக்கு, அமெரிக்காவிலிருந்தும், அனேகமாக, சீனாவிலிருந்தும்கூடப் போர்வீரர்கள் இங்கு வந்து இறங்கப்போவதாக வேறு சொல்லுகிறார்கள். இத்தகைய போக்கை, மனக்கஷ்டமின்றி என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. கோடிக்கணக்கான இந்திய மக்களிலிருந்து எண்ணற்ற போர்வீரர்களைத் தயார்செய்து கொள்ள முடியாதா? உலகின் ஏனைய மக்களைப் போல, இந்தியர்களுக்குப் போரிடும் ஆற்றல் இல்லையா? அப்படியிருக்கும்போது அன்னியப் போர்வீரர்களை இங்கே இறக்குமதி செய்வானேன்? அமெரிக்காவின் உதவி என்றால் என்ன என்பதை நாம் நன்கு அறிவோம். அந்த உதவியினால் பிரிட்டிஷ் ஆட்சியோடுகூட, அமெரிக்க ஆட்சி ஒருக்கால் நடைபெறாதுபோயினும், அமெரிக்கச் செல்வாக்குக்கு மட்டும் இங்கு குறைவிராது. நேசநாட்டினர் அடையப் போவதாகச் சொல்லிக்கொள்ளும் வெற்றிக்கு, நாம் கொடுக்கும் இந்த விலை அபாரமானதாகும். இந்தியாவைப் பாதுகாப்பதாகச் சொல்லிச் செய்யப்படும் ஏற்பாடுகள் ஒன்றிலாவது, இந்திய சுதந்திரத்தின் சாயையைக்

கூட, நாம் காணமுடியவில்லை. இப்போது நடைபெறும் சகல ஏற்பாடுகளும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளே யாகும். எப்படி எப்படி எல்லாமோ சப்பைக்கட்டுக்கட்டி இதை மறைக்க முயன்றாலும், இந்த உண்மையை அனைவருமே அறிவர். தலைவிதிப்படி நடக்கட்டும் என்று சொல்லி, சிங்கப்பூரை விட்டு வந்ததைப்போல, பிரிட்டிஷார் இந்தியாவையும்விட்டு வெளியேறுவார்களாயின், அதனால், பலாத்காரமற்ற இந்தியாவுக்கு எவ்வித நஷ்டமும் இல்லை. போர் தொடுக்காமல், ஜப்பானியரும் அனேகமாக இந்தியாவைச் சும்மா விட்டுவிடவும் கூடும். இந்தியாவில் உள்ள முக்கியமான கட்சிகள் தங்களிடையே காணப்படும் வேறுபாடுகளை மறந்து, ஒற்றுமைப்பட்டுவிடுமானால்—ஒற்றுமை ஏற்படுவது நிச்சயம்—சீனாவில் அமைதி நிலவ இந்தியா சிறந்த முறையில் உதவக்கூடும். அதுமட்டுமா? உலக முழுவதிலும் ஸ்திரமான அமைதி நிலவ, காலக்கிரமத்தில், இந்தியா முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளவும் கூடும். கட்டாயத்தின் பேரில்தான் பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேறுவார்களாயின், இன்பகரமான இந்த விளைவுகள் ஒருக்கால் ஏற்படாதுபோயினும் போகலாம். தங்கள் பாட்டைத் தாங்களே கவனித்துக்கொள்ளட்டும் என்று கீழைநாட்டினரை விட்டுவிட்டு, பிரிட்டிஷார் மேலைநாட்டில் போர்புரிய முனைந்திருப்பார்களாயின், அது இன்னும்எவ்வளவு பாராட்டத்தக்கதாய் இருந்திருக்கும்? எவ்வளவு வீரமானதாய் இருந்திருக்கும்? தமது ஆதிக்கத்தின்கீழ் உள்ள நாடுகள் அனைத்தையும், பிரிட்டனால் இந்த யுத்த காலத்தில் பாதுகாக்க முடியும் என்று நம்புவதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா? இந்த நாடுகள் யாவும் பிரிட்டனை அமுக்கும் சுமைகளாகவே மாறிவிட்டன. புத்திசாலித்தனமாக இந்தச் சுமையிலிருந்து பிரிட்டன் தன்னை விடுவித்துக்கொள்ளுமாயின் நாஜியரோ, பாஸிஸ்ட்டுகளோ, அல்லது, ஜப்பானியரோ வந்து இந்தியாவை ஆக்கிரமிக்க முடியாது; அடிமைப்படுத்தி ஆளவும் முடியாது. ஆளத்தொடங்கினால், சக்திக்கு மேற்பட்ட ஒரு காரியத்தில் சிக்கிக்கொண்டு, திக்க

முக்காடுவதை அவர்கள் உணர்வர்; பிரிட்டனைக் காட்டிலும் தங்களுக்கு அதிகமான சிரமமிருப்பதையும் காண்பர். அவர்களுடைய கடுமை அதிகப்பட அதிகப்பட, அது அவர்களுடைய கழுத்தையே நெறித்துவிடும். பிரிட்டிஷாரின் ஆட்சிமுறையில் இசிவுத்தன்மை உண்டு. சக்திவாய்ந்த எதிரி இல்லாதவரை, இந்த இசிவுத்தன்மை பிரிட்டனுக்கு அனுகூலமாக இருந்துவந்தது. இன்று, இந்த இசிவுத்தன்மை-கூட பிரிட்டனுக்கு உதவியாக இல்லை. ஆசிய கண்டத்து, ஆப்பிரிக்க கண்டத்து மக்களைப் பிரிட்டிஷார் அடிமைப் படுத்திச் சுரண்டிக்கொண்டிருக்கும் பாபமெல்லாம் ஒருங்கு திரண்டே, இன்று நாஜிஸ வடிவமாக வெளியே கிளம்பியிருக்கிறது என்று, இந்தப் பத்திரிகையில் நான் பலமுறை எழுதியிருக்கிறேன்.

இந்தியாவுக்கு என்ன தான் நேரிட்டாலும் சரி, அதனைக் கவனியாது, தனது நலத்தையும் இந்தியாவின் நலத்தையும் உத்தேசித்து, ஒழுங்கானபடி, தக்க காலத்தில் இந்தியாவை விட்டு, பிரிட்டன் வெளியேறிவிடுவதுதான் நல்லதாகும். சமஸ்தானதிபதிகளுடன் செய்துகொண்டிருக்கிற ஒப்பந்தங்கள், சிறுபான்மையோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்ற பேச்செல்லாம் வெறும் அபத்தம். அவை யாவும் தங்களது நலன்களையும், ஆட்சியையும் பாதுகாத்துக் கொள்ள, பிரிட்டிஷார் சிருஷ்டித்துக்கொண்ட கைச்சரக்குகளே யாகும். உண்மையின் வேகம் நம்மை வந்து தாக்கும் போது, இவை யனைத்தும் மறைந்துவிடுவது திண்ணம். ஆயுதபலத்தை நம்பியிருக்கும்வரை, ஆயுதபலமற்ற இந்தியாவை, ஆயுத பலத்தைக்கொண்டே எதிர்த்துநின்று, சமஸ்தானதிபதிகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். சிறுபான்மையோர் பெரும்பான்மையோர் என்ற கட்டுக் கதைகள் எல்லாம், சுதந்திரம் என்ற உதய சூரியன் முன், பனித்துளிபோல மறைந்தோடிவிடும். சின்னாபின்னப் படுத்திக்கொண்டிருக்கிற பிரிட்டிஷாரின் ஆயுதம் நடுவிலிருந்து மறைந்துவிட்டால், சிறுபான்மை பெரும்பான்மை என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை ; இது உண்மை. பின்னர், கோடிக்கணக்கான இந்தியர்கள் யாவரும் மனித சமு

தாயத்தைச் சேர்ந்த ஒரு தொகுப்பினராய் விளங்குவார்களேயன்றி, அவர்களை வெவ்வேறு வகையினராய் வேறுபடுத்திச் சொல்ல இயலாது. பிரிட்டனின் ஆதிக்கம் வெளியேறிய பிறகு, பிறரால் சிருஷ்டிக்கப்படாத உண்மையான தேசத் தலைவர்கள், தங்களிடையே காணப்படும் சிரமங்களைப் போக்கிக்கொள்ள, கண்ணியமான வழியை மேற்கொள்வார்கள்; அதற்கு வேண்டிய புத்திசாலித்தனம் அவர்களிடம் உண்டு. இதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. ஜப்பானும் ஏனைய வல்லரசுகளும் இந்தியாவின் வழிக்கு வராதென்பதையே இவை குறிக்கின்றன. அவ்விதமின்றி, பிற வல்லரசுகள் படையெடுத்தால், அந்த நெருக்கடியிலும் கூட, இந்தியாவில் உள்ள புராதனமான கட்சிகள் யாவும் ஒன்றுசேர்ந்து, இப்புதிய அபாயத்தை, ஒருமனத்தோடு எதிர்த்துநிற்பதற்குரிய புதிய திட்டமொன்றை வகுத்துக் கொள்ளும். அதற்கு வேண்டிய அறிவுத்திறமை இந்தியக் கட்சிகளுக்கு உண்டு என நான் நம்புகிறேன்.

இந்தவிதமான எண்ணங்கள் என் மனத்தில் இருப்பதால்தான், அன்னியப் போர்வீரர்கள் இந்தியாவில் குவிவதைக் கண்டு மிகவும் வருந்துவதுடன், அதை ஒரு பெருத்த அபாயமாகவும் கருதுகிறேன்; அவநம்பிக்கையும் கொள்கிறேன். க்ஷய ரோகம் உடம்பை அரித்துத் தின்பதைப் போல, தற்போதைய நிலைமைகளும், அவற்றைப் பேணிப் பாதுகாக்க மேற்கொள்ளும் முயற்சியும் இந்திய அரசியல் அங்கங்களை அரித்துத் தின்றுவிடுமென்பதையே காட்டுகின்றன.

# ஜப்பானியரை நீங்கள் வரவேற்பதாகத்தானே அர்த்தம்?

"தன்னைத் தானே கவனித்துக்கொள்ளும்படி இந்தியாவை விட்டுவிட்டு, பிரிட்டிஷார் புத்திசாலித்தனமாக இங்கிருந்து வெளியேறிவிடுவார்களாயின், தங்கள் திட்டங்களைப்பற்றிப் புனராலோசனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஜப்பானியர்களுக்கு ஏற்பட்டே தீரும். பிரிட்டிஷார் செய்கிற புதுமையான இந்த ஒரு காரியமே, ஜப்பானியரை மலைக்கச் செய்துவிடும்."

கேள்வி: ஆட்சி புரிந்துகொண்டிருக்கும் பிரிட்டிஷாரை வெளியேறும்படி கூறுவது, ஜப்பானியரை இந்தியாவை வந்து தாக்கும்படி வரவேற்பதாகத்தானே பொருள்படும்? அப்படிக் கூருது, தாங்கள் தைரியத்தை வரவேற்று இருந்தால், அது எவ்வளவோ நன்றாய் இருந்திருக்குமே?

பதில்: நான் ஜப்பானியரை வரவேற்கவில்லை. பிரிட்டிஷார் இங்கே இருப்பதுதான், ஜப்பானியரை இந்தியாவை வந்து தாக்கும்படி தூண்டுகிறது என்று நான் மனமார உணருகிறேன். தன்னைத் தானே கவனித்துக்கொள்ளும்படி இந்தியாவை விட்டுவிட்டு, பிரிட்டிஷார் புத்திசாலித்தனமாக இங்கிருந்து வெளியேறிவிடுவார்களாயின், தங்கள் திட்டங்களைப்பற்றிப் புனராலோசனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஜப்பானியர்களுக்கு ஏற்பட்டே தீரும். பிரிட்டிஷார் செய்கிற புதுமையான இந்த ஒரு காரியமே, ஜப்பானியரை மலைக்கச் செய்துவிடும்; பிரிட்டிஷார்மீதுள்ள வெறுப்பையும் அது போக்கிவிடும். இந்தியர்களின் வாழ்வையே பாழ்படுத்தி, ஆதிக்கம் செலுத்திவரும் மாறுபாடான நிலைமைகளைப் போக்கச் சரியான வழி காண்பதும் சாத்தியமாகும். எனக்குத் தெரிந்தவரை, இந்தியர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாமலே ஜப்பானியர் தங்கள் போக்கில் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. நான் கூறும் ஆலோசனைகளை அவர்கள் ஏற்கப் போவதுமில்லை. ஆயினும், எனது ஆலோசனைப்படி பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வாபஸ் ஆவார்களேயானால், அந்தச் செய்கை ஜப்பானியரை அப்படியே திகைப்படையச் செய்துவிடும்.

# ஒன்று தேவை

*“பிரிட்டிஷார் இந்தியாவில் இருப்பதுதான் ஜப்பானியரை இந்தியாமீது படையெடுக்கும்படி தூண்டுகிறது. பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வாபஸ் ஆகிவிடுவார்களானால், ஜப்பானியரின் ஆசை யடங்கிவிடும். அப்படியின்றி, ஜப்பானியர்கள் படையெடுப்பதாகவே வைத்துக்கொள்வோம், அப்போது, அந்தப் படையெடுப்பை, அடிமை இந்தியாவைவிட, சுதந்திரம்பெற்ற இந்தியா சிறந்த முறையில் சமாளித்துக்கொள்ளும்; ஆக்கிரமிப்பவர்களுடன் இந்தியா பரிபூரணமான ஒத்துழையாமையை - தீவிரமான, சர்வ வியாபகமான ஒரு ஒத்துழையாமையை மேற்கொள்ளும்.”*

“எங்களில் இந்தியாவையும் இந்தியர்களையும் நேசிப்பவர்கள் உண்டு. நாங்கள் உள்ளன்போடு இந்திய மக்களுக்குத் தொண்டு செய்துவந் திருக்கிறோம். துன்பத்தால் மனமே இடிந்துபோயிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், எங்கள்மீது வெறுப்பு உணர்ச்சி அதிகமாக வளர்ந்துவருவது, எல்லையற்ற துயரத்தை அளிப்பதாய் இருக்கிறது. இந்தியாவினிடம் இதுவரை நாங்கள் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை என்பது உண்மைதான்; இப்போதும் நடந்துகொள்ளாமல் இருந்துவருகிறோம் என்பதும் உண்மைதான். இதை நான் ஒப்புக்கொள்கிறேன். நாங்கள் தவறு செய்துவிட்டோம்; செய்த தவற்றைச் சரிப்படுத்த மற்றொரு தவறு செய்வது நியாயமாகுமா? அதனால் நியாயம் பிறந்து விடுமா? “பகைவனாயிருந்தாலும்கூட, கொடிய துன்பத்தில் அகப்பட்டு விழித்துக் கொண்டிருப்பவனுக்கு ஆதரவு காட்டி வசதி, செய்து கொடுப்பது அவசியமாகும். அன்னிய ஆக்கிரமிப்பையோ, அல்லது, ஆதிக்கத்தையோ எதிர்த்துநிற்கும் அளவுக்கு உங்கள் நாட்டினரிடம் போதிய அஹிம்ஸா பலம் இல்லை என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். அறிந்து இருந்தும், தாங்கள் எங்களை இந்த நாட்டைவிட்டு வெளியேறும்படி சொல்லுகிறீர்கள். இப்படிச்சொல்வது, தங்கள் நாட்டினரை ஜப்பானியரிடம் மண்டியிட்டு வணங்க அழைப்பது ஆகாதா? அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கவல்ல போதிய அஹிம்ஸா பலம், உங்களுக்கு இருந்திருக்குமாயின், எங்களுடைய ஆட்சி நிலைத்துநிற்க ஹேதுவில்லாமலே போயிருக்குமே! சென்ற காலத்தில் நாங்கள் செய்த அநீதிகளை எல்லாம் மன்னித்து மறந்துவிடுங்கள். புதிய தலைமுறையைச் சேர்ந்த ஆங்கில ஆடவருக்கும் பெண்டிருக்கும் இனிமேல் ஏகாதிபத்திய உணர்ச்சி துளிகூட இருக்கமுடியாது.

அப்படிப்பட்டவர்களின் நல்லெண்ணத்தைத் தாங்கள் நம்பலாகாதா? காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளே, தங்களைத் தவிர வேறு யாருக்காவது அஹிம்ஸையில் மனப்பூர்வமான நம்பிக்கை யிருக்கிறதா? தங்களுடைய போக்கு ஒன்றேசரியான போக்கு; தாங்கள் ஒருவர் தான் பிரிட்டனுடைய உண்மையான நண்பர்.''

மனத்தை உருக்கத்தக்கவிதமாக ஓர் ஆங்கிலேயர் எழுதியுள்ள கடிதத்தின் சுருக்கம் இது. யுத்தப் பிரகடனம் செய்த பிறகு, முதல் முறையாக நான் லின்லித்கோ பிரபுவைக் கண்டுபேசினேன். அதன் பிறகு, என் மனத்தில் உதித்த எண்ணங்களையெல்லாம் அப்படியே லின்லித்கோ பிரபுவுக்குக் கடிதமூலம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் கண்டிருக்கும் விஷயங்களைத் தவிர வேறொன்றும் புதிதாகச் சொல்வதற்கில்லை. அக்கடிதத்தில் நான் சொல்லியுள்ளவற்றில் வாபஸ் பெறத்தக்கது எதுவு மில்லை; வருந்தத்தக்கது மில்லை. அன்றுபோலவே, இன்றும் நான் பிரிட்டிஷாருக்கு நண்பன்தான். அவர்கள்மீது எனக்குத் துளிகூட வெறுப்பில்லை. ஆனால், அவர்களிடம் காணப்படும் சிறந்த குணங்களை எங்ஙனம் சிலாகிக்கிறேனோ, அங்ஙனமே அவர்களிடம் காணப்படும் குறைபாடுகளைக் கண்டிப்பதற்கும் நான் தயங்குவதில்லை.

பெரும்பாலும் பொதுஜனங்களுக்குப் பிரிட்டிஷார்மீது வெறுப்பு இருக்கிறது; நிகழ்ச்சிக்கு ஏற்றவாறு வெறுப்பு அதிகரித்துக்கொண்டும் போகிறது. இதை நான் மறுக்கவில்லை. ஆனால், தேசத்தை மேற்கொள்ள செய்திருக்கும் நான் வழியோ, வெறுப்பை அடக்கி வைத்திருக்கிறது; ஓரளவுக்கு அந்த வெறுப்பு அடியோடு இல்லாமலும் செய்திருக்கிறது.

எனவே, யுத்தம் முடியுமுன்பே, யுத்தம் நடந்துகொண்டிருக்கும் இந்தத் தருணத்திலேயே பிரிட்டிஷாரும் இந்தியரும் தனித்தனியே பிரிய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இதனால் இருவரிடையிலுமே மன அமைதி நிலவும். அப்படிப் பிரிந்து கொள்வதுதான், அது ஒன்றுதான் இருவருக்கும் உலக முழுவதையும்பாதுகாக்கும் அரணாய் நின்று உதவும். வேற்றுமை மனப்பான்மை வரவர அதிகரித்துக்

கொண்டே போகிறது. இதை நான் கண்கூடாகக்காண்கிறேன். தமது நலன், பாதுகாப்பு ஆகிய இரு நோக்கங்களுக்குமாகவே பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவில் ஒவ்வொரு காரியத்தையும் செய்துவருகிறது என்று மக்கள் எண்ணுகிறார்கள். இது முற்றிலும் உண்மை. இருவருக்கும் பொதுவான கூட்டுநலன்கள் யாதும் இருப்பதாகத் தெரியவில்லை. மிகத் தீவிரமான ஒரு விஷயத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டு பார்ப்போம். ஜப்பானியர்கள்மீது பிரிட்டிஷார் கொள்ளும் வெற்றி இந்திய வெற்றியாக ஆக முடியுமா? இது சமீப நிகழ்ச்சிக்குரிய காரிய மன்று. அப்படியிருந்தும் இதற்கிடையில், அயல்நாட்டுப் போர்வீரர்கள் இங்கு வந்து குவிந்தவண்ணம் இருக்கிறார்கள்; நாடுகடந்து நாடுசெல்லும் ஐரோப்பியர்களையும் இந்தியர்களையும் வேண்டுமென்றே, பாரபட்சமாக அரசாங்கம் நடத்துகிறது. துருப்புக்களோ வெளிப்படையாகவே மிகவும் ஒழுங்கீனமாக நடந்துகொள்கின்றன. இவற்றை எல்லாம் பார்க்கும் போது, பிரிட்டிஷாரின் நோக்கமும் பிரகடனங்களும் உண்மையானவைதாமா என்பதில் அவநம்பிக்கை பிறக்கிறது. தங்களுடைய பரம்பரையான இயல்பை, பிரிட்டிஷாரால் திடீரென்று மாற்றிக்கொள்ள முடியாது.மேம்பட்ட இனத்தார் என்ற எண்ணத்தை ஆங்கிலேயர் ஒரு குறைபாடாகக் கருதவில்லை, அதை ஒரு தர்மமாகவே போற்றிப் பேணி வருகிறார்கள். இந்தக் கொள்கையை இந்தியாவில் மட்டும் பிரிட்டிஷார் அனுஷ்டிக்கவில்லை; ஆப்பிரிக்கா, பர்மா, சிலோன் முதலிய இடங்களிலும் இதை அனுஷ்டிக்கிறார்கள்.தங்கள் இனமே உயர்ந்த இனம் என்று திரும்பத் திரும்ப அழுத்தமாகச் சொல்லிக்கொண்டிராவிட்டால், இந்த நாடுகளை யெல்லாம் தங்கள் ஆதிக்கத்தின்கீழ்,பிரிட்டிஷாரால் க்ஷண நேரம்கூட வைத்துக்கொள்ள முடியாது என்பது திண்ணம்.

இந்தக் கடுமையான நோய்க்கு கடுமையான மருந்து கொடுத்தாகவேண்டும். ஐரோப்பாவுக்கு வெளியே தங்கள் ஆதிக்கத்தின்கீழுள்ள நாடுகளையெல்லாம் விட்டுவிட்டு, உண்மையான எண்ணத்துடன் நேரிய முறையில் பிரிட்டிஷார்

வாபஸ் ஆகவேண்டும். அல்லது, இந்தியாவிலிருந்தாவது உடனடியாகவும் பரிபூர்ணமாகவும் ஒழுங்காகவும் வாபஸ் ஆகவேண்டும். இதுதான் நான் சொல்லியுள்ள மருந்து. பிரிட்டிஷ் மக்கள் செய்துள்ள, செய்யப்போகிற காரியங்கள் யாவற்றிலும் இதுதான் மிகமிகத் துணிச்சலானதும் தூய்மையானதும் ஆகும். இதனுல் நேசநாடுகளின் நோக்கம், முற்றிலும் நேர்மையான ஒரு அடிப்படையுடன் கூடியதாக உடனே மாறிவிடும்; போரில் ஈடுபட்ட நாடுகளுக் கிடையில் கண்ணியமான சமாதானம் ஏற்படவும் இது வழிகோலும். ஏகாதிபத்தியம் அடியோடு மறைந்துவிட்டால், பாஸிஸம் நாஸிஸம் ஆகியவை தாமாகவே மறைந்துவிடுவது நிச்சயம். எனது யோசனையை ஏற்று அதன்படி நடந்தால், அது ஏகாதிபத்தியத்தின் குழந்தைகளான, நாஸிஸம் பாஸிஸத்தின் வேகத்தை நிச்சயம் குறைத்துவிடும்.

கடிதம் எழுதியிருப்பவர் விரும்புவதுபோல தேசிய இந்தியா உதவிசெய்தபோதிலும், அதனுல் பிரிட்டிஷாரின் துயரம் நீங்கிவிடாது. பிரிட்டனுக்கு உதவி செய்யும் படியாக எவ்வளவுதான் உற்சாகம் ஊட்டியபோதிலும், அதற்குத் தகுந்த நிலேயில் இந்தியா இல்லே. எனவே, தேசிய இந்தியாவை உற்சாகப்படுத்துவதால் மட்டும் என்ன பிரயோஜனம்? சூரியன் இல்லாத இடத்தில் எப்படி வெய்யிலின் அருமையை அனுபவிக்க முடியாததோ, அதே போல, மெய்யான சுதந்திர அனுபவமின்றி, இந்தியாவால் சுதந்திர இன்பத்தையும் நுகர முடியாது. பரிபூர்ண சுதந்திர இந்தியாவில் அமைதியோடும் மனக்கலக்கமின்றியும் வாழ முடியாது என்று, நம்மில் அனேகர் எண்ணுகிருர்கள். சுதந்திரம் அடைந்த ஆரம்பத்தில், சுதந்திர இன்பத்தைத் துய்ப்பதற்குமுன், திடுக்கிடச்செய்யும் சம்பவங்கள் பல நிகழலாம். அப்படிப்பட்ட மன அதிர்ச்சி அவசியமே. சக்தி மிக்க சமுதாயத்தைக்கொண்ட நாடு இந்தியா. எனவே, மனத்திகில் ஏற்படும்போது, இந்தியா எந்த நிலேயில் நடந்துகொள்ளும், அதனுல் ஏற்படும் பலாபலன்கள் எத்தகையனவாய் இருக்கும் என்பதை, இப்போது யாராலுமே சொல்லமுடியாது.

ஆகையால், அந்த மேன்மையான செயல் நடைபெற எனது முழு வலிமையுடனும் நான் ஈடுபடவேண்டு மென்பதை உணருகிறேன். இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் இழைத்திருக்கும் தீமைகளைக் கடிதம் எழுதியிருப்பவர் ஒப்புக்கொள்கிறார். பிரிட்டிஷார் வெற்றி யடைவதற்கு, இந்தத் தீமைகளை அகற்றுவதே முதல் நிபந்தனையாகும் என்பதை நான் அவருக்குக் குறிப்பிட விரும்புகிறேன். வெற்றிக்குமுன்னர் செய்தாக வேண்டிய காரியம் இது. பிறகு பார்த்துக்கொள்ளலாமே என்று விட்டுவைக்கத்தக்க தல்ல. பிரிட்டிஷார் இந்தியாவில் இருப்பதுதான் ஜப்பானியரை இந்தியாமீது படையெடுக்கும்படி தூண்டுகிறது. பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வாபஸ் ஆகிவிடுவார்களானால், ஜப்பானியரின் ஆசை யடங்கிவிடும். அப்படியின்றி, ஜப்பானியர்கள் படையெடுப்பதாகவே வைத்துக்கொள்வோம். அப்போது, அந்தப் படையெடுப்பை, அடிமை இந்தியாவைவிட, சுதந்திரம் பெற்ற இந்தியா சிறந்த முறையில் சமாளித்துக்கொள்ளும்; ஆக்கிரமிப்பவர்களுடன் இந்தியா பரிபூரண ஒத்துழையாமையை - தீவிரமான, சர்வ வியாபகமான ஒரு ஒத்துழையாமை - மேற்கொள்ளும்.

# ஒவ்வொரு பிரிட்டிஷாருக்கும்

**"ஆசியா ஆப்பிரிக்கா கண்டங்களில் தமக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லும் நாடுகளையெல்லாம் விட்டுவிட்டு, பிரிட்டிஷார் இந்த நேரத்திலேயே, இப்பொழுதே வெளியேற வேணுமென்றும், அல்லாதபட்சம் இந்தியாவைவிட்டாவது வெளியேறும்படியாகவும், பிரிட்டிஷாரை வேண்டிக்கொள்கிறேன். இந்த வேண்டுகோளை ஒவ்வொரு பிரிட்டிஷாரும் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். உலக க்ஷேமத்திற்கும், நாஸிஸம் பாஸிஸம் ஆகிய இரண்டையும் அழிப்பதற்கும், பிரிட்டிஷார் வாபஸாக வேண்டியது அத்தியாவசியமாகும். நாஸிஸம் பாஸிஸம் என்று நான் சொல்வதில் ஜப்பானின் 'இஸமும்' அடங்கும்."**

தென் ஆப்பிரிக்காவில் நான் பொதுவாழ்வில் ஈடுபடத் தொடங்கிய அந்தக் காலத்தில் "தென் ஆப்பிரிக்காவில் வாழும் ஒவ்வொரு பிரிட்டிஷாருக்கும்" என்று ஒரு பகிரங்கக் கடிதம் எழுதி வெளியிட்டேன். அதனால், ஓரளவு பயனும் கிடைத்தது. உலக சரித்திரத்தில் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ள இத் தருணத்திலும், அதே முறையை மீண்டும் நான் பின்பற்ற விரும்புகிறேன். இப்போது நான் விடுக்கும் இந்த வேண்டுகோள் உலகத்தில் வாழும் ஒவ்வொரு பிரிட்டிஷாருக்கும் ஆகும். தமது நாட்டில் செல்வாக்கு இல்லாதவராய் இருப்பினும் சரியே, அதைப்பற்றி அக்கறையில்லை. அஹிம்ஸையின் சந்நிதானத்தில் ஒவ்வொரு உண்மையான சிந்தனைக்கும் மதிப்புண்டு; ஒவ்வொரு உண்மையான சொல்லுக்கும் மதிப்புண்டு. "பொது ஜன வாக்கு, தெய்வ வாக்கு" என்பது வறட்டுவேதாந்த மன்று. மனிதவர்க்கத்தின் அனுபவத்தினால் விளைந்து முதிர்ந்த உண்மையான பழமொழியாகும் இது. ஆனால், இந்தப் பழமொழியில் ஒரு சிறப்பியல்பு பொதிந்து கிடக்கிறது. இப்பழமொழி குறிக்கும் உண்மையோடு அஹிம்ஸைக்கு மிக நெருங்கிய தொடர்புண்டு. வெளியே தெரியாதவாறு சிறிது காலத்திற்கு வேண்டுமானால், பொதுஜன வாக்கைப் பலாத்காரத்தால் மறைத்துவைக்கலாம். அஹிம்ஸையால் நம்பிக்கை வைத்து அத்துறையிலேயே நின்று உழைக்கும்

வரை வாய்விட்டுச்சொன்னாலும் சரி, அல்லது சொல்லாவிட்டாலும் சரி, உண்மையான சிந்தனையாக உள்ள எதையும் நான் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

ஆசியா ஆப்பிரிக்கா கண்டங்களில் தமக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லும் நாடுகளையெல்லாம் விட்டு விட்டு, பிரிட்டிஷார் இந்த நேரத்திலேயே, இப்பொழுதே, வெளியேற வேணுமென்றும், அல்லாத பட்சம் இந்தியாவை விட்டாவது வெளியேறும்படியாகவும் பிரிட்டிஷாரை நான், வேண்டிக்கொள்கிறேன். இந்த வேண்டுகோளை ஒவ்வொரு பிரிட்டிஷாரும் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள் கிறேன். உலக க்ஷேமத்திற்கும், நாஸிஸம் பாஸிஸம் ஆகிய இரண்டையும் அழிப்பதற்கும், பிரிட்டிஷார் வாபஸாக வேண்டியது அத்தியாவசிய மாகும். நாஸிஸம், பாஸிஸம் என்று நான் சொல்லுவதில் ஜப்பானின் "இஸமும்" அடங்கும். எனது இந்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அச்சு நாடுகளின் ராணுவத் திட்டங்கள் அனைத்துமே நிலைகுலைந்துவிடும். கிரேட் பிரிட்டனின் ராணுவ ஆலோசனையாளர்கள்கூட, இதனால் திகைப்படைந்துவிடுவார்கள்.

நான் சொல்வது பிரிட்டிஷாரின் செவியில் ஏறுமேயானல், பிரிட்டிஷாருக்குத்தான் அதனல் கொள்ளை கொள்ளையான லாபமுண்டு. தினந்தோறும் பிரிட்டனுக்கு யுத்தச் செலவு அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பிரிட்டிஷாருக்குள்ள சொத்துச் சுகங்களின் மதிப்பு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகிறது. யுத்தச் செலவோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இந்தச் சொத்துச் சுகங்களின் மதிப்பு ஒன்றுமே யில்லை என்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன். தருமக் கண் கொண்டு பார்த்தால், இதனல் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் உலகத்திற்கும் லாபமே யன்றி நஷ்டமில்லை.

ஆசியாவை விட்டு ஆப்பிரிக்காவைவிட்டு வெளியேறும்படி நான் பிரிட்டிஷாரைக் கேட்டுக்கொண்டாலும், இந்தியாவைப் பொறுத்தவரை, நிலைமை என்ன என்பதை ஒரு-சிறிது சிந்தித்துப்பார்ப்போம். இந்தியாவும் யுத்தத்தில்

பங்கெடுத்துக்கொண் டிருப்பதாக, பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் வெகு தடபுடலாகப் பறைசாற்றி வருகிறார்கள். யுத்தப் பிரகடனம் செய்யும்போது, சம்பிரதாயத்திற்காக வாவது, பிரிட்டிஷார் இந்தியாவைக் கலந்து ஆலோசித் தார்களா? அதற்கு அவசியமா என்ன? இந்தியா, இன்று இந்தியருக்குச் சொந்தமாய் இல்லை; பிரிட்டிஷாருக்குச் சொந்தமாய் இருந்துவருகிறது. பிரிட்டிஷாரின் உடமை என்றே இந்தியாவைக் குறிப்பிடுகிறார்கள். இந்திய விஷயத் தில் பிரிட்டிஷார் தங்கள் இஷ்டப்படியே நடந்துவருகிறார் கள். சகல யுத்தங்களையும் எதிர்ப்பவனை என்னிடமிருந்து கூட, பல வழிகளிலும் யுத்தத்திற்காக வரி வசூலித்துவிடு கிறார்கள். நான் எழுதுகிற ஒவ்வொரு கடிதத்திற்கும் இரண்டு தம்படிகள் அதிகம் கொடுக்கிறேன்; ஒவ்வொரு கார்டுக்கும் ஒரு தம்படி அதிகம் கொடுக்கிறேன்; தந்திக்கு இரண்டணு அதிகம் கொடுக்கிறேன். இப்படிப் பலவிதங் களில் என்னிடமிருந்து பணம் வசூலித்து விடுகிறார்கள். மனத்தைப் புண்படுத்தக்கூடிய எவ்வளவோ விஷயங்களில் இது ஒரு சிறு பகுதியே யாகும். பிரிட்டிஷாருக்குள்ள தந்தி ரத்தையே இது புலப்படுத்துகிறது. மக்கள் தாமாகவே வலிய முன் வந்து கொடுக்கும் தொகை என்று தவறான பெயரிட்டு அழைக்கிறார்களே, அதைத் தவிர்த்து, யுத்தத் திற்கு இந்தியா எவ்வளவு கொடுத்து உதவி இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுப்பார்த்தால், அந்தப் புள்ளி விபரம் நம்மை அப்படியே தூக்கிவாரி யடித்துவிடும். நாடுபிடித்த வர்களுக்குக் கொடுக்கும் தொகையை, தாமே வலிய முன் வந்து கொடுக்கும் தொகை என்று சொல்வது சரியில்லை. நாட்டைப் பிடித்தாலும் பிரிட்டன் எப்படி எல்லாம் வேலை செய்கிறது, பாருங்கள்! பிரிட்டன் ஆசனத்தில் சரியாக அமர்ந்துகொண்டுவிட்டான். தமது அபிப்பிராயத்தை அறிவிக்க, பிரிட்டன் உதட்டை மெல்ல அசைக்கவேண்டி யதுதான் தாமதம்; உடனே இந்தியாவில் எதிர்ப்புகள் கிளம்பிவிடுகின்றன. நான் மிகைப்படுத்தி சொல்லவில்லை. நாடுபிடித்த உரிமையாலும் ராணுவ பலத்தாலுமே, இந்தி யாவைப் பிரிட்டன் ஆளுகிறது. எனவே, இந்தியாவுக்கும்

பிரிட்டனுக்கு மிடையில் ஓயாதபடி யுத்தம் நடைபெற்றுக் கொண்டு இருப்பதாகவே சொல்லலாம். பிரிட்டனால் நடத்தப்படுகிற இந்த யுத்தத்தில், பலவந்தமாகத் திணிக்கப் பட்டுள்ள இந்தியா அடையும் லாபம் என்னவோ தெரிய வில்லை இந்தியப் போர்வீரர்கள் காட்டும் தீரமெல்லாம் இந்தியாவுக்கு எத்தகைய லாபத்தையும் தேடிக்கொடுக் கவில்லை!

ஜப்பானியர் இந்தியாவுக்கு வரப்போகிறார்கள் வரப் போகிறார்கள் என்று பயமுறுத்திக்கொண்டே, இந்தியா வில், வீடுகளனைத்தையும் பிரிட்டிஷ் துருப்புகள் தங்கள் வசம் ஆக்கிக்கொண்டுவிட்டன. இந்தத் துருப்புகளில் இந்தியர்களும் இருக்கிறார்கள்; இந்தியர் அல்லாதவர்களும் இருக்கிறார்கள். வீட்டில் வசிப்பவர்களை நிர்த்தாட்சண் ணியமாய் வெளியே தள்ளிவிடுகிறார்கள். தங்கள் சாமான் களைத் தூக்கிக்கொண்டு இவர்கள் வேறு இடம் தேடிப் போகவேண்டி வருகிறது. வீடுகளைக் காலிசெய்வதற்காக ஏதோ சொற்பத் தொகை செலவுக்குக் கொடுக்கிறார்கள், இந்தத் தொகை ஒரு சிறு செலவுக்குகூடப் போதவில்லை. தவிர, இவர்களுடைய தொழிலும் போய்விடுகிறது. இந்தச் சிறிய தொகையைக் கொண்டு இவர்கள் தங்கள் வீடுகளைச் சொந்தமாய்க் கட்டிக்கொள்ளவும் வேண்டி யிருக்கிறது. வயிற்றுப் பிழைப்புக்காகப் பல இடம் அலையவேண்டியு மிருக்கிறது. இப்படி வெளியேறுபவர்கள், தேசபக்தி மேலிட்டதன் காரணமாய்த் தங்கள் வீட்டைவிட்டு வெளி யேறவில்லை. இந்த நிகழ்ச்சியைப்பற்றிச் சில தினங்களுக்கு முன் என்னிடம் சொன்னார்கள். சொத்தைக் கைவிட்டு வந்த மக்கள் இந்த நிலையை வேறு வழியில்லாதபடியால் சகித்துக்கொள்ளத்தான் வேண்டுமென்று அப்போது இந் தப் பத்திரிகையில் நான் எழுதினேன். என்னுடனிருந்து தொண்டு செய்கிறவர்கள் நான் சொல்லியதை ஏற்கவில்லை; மேற்சொன்னவாறு வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட மக்களைக் கண்டுபேசி அவர்களுக்கு நானேயாவது, மற்ற வர்களைக் கொண்டாவது தேறுதல் கூறும்படி கேட்டுக் கொண்டார்கள். தேறுதல் கூறுவதென்பது முடியாத

காரியந்தான். இப்படி அவர்கள் சொன்னது நியாயமே. பரிதாபகரமான இந்த மக்களை, மேற்கூறிய மாதிரி வெளியேற்றினர்களே, இந்தவிதமாக ஒருபோதும் நடத்தியிருக்கக்கூடாது. வீட்டைக் காலிசெய்யும்படி சொல்லியபோதே, வசிக்கத் தகுந்த வேறு இடம் இவர்களுக்கு ஏற்பாடுசெய்து கொடுத்திருக்க வேண்டும்.

கிழக்கு வங்காளத்தில் வசிப்பவர்களை, ஏறக்குறைய நிலத்திலும் நீரிலுமாக வசிப்பவர்கள் என்று சொல்லிவிடலாம். ஒரு பகுதி நிலத்திலும் ஒரு பகுதி ஆற்று நீரிலுமே அவர்களது வாழ்க்கை நடைபெறுகிறது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போக, அவர்கள் சிறிய படகுகளை உபயோகிப்ப துண்டு. இந்தப் படகுகளை ஜப்பானியர் உபயோகித்துக்கொள்வார்களோ என்று பயந்து, இவற்றைத் தங்களிடம் ஒப்படைத்துவிடும்படி அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கிறார்கள். படகை விட்டுப்பிரிவ தென்றால், ஒரு வங்காளிக்குத் தன் உயிரையே விட்டுப்பிரிவதாகும். எனவே, யாராவது தன் படகைப் பறித்துக்கொள்ள முயன்றால், அவர்களைத் தன் எதிரி என்றே வங்காளி கருதுகிறான்.

கிரேட் பிரிட்டன் இந்த யுத்தத்தில் வெற்றிபெற வேண்டியிருக்கிறது. சரி, அதற்காக இந்தியாவை இப்படியா கசக்கிப்பிழிய வேண்டும்?

துயரம் நிறைந்த இந்தக் கதையில் நான் இன்னும் சிறிது சொல்ல விரும்புகிறேன். இந்தியரின் வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள பொய்ம்மை அவர்களை மூச்சுத் திணறும்படி செய்துவருகிறது. நீங்கள் சந்திக்கிற ஒவ்வொரு இந்தியன் உள்ளத்திலும் அதிருப்தி பொங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், அதை அவன் வெளிப்படையாகக் காட்டிக்கொள்வதில்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர்களில், உயர்ந்தவர்முதல் தாழ்ந்தவர்வரை இந்த அதிருப்தி பொங்கிக்கொண்டிருக்கிறது. இவ்வதிருப்தி இல்லாதவரே இல்லை. வெறும் வதந்தியை நம்பி நான் சொல்வதாக எண்ண வேண்டாம். பிரிட்டிஷ் அதிகாரிகள் பலருக்கு இப்படி அதிருப்தி இருப்பது தெரியும். தெரிந்தபோதிலும், பிரிட்டிஷ் அதிகாரிகள் எப்படியோ இப்படி அதிருப்தி கொண்

டுள்ளவர்களிடமிருந்து வேலைவாங்கும் தொழிலில் மிக்க தேர்ச்சி பெற்றுவிட்டார்கள். எங்கும் வியாபித்துள்ள இந்த அவநம்பிக்கையும் பொய்ம்மையும் வாழ்க்கையை நன்மையற்றதாய்ச் செய்துவிடுகின்றன. தம் ஆத்ம பலம் அனைத்தையும் உபயோகித்து இதை எதிர்த்துநின்றால்-தான் ஏதேனும் நன்மை விளையக்கூடும்.

நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படாதிருக்கலாம்; இதைப் பலர் மறுக்கவும் மறுக்கலாம். என்னுடைய வாதம் இந்த மறுப்புக்களையெல்லாம் நிச்சயம் கடந்து நிற்கவல்லது.

எதை உண்மை யென்றும், பூரணமான உண்மை யென்றும், பொய்ம்மை கலவாத உண்மை யென்றும் கருதுகிறேனோ, அது வொன்றையேதான் நான் விளக்கிக் கூறியிருக்கிறேன்.

எனது சிந்தனைகளை நான் இப்படி வாய்விட்டுப் பேசியிருப்பதை நமது மக்கள் அங்கீகரித்தாலும் அங்கீகரிக்கலாம்; அல்லது, மறுத்து ஒதுக்கினாலும் ஒதுக்கிவிடலாம். நான் யாரையும் கலந்து ஆலோசிக்கவில்லை. எனது மௌன தினத் தன்று இந்த வேண்டுகோளை எழுதுகிறேன். இப்போது பிரிட்டிஷாருடைய செயலில் மட்டுமே நான் எனது கவனத்தைச் செலுத்திவருகிறேன். அடிமைகளை வைத்திருப்பது கூடாதென்று கருதி, அமெரிக்காவில் அடிமை முறையை ஒழித்தபோது, அனேக அடிமைகள் அதற்கு ஆட்சேபித்தார்கள்; சிலர் கண்ணீர்விட்டுக் கதறினார்கள். ஆயினும், ஆட்சேபத்தையும் அழுகையையும் பொருட்படுத்தாமல், அடிமை முறையைச் சட்டரீதியாக அங்கு ஒழித்துவிட்டார்கள். ஆனால், அமெரிக்காவில் வட பகுதினருக்கும் தென் பகுதினருக்கு மிடையில் கோரமான போர் உண்டாகி, அதன் பயனாகத்தான் அடிமை முறை அங்கு ஒழிக்கப்பட்டது. ஆகவே, முன்பு இருந்ததைவிட நீக்ரோவர்களின் நிலைமை இப்போது வெகுவாக அபிவிருத்தி யடைந்திருந்தபோதிலும், உயர்ந்த வகுப்பாரிடையே சாதிப் பிரஷ்டம் ஆனவன் ஒப்பத்தான் நீக்ரோவனவன் இன்னும் அங்கே இருந்துவருகிறான். இதைவிட

இன்னும் மேலான மனநிலை ஏற்பட வேண்டுமென்று நான் வேண்டுகிறேன். இயற்கைக்கு மாருகவுள்ள, இப்போதிருக்கிற ஆதிக்கமானது ரத்தம் சிந்தாத முறையில் ஒழிய வேண்டுமென்றும், ரத்தம் சிந்தாத முறையில் ஒரு புதுயுகம் பிறக்க வேண்டுமென்றும் நான் வேண்டிக்கொள்கிறேன். இதைக் கேட்டு நம்மவரிலே சிலர் ஆட்சேபிக்கலாம்; சிலர் அழவும் செய்யலாம்; இதைப் பொருட்படுத்தலாகாது.

# குழப்பம்

"இந்தியாவுக்கு பிரிட்டிஷ் மக்களிடம் பகைமை யில்லை. பிரிட்டிஷ்காரர்களில் நண்பர்கள் எனக்கு நூற்றுக் கணக்கில் இருக்கிறார்கள். ஆண்ட்ரூஸ் ஒருவருடைய நட்பே பிரிட்டிஷ் மக்களுடன் என்னைப் பிணிப்பதற்குப் போதுமானது. எனினும், இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சியானது எந்த உருவத்திலும், எந்த முறையிலும் இருத்தலாகாது என்ற உறுதியான ஒரே முடிவுக்கு வந்திருந்தோம்."

பிரிட்டிஷாரை வெளியேறும்படி நான் சொல்வதைக் கேட்டு, சிலர் குழப்பம் அடைந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவிடத்திலும் இந்திய மக்களிடத்திலும் தமக்கு மிக்க பற்றுதல் இருப்பதாகவும், அது காரணமாக, தாம் இந்தியாவைவிட்டு மனப்பூர்வமாய் வெளியேற விரும்பவில்லையென்றும் பிரிட்டிஷா ரொருவர் எழுதுகிறார். எனது அஹிம்ஸை முறை அவருக்குப் பிடித்திருக்கிறது. தனிப்பட்ட பிரிட்டிஷ்காரர், அதிகாரம் செலுத்துகிற பிரிட்டிஷ்காரர் ஆகிய இருவரையும் இவர் ஒன்றாக எண்ணிக் குழப்பமடைந்துவிட்டார் என்பது தெளிவு. இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் மக்களிடம் பகைமை யில்லை. பிரிட்டிஷ்காரர்களில் நண்பர்கள் எனக்கு நூற்றுக் கணக்கில் இருக்கிறார்கள். ஆண்ட்ரூஸ் ஒருவருடைய நட்பே பிரிட்டிஷ் மக்களுடன் என்னைப் பிணிப்பதற்குப் போதுமானது. எனினும், இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சியானது எந்த உருவத்திலும், எந்த முறையிலும் இருத்தலாகாது என்ற உறுதியான ஒரே முடிவுக்கு வந்திருந்தோம். "யாரிடம் அதிகாரத்தை ஒப்படைப்ப தென்பது தெரிந்துவிட்டால், மகிழ்ச்சியோடு நாங்கள் விலகிக்கொள்ளத் தயாராயிருக்கிறோம்" என்று இந் நாட்டை ஆள்பவர்கள் இதுவரை சொல்லிவந்தார்கள். "இந்தியாவைக் கடவுளிடம் ஒப்படைத்துவிடுங்கள். அசாத்திய மென்று கருதினால், இந்தியா எக்கேடாவது போகட்டும் என்று அதை விட்டுவிடுங்கள்" என்றுதான் அவர்களுக்கு இப்போது நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினருக்கு நான் விடுக்கும் வேண்டுகோளில் கலந்துகொள்ளும்படி, பிரிட்டனிடமும், இந்தியாவிடமும், உலகத்தினிடமும் அன்பு செலுத்தும் பிரிட்டிஷார் ஒவ்வொருவரையும் நான் வேண்டுகிறேன். இந்த வேண்டுகோளை அவர்கள் நிராகரித்துவிட்டால், அதிகார வர்க்கம் இவ்வேண்டுகோளுக் கேற்ப நடக்கச் செய்வதற்கான காரியங்களை அஹிம்ஸா முறையில் மேற்கொள்ளும்படியும் நான் அவர்களை வேண்டுகிறேன்.

# வெளியேறுவதில் உள்ள சிக்கல்கள்

“இந்தியாவைவிட்டுப் பிரிட்டிஷார் வெளியேறுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வர, நான் பட்ட சிரமம் கொஞ்சநஞ்சமல்ல; அதை நடைமுறையில் கொணர, நான் இன்னும் அதிகமாகப் பாடுபட வேண்டியிருக்கிறது. அன்புடையவர்களைப் பிரிந்துபோகும்படி சொல்வதை ஒக்கும் இது. ஆயினும், இப்படிச் சொல்லித் தீரவேண்டியது, முக்கியமான கடமையாகிவிட்டது.”

‘நியூஸ் கிரானிக்கள்’ என்ற லண்டன் பத்திரிகையின் பிரதிநிதி ஒருவர், பம்பாயில், காந்திஜியைக் கீழ்வரும் கேள்விகளைக் கேட்டார். அவற்றுக்குக் காந்திஜி சொல்லிய விடைகள் வருமாறு:

**கேள்வி:** இந்தியாவைவிட்டு வெளியேறும்படி தாங்கள் சமீபத்தில் பிரிட்டிஷாரைக் கேட்டிருக்கிறீர்கள். தற்போதுள்ள சந்தர்ப்பங்களை நோக்கும்போது, அப்படி அவர்கள் திடீரென்று வெளியேறுவது சாத்தியமானதா? இந்தத் தேசத்தின் நிர்வாகத்தை அவர்கள் யாரிடம் ஒப்படைப்பது?

**பதில்:** இந்தியாவைவிட்டுப் பிரிட்டிஷார் வெளியேறுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வர, நான் பட்ட சிரமம் கொஞ்சநஞ்சமல்ல; அதை நடைமுறையில் கொணர, நான் இன்னும் அதிகமாகப் பாடுபட வேண்டியிருக்கிறது. அன்புடையவர்களைப் பிரிந்துபோகும்படி சொல்வதை ஒக்கும் இது. ஆயினும், இப்படிச் சொல்லித் தீரவேண்டியது, முக்கியமான கடமையாகிவிட்டது. இப்படிச் சொல்வதிலுள்ள சிறப்பும் அவசியமும் உடனடியாக வெளியேறுவதில்தான் உள்ளன. ஒரு பெருந் தீயின் மத்தியில் அவர்களும் நாமும் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம். பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேறுவார்களானால், அதனால் இருவருமே தீங்கின்றித் தப்பிப்பிழைக்கக் கூடும். வெளியேறாவிட்டால் என்னென்ன நேருமோ? கடவுள்தான் அறிவார். ஒரு தனிப்பட்ட மனிதரிடமோ, அல்லது ஒரு கட்சியிடமோ தேசத்தின் நிர்வாகத்தை ஒப்படைப்பது போன்ற பிரசினைக்கு இடமே இல்லை என்று, எனது ஆலோசனையில் தெளிவாகக் கூறி இருக்

கிறேன். ஏதேனுமோர் ஒப்பந்தம் ஏற்படவிருந்து, அதில், வெளியேறுவதும் ஓர் அங்கமாக இருக்குமானல், நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைப்பது என்பதையும் நாம் அவசியம் ஆலோசித்தேயாகவேண்டும். கடவுளிடம் இந்தியாவை ஒப்படைத்துவிடுங்கள் என்றே நான் கூறியிருக்கிறேன்; தற்கால பாஷையில், அராஜகம் பரவினலும் பரவட்டும் என்பதே அதன் பொருளாகும். சிறிது காலம் உள்நாட்டுக் கலகமும் வரையறையில்லாத கொள்ளைகளும் இதனல் பெருகினலும் பெருகலாம். இவற்றிலிருந்து, - நாம் காணும் பொய்யான இந்த இந்தியாவிலிருந்து, - மெய்யான ஓர் இந்தியா பிறக்கக்கூடும்.

**கேள்வி:** ஒருவருக்கும் தொல்லை விளைவிக்கக்கூடாது என்ற தங்களுடைய கொள்கைக்கு, இந்த ஆலோசனை எப்படிப் பொருந்தும்?

**பதில்:** தொல்லை விளைவிக்கக்கூடாது என்ற எனது கொள்கைக்கு, நான் கூறிய அபிப்பிராயத்தால், குறையொன்றும் நேரவில்லை. பிரிட்டிஷார் வெளியேறுவதனல், உண்மையாக எவ்விதமான தொல்லையும் ஏற்படமாட்டாது; தவிர, ஒரு பெரிய தேசத்தின் மக்கள் அனைவரையும் தாங்கள் அடிமைப்படுத்தி வைத்திருப்பது எதைக் காட்டுகிறது என்பதை, அவர்கள் தாங்களாகவே அமைதியாகச் சிந்தனை செய்துபார்ப்பார்களானல், தாங்கள் சுமந்துவருகிற பெருஞ்சுமை குறைந்துபோகிறதென்ற மகிழ்ச்சியும் அவர்களுக்கு உண்டாகும். தங்களை சூழ்ந்துள்ளோர் யாவரும் தங்களை வெறுக்கிறார்கள் என்பதை நன்கு அறிந்துகொண்ட பிறகும், பிரிட்டிஷார் பிடிவாதமாய் அடிமைப்படுத்துவதையே மேற்கொள்வார்களாயின், தொல்லையை அவர்கள் தாங்களே வேண்டி வரவேற்பவர்களாகிறார்கள். தற்போதைக்குக் கசப்பாகத் தோன்றியபோதிலும், உண்மை பேசுவதனல், நான் தொல்லையை உண்டாக்குகிறேன் என்று ஏற்பட்டுவிடாது.

**கேள்வி:** ஏற்கனவே தேசத்தில் பாதுகாப்பு மிகவும் குறைந்திருக்கிறது. ஆகவே, இப்போதுள்ள அரசாங்கம் திடீரென்று வெளியேறுவதால் நிலைமை இன்னும் கேவலமாகி விடாதா?

பதில்: தேசத்தில் மக்களிடையே பாதுகாப்புக் குறைந்துவிட்டதென்பது உண்மைதான். பாதுகாப்பின்மை அதிகமாகும் என்பதை ஏற்கெனவே நான் ஒப்புக்கொண்டிருக்கிறேன்; ஆனல், இது உண்மையான பாதுகாப்பைத் தோற்றுவிப்பதாகவே இருக்கும். இப்போது இருந்துவரும் பாதுகாப்பின்மை ஒரு நீடித்த நோய்போல் ஆகிவிட்டது; எனவே பாதுகாப்பில்லை என்ற உணர்ச்சியே மக்களுக்கு இல்லை. நோய் இருக்கிறது என்று உணர்ந்திருப்பதைவிட, நோய் இருந்தும், அதை உணராது இருப்பது மிகமிக அபாயகரமானதாகும்.

கேள்வி: ஜப்பானியர் இந்தியாமீது படையெடுப்பார்களேயானல், அப்போது இந்திய மக்களுக்குத் தாங்கள் அறிவுறுத்தப் போவது என்ன?

பதில்: ஜப்பானியருடைய எதிரிகள் இந்தியாவை விட்டு வெளியேறிவிடுவார்களானல், ஜப்பானியர் பெரும்பாலும் இந்தியாமீது படையெடுக்காது போகலாம்; இதை எனது கட்டுரைகளில் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். சில யுத்ததந்திர சௌகரியங்களை முன்னிட்டு, இங்குள்ள துறைமுகங்களைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணி, இந்தியாமீது ஜப்பான் படையெடுத்தாலும் எடுக்கலாம். இப்பொழுது என்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நம் மக்களுக்கு நான் ஆலோசனை கூறி வருகிறேனே—அதாவது அஹிம்ஸை முறையில் ஒத்துழையாமையை உறுதியாக மேற்கொள்ளும்படி சொல்லுகிறேனே—இதே காரியங்களை அப்பொழுதும் செய்யும்படி நான் மக்களுக்கு ஆலோசனை கூறுவேன். பிரிட்டிஷாரும் இந்த நாட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும்; நம் மக்களும் நான் கூறுகிற ஆலோசனைப்படி நடக்கவேண்டும். அப்போது ஒத்துழையாமையின் பலம் இன்று இருப்பதைவிட அளவிட முடியாத பலங்கொண்டதாக விளங்கும். பிரிட்டிஷாருடைய பலாத்காரம் ஒரு புறம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறபடியால், நமது ஒத்துழையாமையின் சிறப்பு நன்கு விளங்காது.

# சில கேள்விகளும் பதிலும்

"அவசரப்பட்டு நான் எதையும் செய்யமாட்டேன். ஆனால் நான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலுள்ளும், பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறத்தான் வேண்டும் என்ற உறுதியான முடிவு பொருந்தியிருக்கும்".

பம்பாயில் நடந்த பத்திரிகை நிருபர்களின் கூட்டமொன்றில், பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறும்படி தாம் சொன்னதுபற்றி உள்ள சிக்கல்களை, காந்திஜி விளக்கிச் சொன்னார்; அப்போது சில முக்கியமான கேள்விகளுக்குப் பின்வருமாறு விடை யளித்தார்:

## பலாத்காரமற்ற ஒத்துழையாமை

கேள்வி: யாராவது வந்து இந்தியாமீது படையெடுத்தால், அவர்கள்மீது பலாத்காரமற்ற ஒத்துழையாமைப் போரை நடத்தவேண்டும் என்பதை ஒரு புதிய திட்டமூலம் விளக்கி, ஹரிஜன் பத்திரிகையில் தாங்கள் ஒரு கட்டுரை எழுதியிருப்பதாகச் சொல்லுகிறார்களே, இந்தத் திட்டம் எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதைத் தாங்கள் தெரிவிக்க முடியுமா?

பதில்: இது சரியல்ல; என்னிடம் எந்தத் திட்டமுமில்லை; இருந்தால், அதை நான் உங்களிடம் தெரிவித்துவிடலாம். பலாத்காரம் சிறிதும் கலவாத சாத்விக ஒத்துழையாமைப் போரை நடத்தவேண்டுமென்று நான் சொல்லிவந்திருக்கிறேன். இதற்குமேல் ஒன்றும் சொல்லவேண்டுவதில்லை என்பதே என் அபிப்பிராயம். இந்தியா முழுதும் இதை ஏற்று, ஒருமனதுடன் இயக்கத்தை நடத்துமே யானால், ஜப்பானியப் படைகளாயினும் சரி, அல்லது பல படைகள் ஒன்றுசேர்ந்துகொண்டபோதிலும்சரி, அவற்றால் ஒன்றுமே செய்ய முடியாது என்பதை, ஒரு துளி இரத்தம்கூடச் சிந்தாது நான் காட்டிவிடுவேன். இந்திய மக்கள் எந்த விஷயத்திலும் சிறிதுகூட விட்டுக்கொடுக்காமல், பல கோடி மக்களைத் தியாகம் செய்யும் உறுதியோடு துணியவேண்டும் என்பது, மேற்சொன்ன நடபடிக்கைக்கு

அவசியமாகும். இப்படி ஏற்படும் துன்பத்தையும் துயரத்தையும் மிக மிகக் குறைவானவை என்றும், ஆனால், அதனால் கிடைக்கும் வெற்றியின் மதிப்பே மிகவும் மேன்மையுடையதென்றும் நான் எண்ணுவேன். இவ்வளவு துன்பத்தையும் துயரத்தையும் அனுபவிக்க, இந்தியா தயாராயிராது என்பது ஒருவேளை உண்மையாயிருக்கலாம். இது உண்மையாயிராதென்றே கருதுகிறேன். தன் சுதந்திரத்தை நிலைநிறுத்தி வைத்துக்கொள்ள விரும்புகிற எந்த தேசமும் இப்படிப்பட்ட துன்பமும் துயரமும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்; அதற்கு இந்த விலை கொடுத்துத்தான் ஆகவேண்டும். யோசித்துப்பார்க்கும்போது, ரஷ்யரும் சீனரும் செய்திருக்கிற தியாகம் மிக மிகப் பெரியதாகும்; இதன் பொருட்டு யாவற்றையுமே இழப்பதாயினும், சரி அதற்கும் அவர்கள் தயாராயிருக்கிறார்கள். ஆக்கிரமிக்கிற தேசமாயினும் சரி, அல்லது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் தேசமாயினும் சரி, மற்ற நாடுகள் அனைத்தும் இங்ஙனமே தியாகம் செய்யத் தயாராயிருக்கின்றன எனலாம். இதற்கு ஏற்படும் செலவு அளவிடற்கரியது. எனவே, நான் சொல்லுகிற சாத்விக முறையினால், மற்ற நாடுகள் நஷ்டப்படுவதைவிட இந்தியா அதிக நஷ்டப்பட வேண்டுமென்று நான் சொல்லவில்லை; ஆயுதமேந்திப் போர் செய்யத் தொடங்கினால், என்ன நஷ்டமேற்படுமோ அதைவிட அதிக நஷ்டத்தை இந்தியா பொறுத்துக் கொள்ள வேண்டுமென்றும் நான் சொல்லவில்லை.

கேள்வி: கிரேட் பிரிட்டனை எதிர்த்துப் போரிடுவதற்கு, தாங்கள் மேற்கொண்ட பலாத்காரம் கலவாத சாத்விக ஒத்துழையாமை வெற்றி பெறவில்லையே! புதிதாய்ப் படையெடுத்துவரும் பகைவனை எதிர்த்துநின்று இதனால் வெற்றி பெறுவது எப்படிச் சாத்தியமாகும்?

பதில்: நீங்கள் சொல்லுவது முழுவதையுமே நான் எதிர்க்கிறேன். பலாத்காரம் கலவாத சாத்விக ஒத்துழையாமை வெற்றி பெறவில்லை என்று இதுவரை யாரும் என்னிடம் காட்டியதில்லை. இப்படிப்பட்ட ஒத்துழையாமையை இதுவரையில் யாரும் மேற்கொள்வதில்லை என்பது

உண்மைதான். ஆகவே, இந்தியாமீது திடீரென்று ஜப்பானியர் படையெடுக்கும்போது, இதுவரையில் யாரும் காட்டாத ஒரு சாத்விக எதிர்ப்பு புதிதாகத் தோன்றிவிடாது என்று எண்ண வேண்டாம்; அபாயத்தை நேருக்கு நேரே காணும்போது, சாத்விக ஒத்துழையாமையாகிய எதிர்ப்பைக் கையாளுவதற்கு இந்தியா முன்னிலும் தயாராயிருக்கும் என்றே நான் நம்புகிறேன். மிகப் பல ஆண்டுகளாகப் பிரிட்டிஷ் ஆட்சியை இந்திய மக்கள் அனுபவித்துவிட்டார்கள்; இந்தப் பழக்கத்தின் காரணமாக, புதிதாக ஓர் அரசு வந்து நாட்டைக் கவரும்போது என்ன ஆத்திரம் ஏற்படுமோ அவ்வாத்திரம் இந்தியர் உள்ளத்தில் ஒருவேளை எழாது போகலாம். நீங்கள் கேட்ட கேள்வி மிகவும் சரியானது. ஒருவேளை, சாத்விக ஒத்துழையாமையாகிய எதிர்ப்பை இந்தியா மேற்கொள்ள முடியாமல் போனாலும் போகலாம். ஆனால், ஆயுதமேந்தி எதிர்ப்பதைக் குறித்தும் இதே கேள்வியை கேட்க முடியும். எத்தனையோ முறை ஆயுதம் தாங்கி எதிர்த்துப்பார்த்தாயிற்று; அதனால் வெற்றி ஏற்பட்டதில்லை. எனவே, ஜப்பானியரை ஆயுதம் தாங்கி எதிர்ப்பதால் வெற்றி கிடைக்காது. இவ்விதமான கேள்விகள் இந்தியா எப்போதுமே சுதந்திரம் பெறுவதற்குத் தகுதியற்றது என்ற பைத்தியக்காரத்தனமான முடிவுக்குத்தான் கொண்டுபோய்விடும். இதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது; ஆகவே சாத்விக ஒத்துழையாமையை முழு மனதோடு இந்தியா ஏற்றுக்கொள்ளத் தயாராகும்வரை, மீண்டும் மீண்டும் நான் முயன்றுகொண்டே வரவேண்டும். இந்தக் கொள்கையை இந்தியா முழுமனதோடு ஏற்றுக்கொள்ளாவிட்டால், பலாத்காரமுறையில் நம்பிக்கைகொண்ட வேறு தலைவரையோ, அல்லது, வேறு ஸ்தாபனத்தையோ இந்தியா ஏற்றுப் பின்பற்ற வேண்டும். உதாரணமாக, ஹிந்து மகாசபை, ஆயுதம் தாங்கிப் போரிடுவதற்கு ஹிந்துக்களின் மனத்தைத் தூண்ட முயல்கிறது. இம் முயற்சி வெற்றி பெறுமா வென்பது இனித்தான் தெரியவேண்டும். என்னைப் பொறுத்தவரை, ஹிந்து மஹாசபை இதனால் வெற்றி பெறும் என்று நான் நம்பவில்லை.

பொசுக்கல் வேலை

கேள்வி: பொசுக்கல் வேலையை எதிர்த்துச் சாத்விக ஒத்துழையாமையே மேற்கொள்ளும்படி தாங்கள் ஆலோசனை கூறுவீர்களா? உணவு, தண்ணீர் இவற்றின் மூலஸ்தானங்களை அழிக்க முயல்வதைத் தாங்கள் எதிர்ப்பீர்களா?

பதில்: ஆம். இந்தப் பொசுக்கல் வேலையை எதிர்க்கும்படி நான் நிச்சயமாய் ஆலோசனை கூறும் காலமும் வரும். இந்தியா, சாத்விக ஒத்துழையாமையை நம்பினாலும் சரி, பலாத்காரத்தையே நம்பினாலும் சரி, இந்தப் பொசுக்கல் வேலையால், அனாவசியமான அழிவு நேருகிறது; தற்கொலைக்கு ஒப்பான ஒரு நாச வேலையாகும் இது. ரஷ்யரும் சீனரும் இந்தப் போக்கைக் கடைப்பிடிப்பது என் மனத்திற்கு உவந்ததாய் இல்லை. மனித இயல்புக்கு ஒவ்வாத சில காரியங்களை வேறு சில நாடுகள் கடைப்பிடித்தால், அவற்றைப் பின்பற்ற நான் துணியமாட்டேன். பகைவன் வரும்போது, இங்குள்ள பயிர்களை என்னால் பாதுகாக்க முடியவில்லை என்பது காரணமாக, அவற்றை நான் விட்டு விட்டால் பகைவன் அவற்றை உபயோகித்துக்கொள்வான்; இந்த நிலைமையில் சரி போகட்டும் என்று நான் இருக்க வேண்டியதுதான் நமக்கு நல்ல ஓர் எடுத்துக்காட்டி இருக்கிறது. இது சம்பந்தமாக இஸ்லாமிய இலக்கியத்திலுள்ள ஒரு பகுதியை எனக்கு எடுத்துக்காட்டினார்கள். பயனுள்ளவற்றை நாசம் செய்தல் கூடாது என்றும், முதியோர், பெண்கள், குழந்தைகள் இவர்களைத் தொந்தரவு செய்தல் கூடாது என்றும் இஸ்லாமியப் படைகளுக்குக் கலிபாக்கள் திட்டமான உத்தரவு போட்டிருந்தார்களாம். இந்த உத்தரவுப்படி நடந்துகொண்டதனால் இஸ்லாமியப் படைகளுக்கு எங்கேனும் தோல்வி ஏற்பட்டதா என்ன?

கேள்வி: தொழிற்சாலைகளைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? சிறப்பாக, ஆயுதங்கள், வெடிமருந்து முதலியன தயாரிக்கும் தொழிற்சாலையைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்: கோதுமை அரைப்பதற்கும் எண்ணெய் ஆட்டுவதற்கும் தொழிற்சாலைகள் இருப்பதாக வைத்துக்கொள்

வோம்: அவற்றை அழிக்கக்கூடாது. ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அழிக்கலாமா வென்று கேட்டால் 'ஆம்' அழித்தே தீரவேண்டும் என்று சொல்வேன். என் இஷ்டப்படி நடத்த எனக்கு அதிகாரம் இருக்குமேயானல், சுதந்திர இந்தியாவில் ஆயுதம் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு நான் இடமே கொடுக்கமாட்டேன். பஞ்சாலைகளை அழிக்க நான் முற்படமாட்டேன்; அழிக்க முயல்கிறவர்களை நிச்சயம் எதிர்ப்பேன். இது பொதுவாக அவரவர் விவேகத்தைப் பொறுத்த விஷயம்.

பிரிட்டிஷார் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து, செய்யவேண்டிய காரியங்களனைத்தையும் உடனே நிறைவேற்றியாக வேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை. ஆனல், இதற்கான திட்டம் இருக்கத்தான் இருக்கிறது. பொதுஜன அபிப்பிராயத்தை வளர்த்து, உருவாக்கிவருவதை மேலும் தொடர்ந்து நான் செய்துவர என்னை அனுமதிக்கும் பட்சத்தில், மேற்சொன்னபடி நான் பிரிட்டிஷாரை வெளியேறும்படி சொல்வதில் எவ்விதமான கெட்ட எண்ணமோ குரோதமோ இல்லை என்பதை விளக்க முயலுவேன். நான் சொல்லியுள்ளதுதான் தர்க்கரீதியாகப் பார்த்தாலும் மிகமிகப் பொருத்தமானதாகும்; எல்லோருடைய நலனையும் உத்தேசித்துச் சொல்வதாகும். முற்றிலும் சினேகப்பான்மையில் சொல்வதாகையால், எனது ஒவ்வொரு செயலையும் கூர்ந்து ஆராய்ந்து, மிகுந்த ஜாக்கிரதையுடன்தான் நான் செய்து வருகிறேன். அவசரப்பட்டு எதையும் செய்ய மாட்டேன். ஆனல், நான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலுள்ளும், பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறத்தான் வேண்டும் என்ற உறுதியான முடிவு பொருந்தியிருக்கும்.

அராஜகம் என்று பிரஸ்தாபித்தேன். ஒழுங்கமைந்த ஓர் அராஜக முறையில்தான் இன்று நாம் வாழ்ந்து வருகிறோம் என்பது, எனது முடிவான அபிப்பிராயம். இந்தியாவில் நிறுவப்பெற்றுள்ள ஆட்சியை ஜனங்கள் நலத்தைப் பெருக்க நடைபெறும் ஆட்சி என்று குறிப்பிடுவது தவருகும். ஆகையால், சிரமமான கட்டுப்பாடும் ஒழுங்கும்

அமைந்த இந்த அராஜகம் ஒழியவேண்டும். ஒழிவதனால், இந்தியாவில் நீதிமுறை நியாயவரம்பு என்பன அறவே இல்லாது மறைந்தொழியவும் கூடும். அதனால் எவ்வளவு நஷ்டங்கள் வந்தபோதிலும் பாதகமில்லை. சாத்விகப் போராட்ட முறையில் இந்தியாவைப் பயிற்ற 22 ஆண்டுகளாக எடுத்துக்கொண்ட பிரயாசை யெல்லாம் வீண் போகாது என்றே நான் நம்புகிறேன்; இது வீண் போய் விட வில்லை என்று எண்ணவே நான் விரும்புவேன்; எவ்வளவுதான் குழப்பம் நேரிட்டாலும், மக்கள் அதன் மூலம் அனைவரும் விரும்பத்தக்க உண்மையான அமைதியைத் தேடிக்கொள்வார்கள் என்றே எண்ணுகிறேன். இப்படியின்றி மேற்சொன்னவாறு நியாயவரம்பு அடியோடு ஒழிவதாயிருந்தாலும்,அதற்கும் நான் தயார்தான்.எனவே, சிறந்த முயற்சிகள் யாவும் வீண்போவதாக எனக்குக் காணப்பட்டாலும், தங்கள் தங்கள் சொத்துக்களை அழித்து நாசமாக்குவதையாவது எதிர்த்துநிற்கும்படி பொதுஜனங்களை நிச்சயம் வேண்டிக்கொள்வேன்.

### அமெரிக்கா, அல்லது பிரிட்டனுக்குக் கருத்தளவில் ஆதரவு காட்டுவது

**கேள்வி:** யுத்தத்தில் எந்தக் கட்சிக்காவது இந்தியா கருத்தளவில் தனது அனுதாபத்தைக் காட்டலாமா?

**பதில்:** எனது சொந்த அபிப்பிராயம் எல்லோருக்கும் தெரியும். இந்தியாவை என் அபிப்பிராயத்திற்கு இணங்கும்படி செய்துவிடக் கூடுமானால், எந்தக் கட்சிக்குமே இந்தியா உதவி செய்யாது. ஆனால், சந்தேகத்திற்கு இடமின்றி சீனாவினிடமும் ரஷ்யாவினிடமும் எனக்கு அனுதாபம் உண்டு.

**கேள்வி:** பிரிட்டனிடம்?

**பதில்:** கருத்தளவில் எனது ஆதரவு முழுமையும் பிரிட்டன் கட்சியில்தான் இருக்கிறது என்று, நான் முன்னமே சொன்னதுண்டு. ஆனால், கருத்தளவிலுள்ள அந்த ஆதரவைக்கூடக் காட்ட என் மனம் இன்று இடம் தரவில்லை

என்பதை நான் வருத்தத்தோடு ஒப்புக்கொள்கிறேன். இந்தியாவினிடத்தில் பிரிட்டிஷார் நடந்துகொண்டிருக்கிற முறை, எனக்கு மிக்க வேதனை தந்திருக்கிறது. அமெரியின் காலட்சேபத்துக்கோ, சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் தூதுக்கோ நான் சிறிதும் தயாராயில்லை. இக் காரியங்கள், நீதியொழுக்கத்தில் பிரிட்டன் தவறிவிட்டது என்ற நிலைக்குக் கொண்டுவந்துவிட்டன என்பது என் கருத்து. ஆகவே, பிரிட்டனுக்கு எவ்வித இழிவும் நேரவேண்டும், அதாவது தோல்வி கிடைக்க வேண்டு மென்று நான் விரும்பாத போதிலுங்கூட, பிரிட்டனுக்குக் கருத்தளவில் சிறிதேனும் ஆதரவு காட்ட என் மனம் மறுக்கிறது.

கேள்வி: அமெரிக்காவைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

பதில்: உலக அமைதிக்காக அமெரிக்கா பாடுபட்டு வர வேண்டும். அதற்குப் பதிலாக, அதுவும் யுத்தத்தில் கலந்துகொண்டுவிட்டது. அமெரிக்கா சம்பந்தப்பட்ட வரையில் இது பெருந் தவறு; உலகத்தின் நன்னிலைமைக்கே இது பெரிய துரதிர்ஷ்டம் என்பதே என் அபிப்பிராயம். இதை நான் கொஞ்ச காலத்துக்கு முன்னமேயே தெரிவித்திருக்கிறேன்.

கேள்வி: ஆனல், அமெரிக்கா வேறு எவ்விதமாகவும் நடந்திருக்க முடியாதல்லவா?

பதில்: அமெரிக்கா விரும்பி இருந்தால், சமாதானத்திற்கு அது ஏற்பாடு செய்திருக்க முடியும் என்று நான் நிச்சயமாக எண்ணுகிறேன். ஆனல், தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை அமெரிக்கா பயன்படுத்திக்கொள்ள வில்லை என்பதே எனது உறுதியான அபிப்பிராய மாகும். இவ்வளவு பெரிய தேசத்தைக் கண்டித்துப் பேச எனக்கு உரிமை இல்லை என்பதை நான் அறிவேன். இந்தப் பெரும் போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு என்னென்ன காரணங்கள் அமெரிக்காவைத் தூண்டினவோ அவை யனைத்தையும் நான் அறியேன். ஆயினும், அமெரிக்கா இந்த யுத்தத்திலிருந்து விலகி யிருந்திருக்கலாம்

என்ற எண்ணம் எனக்கு உறுதியாக ஏற்பட்டிருக்கிறது. தனது அளவற்ற செல்வ மமதையிலிருந்து அமெரிக்கா விடுபடுமானல், இப்போதுகூட, அது யுத்தத்திலிருந்து விலகிக்கொண்டுவிட முடியும். இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் வெளியேற வேண்டும் என்பதுபற்றி நான் முன்னமே கூறியவற்றை மீண்டும் ஒருமுறை இங்கே கூற விரும்புகிறேன். அமெரிக்காவும் பிரிட்டனும் இந்த யுத்தத்தில் ஈடுபடுமுன், ஒழுக்கத்தை அஸ்திவாரமாகக்கொள்வது நன்று. தங்கள் தங்கள் வீடுகளில் காணப்படும் குப்பையைப் போக்கிக்கொண்டு, ஆப்பிரிக்காவிலிருந்தும் ஆசியாவிலிருந்தும் தங்கள் ஆதிக்கத்தை ஒடுக்கிக்கொள்ளவும், வெள்ளைக்காரர் உயர்வு என்ற உணர்ச்சியை போக்கவும் தீர்மானமான உறுதி கொள்ளவேண்டும் அவைகள். இங்ஙனம் செய்யாமல் போரில் ஈடுபட்டதற்கு நீதியுணர்ச்சி பற்றிய எவ்வித ஆதரவும் இல்லை. வெள்ளை நிறத்தவரே உயர்ந்தவர் என்ற கேடான உணர்ச்சியை அடியோடு தொலைத்து ஒழித்தாலன்றி, மனித சுதந்திரத்தைக் காப்பாற்றுகிறோம், நாகரிகத்தைக் காப்பாற்றுகிறோம், ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்வதற்கு அந்த நாடுகளுக்கு உரிமையே இல்லை.

# நட்புரிமையோடு கூடிய ஆலோசனை

"வெறுப்புக்குப் பாத்திரமா யிருந்துவரும் அன்னி யஆட்சி இந்த நாட்டைவிட்டு நீங்கிவிடுவதுதான், இழிவான இந்த வெறுப்புக் குணம் தொலைவதற்குரிய ஒரே வழி யாகும்."

## ஒரு நண்பர் இவ்விதம் நியாயம் பேசுகிறார் :

"இந்தியா சம்பந்தப்பட்டவரையில் பிரிட்டன் நியாயமாக நடந்துகொள்ள இயலாதிருக்கிறது. ஆகவே, இந்தியாவின் ஆத்மீக ஆதரவேனும் கிடைக்குமென்று எதிர்பார்க்கும் உரிமை பிரிட்டிஷாருக்கு இல்லை என்று தாங்கள் சொல்வதை அனேகர் ஒப்புக்கொள்வார்கள். இலட்சிய முறையில் நோக்கினாலுங்கூட, பிரிட்டிஷார் இந் நாட்டைவிட்டு வெளியேறுவதுதான் கண்ணியமான வழி யென்று தாங்கள் கூறுவதையும் பெரும்பாலோர் ஒப்புக்கொள்வார்கள். ஆயினும், பிரிட்டிஷார் வெளியேறியவுடனேயே, பெரிய சங்கடங்கள் பல நிச்சயமாக நமக்கு நேரிடலாம்; இதைத் தாங்களும் சொல்லியிருக்கிறீர்கள். சகலவிதமான துன்பங்களையும் துயரங்களையும் பொறுத்துக்கொள்ளத் தயார் என்று தாங்கள் சொல்லுகிறீர்கள். இதுதான் வீரருக்குரிய இலட்சணம். அதே சமயத்தில், இந்தத் துன்பங்களையும் துயரங்களையும் இயன்ற அளவு குறைக்க, வழி தேடுவது தங்கள் கடமையல்லவா? உதாரணமாக, கோழைத்தனத்தை விட்டுவிடும்படியும், நம்மையே நம்பி நாம் வாழ முடியும் என்பதை மக்கள் உணரும்படியும் செய்வது மிக்க அவசியமாகும். ஜப்பானியர் உதவியைப் பலர் எதிர்பார்க்கிறார்கள். இப்படி எதிர்பார்ப்பது தவறு. தவிர, ஜப்பானிய உதவி கிடைத்தால், அவர்கள் ஆதிக்கத்தின்கீழ் இருக்கவேண்டியும் வரும். இது கூடாது. கூடுமானவரை பிரிட்டிஷார்-மீது வெறுப்புக்கொள்வதைத் தடுக்க முயல வேண்டும். அதன் பிறகு முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவதற்கு எல்லா வகைகளிலும் முயல வேண்டும். இந்தியா சுதந்திரம் அடையத் தாங்கள் மேற்கொள்ளும் காரியங்களுள் மிகச் சிறந்ததும் முடிவானதும் இதுவே யாகும். தக்க முன்ஆயத்த மின்றி, அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது. தோல்வி ஏற்பட்டுவிட்டால், கடுமையாகத் தாக்கிப் பேசுகிற காலம் இது; தோல்வியைச் சகித்தல் சிரமம்."

உண்மையான நிலைமை என்ன என்பதை சிறிதும் மறவாமல், மனிதனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உணர்ந்தவரையில் முயன்று, ஒவ்வொரு துறையிலும்

முன்னேற்பாடுகளை நான் செய்துகொண்டுதான் வருகிறேன். இந்தப் பத்திரிகையின் பத்திகளைப் படித்துப் பார்த்தாலே, இது தெரியவரும். இப்படிப்பட்ட தொரு புதிய அபிப்பிராயத்தை, அதுவும் இந்தச் சமயத்தில் நான் வெளியிடுவதைக் கண்டு, அனேகர் திடுக்கிட்டுவிட்டார்கள்; இதை நான் அறிவேன். இதற்கு நான் என்ன செய்ய முடியும்? என் மனச்சாட்சிக்கு உண்மையாய் நடப்பதாயிருந்தால், மற்றவர்கள் என்னைப் பித்தன் என்று கூறியபோதிலும் கவனியாது, நான் உண்மையைச் சொல்லித்தான் தீரவேண்டும். இந்த யுத்தத்தில் நான் திட்டமாய்ச் செய்யக் கூடியது இதுவே என்றும், இப்போது இருக்கிற அபாயத்திலிருந்தும், இனிமேல் வரப் போவதாய்ப் பயமுறுத்திக்கொண் டிருக்கிற அபாயத்திலிருந்தும் இந்தியாவைப் பாதுகாக்கும் பொருட்டு நான் திட்டமாய்ச் செய்யக் கூடியது இதுவே என்றும் நான் கருதினேன். சமூக ஒற்றுமைக்கு என்னால் செய்யக் கூடிய உண்மையான பணியும் இதுவே யாகும். இது என்ன மாதிரியிருக்கும் என்பதை இப்போது ஒருவராலும் நினைத்துப்பார்க்க முடியாது. நம்முடைய காரியங்கள் யாவும் இதுவரை போலியாக இருந்ததுபோல, இதுவும் இருந்துவராதென்பது நிச்சயம். அரசியல் உணர்ச்சியுள்ள ஒருசிலரே இதைப்பற்றி அறிவர். பொதுஜனங்களை, எப்போதும் போலவே இது சிறிதும் பாதிக்க வில்லை.

ஆகவே, அவசரத் தேவைக்குத் தக்கவாறு, வேண்டிய ஏற்பாடுக ளனைத்தையும் கவனமாய்ச் செய்துகொண்டு வருவேன். முன்னேற்றத்துக்கான செயல் எதையும் மேற்கொள்ளுமுன் கோழைத்தனம் நம்மைவிட்டு அகல முடியும் என்பதற்கு நான் உறுதி எதுவும் கூற முடியாது. அதிக சிரமம் இல்லாமல் கோழைத்தனம் நிச்சயமாக நம்மைவிட்டு அகலவே அகலாது. வெறுப்புத் தணியும் வரை, நம்மால் காத்துக்கொண் டிருக்கவும் முடியாது. வெறுப்புக்குப் பாத்திரமா யிருந்துவரும் அன்னிய ஆட்சி இந்த நாட்டைவிட்டு நீங்கிவிடுவதுதான், இழிவான இந்த வெறுப்புக் குணம் தொலைவதற்குரிய ஒரே வழி யாகும்.

ஆனல், பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தைத் தொலைப்பதற்கு, மக்கள் எக்காரணம் பற்றியும் ஜப்பானியரைத் துணைதேடக் கூடாது. இந்த மருந்து, நோயினும் பார்க்கக் கேடானது. நம்மைப் பீடித்திருக்கும் இந்த நோய் மிகவும் கொடியது. இது நமது ஆண்மையை உறிஞ்சிவிட்டிருக்கிறது; என்றென்றும் நாம் அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்று நாமே எண்ணும்படி இது நம்மைச் செய்துவிட்டது. இந்தக் கொடிய நோயைத் தொலைப்பதற்கு, இந்தப் போராட்டத்தில் எவ்வளவு கஷ்டங்கள் படவேண்டுமோ, அவ்வளவையும் அனுபவிப்பதற்குத் தயாராயிருக்க வேண்டும் நாம். இதை நான் ஏற்கெனவே சொல்லிவந்திருக்கிறேன். இது தாங்கமுடியாத நோய். இந் நோயைப் போக்குவதற்குப் பிடிக்கும் செலவும் மிகமிக அதிகமாக இருக்குமென்பதும் எனக்குத் தெரியும். ஆனல், இந் நோயிலிருந்து விடுதலை பெறுவதற்கு, நாம் எவ்வளவு தான் கொடுத்தாலும், அது அதிகமான தொகையாகாது.

# தொடர்பே இல்லை

"பிரிட்டிஷார் இந்த நாட்டில் தங்கியிருப்பதால்தான்; ஜப்பானியர் இங்கு வர எண்ணுகிறார்கள். வகுப்புத் துவேஷம் வளர்கிறது. இன்னும் பலவிதமான சீர்கேடுகளும் தோன்றுகின்றன. இவையனைத்தையும்விட மோசமானது என்னவென்றால், நாம் வலிமையற்றவர்களா யிருப்பதன் காரணமாக, நம்மிடையே வெறுப்புணர்ச்சி அதிகப்படுகிறது. ஒழுங்கான முறையில் பிரிட்டிஷார் இந் நாட்டைவிட்டு வெளியேறுவார்களானால், வெறுப்பு அன்பாக மாறிவிடும். அதைத் தொடர்ந்து தாமாகவே வகுப்புப் பூசல்களும் மறைந்துவிடும்."

கேள்வி : தாங்கள் சேவாக்கிராமத்துக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறீர்கள். இதனால் தங்களுக்கும் பொதுஜனங்களுக்கு மிடையில் தொடர்பே இல்லை என்று சொல்லிவிடலாம். இதைத் தாங்கள் அறிவீர்களோ என்னவோ? இப்படி அடைபட்டிராவிட்டால், ஜப்பானியரை எதிர்ப்பதைப்பற்றித் தாங்கள் இப்போது பேசிவருவதுபோல், இவ்வளவு தூரம் பேசமாட்டீர்கள். பிரிட்டிஷார்மீது ஜனங்களுக்கு வெறுப்பு மிகமிக அதிகமாய் இருப்பது காரணமாக, சாமானிய மக்கள் ஜப்பானியரை வரவேற்கவும் சித்தமா யிருக்கிறார்கள்.

பதில்: எனக்கும் பொதுஜனங்களுக்கு மிடையில் தொடர்பே இல்லை என்று தாங்கள் சொல்வதை நான் ஆமோதிக்க முடியாது. நான் சேவாக்கிராமத்துக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தபோதிலும், பலவகையான மக்களை நான் பார்த்தவண்ணம் இருக்கிறேன். இந்தியாவின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் எனக்குக் கடிதம் வந்து கொண்டே யிருக்கிறது. எனவே, பெரிய பட்டினத்தில் வாசம் செய்தபோதிலும்கூட, உங்களைவிட ஒருகால் எனக்குத்தான் பொதுஜனங்களோடு அதிகத் தொடர்பு இருத்தல் கூடும். பொது மக்களுடைய உள்ளத்தை அளந்து அறிய எனக்குச் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. தங்களுக்கு அந்த வசதி கிடையாது. நீங்கள் சொல்வதைச் சரியென்பதாக ஒப்புக்கொண்டு, (தாங்கள் சொல்வது ஓரளவு சரி என்றே நம்புகிறேன்) உண்மையான பரிகாரத்தை நான் மறைத்து வைத்துக்கொள்ள முயன்றால்,

அதனால் பொதுஜனங்களின் மனம் மாறிவிடாது. இதற்கு மாறாக, வெறுப்புணர்ச்சி பயனற்றது என்பதையே நான் காட்டி வருகிறேன். வெறுப்பானது, வெறுப்புக்கொண்டுள்ளவனுக்குத்தான் தீங்கு பயக்கிறதே யன்றி, வெறுக்கப்படுபவனுக்கு ஒருபோதும் தீமை பயவாது என்பதை நான் புலப்படுத்தி வருகிறேன். ஏகாதிபத்தியமுடைய எந்த வல்லரசும் இதுவரை நடந்துவந்திருப்பதைத் தவிர வேறு வழிகளில் நடந்துவர மாட்டா. நாம் பலம் பொருந்தியவர்களாயிருந்தால், பிரிட்டிஷார் பலமற்றவர்களாய்ப் போவது நிச்சயம். எனவே, வெறுப்புணர்ச்சியை நீக்கிக்கொள்ளும்படி பொதுஜனங்களிடம் நான் சொல்லிவருகிறேன். பிரிட்டிஷார் இந் நாட்டைவிட்டு வெளியேறும்படி கேட்டுக்கொண்டு, அதே சமயத்தில் ஜப்பானியரை எதிர்த்துநிற்பதற்கு வேண்டிய மனவலிமையை வளர்த்துக்கொள்ளும்படி நான் பொதுஜனங்களிடம் சொல்லிவருகிறேன். இதன்மூலம் நம் மக்களிடமுள்ள பகைமையைப் போக்கிவிட நான் முயலுகிறேன். பிரிட்டிஷார் வெளியேறுவதனால், ஜப்பானியரை வரவேற்கும் எண்ணமும் நின்றுவிடும். பிரிட்டிஷார் வெளியேறுவது காரணமாக, நமக்கு உண்டான பலத்தை ஜப்பானியர் நம் நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்க உபயோகிக்கலாம். நவீன ஆயுதமோ, கர்நாடக ஆயுதமே எதுவுமின்றி, கோடிக்கணக்கான இந்திய மக்களை, முறையாகப் பயிற்றத் திரட்டும் பட்சத்தில், அவர்கள் ஜப்பானியரை எதிர்க்க முடியு மென்று சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். பிரிட்டிஷ் ஆதிக்கத்தை இந்த நாட்டைவிட்டுத் துரத்த முயன்றுகொண் டிருக்கிற அதே சமயத்தில், மக்களுடைய ஒத்துழைப்பின்றிப் பிரிட்டிஷாரும் சண்டை போட்டு வரும்போது, நாமும் ஜப்பானியரை எதிர்த்துநிற்க முடியு மென்று அவர் சொல்வதை மட்டும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பரஸ்பர நம்பிக்கையும் மரியாதையும் இல்லாத இடத்தில், மனப்பூர்வமான ஒத்துழைப்பும் கூட்டமைப்பும் ஏற்படுவது சாத்தியம் அல்ல வென்று, நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். பிரிட்டிஷார் இந்த நாட்

டில் தங்கியிருப்பதால்தான், ஜப்பானியர் இங்கு வர எண்ணுகிறார்கள். வகுப்புத் துவேஷம் வளருகிறது. இன்னும் பலவிதமான சீர்கேடுகளும் தோன்றுகின்றன. இவையனைத்தையும்விட மோசமானது என்னவென்றால், நாம் வலிமையற்றவர்களாயிருப்பதன் காரணமாக, நம்மிடையே வெறுப்புணர்ச்சி அதிகப்படுகிறது. ஒழுங்கான முறையில் பிரிட்டிஷார் இந் நாட்டைவிட்டு வெளியேறுவார்களானல், வெறுப்பு அன்பாக மாறிவிடும். அதைத் தொடர்ந்து தாமாகவே வகுப்புப் பூசல்களும் மறைந்துவிடும். மூன்றாவது சக்தி ஒன்று இருந்து அதிகாரம் செலுத்திக்கொண்டிருக்கிறவரை, இரண்டு வகுப்பினராலும் சரியான முறையில் சிந்தனை செய்யவோ, அல்லது விஷயங்களை அலசி ஆராயவோ இயலாது என்றுதான் எனக்குத் தோற்றுகிறது.

# சுதந்திர இந்தியாதான் நன்கு உதவிபுரிய முடியும்

"பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து ஒழுங்கான முறையில் வாபஸ் ஆகுமானால், இந்தியாவில் அமைதியை நிலை நாட்டுவதான தொந்தரவுமிக்க கடமை பிரிட்டனுக்கு இல்லாமல் போகும். அதே சமயத்தில் அதற்கு ஒரு பெருத்த லாபம் உண்டு. சுதந்திர இத்தியா ஒரு நேசநாடாக அதோடு ஒத்துழைக்கும். சாம்ராஜ்ய தந்திரங்கள் எண்ணங்கள் அனைத்தையுமே அந் நாடு இதற்குள் கைவிட்டிருக்கும். எனவே, இந்தியா சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்தும்பொருட்டு உழைக்காது; ஆனால், பாசாங்குத்தனமான மனித சுதந்திரத்திற்காக வன்றி, ஆண்மையான மனித சுதந்திரத்தைப் பாதுகாக்க முனைந்து நிற்கும்."

'சீனத்தின் நண்பன் என்று தங்களைச் சொல்லிக்கொள்கிறீர்கள். ஆனால், தாங்கள் எழுதியிநக்கின்றவற்றைக் கொண்டு தங்களுடைய தற்காலத்தைய செயல்களைப் பார்த்தால், இவை அதற்த மாறுபட்டிநக்கின்றனவே?' என்று, ஒந பத்திரிகை நிநுபர் காந்திஜியைக் கேட்டார். அதற்தூக் காந்திஜி சொன்ன பதில்:

'இல்லை' என்று நான் அழுத்தமாகக் கூறுகிறேன். எப்போதுமே நான் சீனத்தின் நண்பன் என்று என்னை உரிமை பாராட்டுகிறேன். அப்படியே, நான் சீனத்துக்கு உற்ற நண்பனாக இருந்துவருகிறேன். சுதந்திரத்தைப் பறிகொடுத்துவிடுவதனால், ஏற்படும் பலாபலன்களை நான் நன்கு அறிவேன். ஆகையால், அடுத்த நாடாயிருந்து, துன்பத்தில் மூழ்கிக்கிடக்கும் சீனத்திடம் நான் பரிவுகொள்ளாது எப்படி இருக்க முடியும்? பலாத்காரத்தில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு, இந்தியாவை என் கருத்துக்கு ஏற்றவாறு செலுத்தக்கூடுமானால், இங்கு என் சொல்லைக் கேட்கக்கூடிய சகல சக்திகளையும் சீனத்தின் சுதந்திரத்தைக் காக்கும்பொருட்டு, செயலில் ஈடுபடும்படி செய்துவிடுவேன். ஆகவே, பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று சொல்லிவரும்போதெல்லாம், சீனாவை நான் மறந்துவிடவில்லை. இந்தியா

வைச் சுதந்திர நாடாகச் செய்யும்படி கிரேட் பிரிட்டனைத் தூண்ட வேண்டும். சுதந்திரமடைந்த இந்தியாதான் யுத்த முயற்சிக்குப் பூரண உதவி செய்ய முடியும். இதுவே சீனுவுக்கு இந்தியா பலன்தரத்தக்க முறையில் உதவுதற்கு ஏற்ற வழியாகும். சீனுவைப்பற்றிய சிந்தனை என் மனத்தில் எப்போது மிருந்துவருவதனுலேயே, நான் இவ்விதம் சொல்கிறேன். கோபமும் அதிருப்தியும் குடிகொண்டிருப்பதற்குப் பதிலாக, சுதந்திரம் பெற்ற இந்தியாவானது மிகவும் பலம் பொருந்திய ஒரு நாடாக ஆகி, பொதுவாக, மனித சமுதாயத்திற்கே பெருத்த நன்மை புரியக் கூடிய சக்தியாக விளங்கும். நான் சொல்லியுள்ள இந்தப் பரிகாரத்தை நிறைவேற்ற வீர உணர்ச்சி அதிகம் தேவை. இது பிரிட்டிஷாரின் அறிவுக்கே அப்பாற்பட்டது என்பது உண்மைதான். பிரிட்டன், சீனு, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு நான் உண்மையான நண்பனு யிருத்தலினுலேயே, இந்தப் பரிகாரத்தை நான் மறைத்துவைக்க லாகாது. இப்போதுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்கும் மனித சமுதாயத்திற்குக் கேடுபயக்கும் யுத்தமாக இராமல், மனித சமுதாயத்திற்கு நலன் பயக்கும் யுத்தமாக இந்த யுத்தத்தை மாற்றிவிடும் பொருட்டும், நான் இந்தப் பரிகாரத்தைக் குறிப்பிடுகிறேன். இது நடைமுறைக்கு மிகவும் ஏற்றது. இதைத் தவிர வேறு வழி எனக்குத் தென்படவில்லை.

நான் ஜப்பானியரின் நண்பனுகிவிட்டதாக லாகூரிலும் டெல்லியிலும் ஜனங்கள் சொல்லிக்கொண்டதை, தாம் கேள்விப்பட்டதாகப் பண்டித நேரு நேற்று என்னிடம் சொன்னுர். இதைக் கேட்டு நான் சிரித்தேன். சுதந்திரத்தின்மீது எனக்குள்ள பற்றுதல் உண்மையானதா யிருந்தால், அறிந்தோ அல்லது அறியாமலோ, தமது எஜமானர்களை மாற்றிக்கொண்டிருக்கிற நிலையில் மட்டும் இந்தியாவை வைப்பதாயிருக்கும் செயலெதையும் செய்ய நான் ஒருபோதும் துணிய மாட்டேன். ஜப்பானியரை நான் முழுமனதோடு எதிர்த்தவண்ண மிருந்தும் ஜப்பானிய ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டால், இந்தத் துன்பத்துக்குப் பிரிட்டிஷாரே காரணமாவார்கள். இப்படிப்பட்ட

ஆதிக்கம் ஏற்படக் கூடுமென்பதை நான் ஒருபோதும் மறுத்ததில்லை. இதைப்பற்றி நான் கொஞ்சமும் சந்தேகம் கொள்ளவில்லை. ராணுவ ரீதியில் பார்த்தாலும்கூட, சீனர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் சிறிதேனும் அபாயம் நேரிடக்கூடிய தெதையும் நான் சொல்லவில்லை. சீனுவிற்காக உதவி செய்யும் வகையில், இந்தியா தன்னுலானதைச் செய்யவும் அனுமதியில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்ததுதான். பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து ஒழுங்கான முறையில் வாபஸ் ஆகுமானுல், இந்தியாவில் அமைதியை நிலைநாட்டுவதன் தொந்தரவுமிக்க கடமை பிரிட்டனுக்கு இல்லாமல் போகும். அதே சமயத்தில் அதற்கு ஒரு பெருத்த லாபமும் உண்டு. சுதந்திர இந்தியா ஒரு நேசநாடாக அதோடு ஒத்துழைக்கும். சாம்ராஜ்ய தந்திரங்கள் எண்ணங்கள் அனைத்தையுமே அந்நாடு இதற்குள் கைவிட்டிருக்கும். எனவே இந்தியா சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்தும் பொருட்டு உழைக்காது; ஆனுல், பாசாங்குத்தனமான மனித சுதந்திரத்திற்காக வன்றி, ஆண்மையுள்ள மனித சுதந்திரத்தைப் பாதுகாக்க முனைந்து நிற்கும். இதுதான் நான் கொண்ட உறுதியான முடிபு. இதை நான் எழுத்துமூலம் தொடர்ந்து எழுதி வருவேன். பிரிட்டிஷ் அரசாங்கம் அவ்விதம் செய்ய என்னைவிட்டு வைக்கும் வரையில், நான் இதை நிச்சயமாய்ச் செய்துகொண்டே வருவேன்.

*'ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பிப்பதற்குத் திட்டங்கள் பூர்த்தியாகி யிருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றனவே? இது உண்மைதானு?' என்று அதே நிருபர் கேட்டார்: அதற்குக் காந்திஜி கூறிய பதில் :*

இரகசிய முறைகளில் எனக்கு எப்போதுமே நம்பிக்கை கிடையாது; இப்போதும் கிடையாது. என் மனதில் சில திட்டங்கள் ஊசலாடிக்கொண் டிருப்பது உண்மைதான். ஆனுல், அப்படியே மனத்திலிருக்கட்டும் என்றுதான் அவற்றை இப்போது விட்டுவைத்திருக்கிறேன். என்னை ஒன்றும் செய்யாது விட்டுவைத்திருக்கிறவரையில்,

இந்தியப் பொதுஜனங்களின் மனத்தையும் உலகப் பொதுஜனங்களின் அபிப்பிராயத்தையும் உருவாக்குவதே எனது முதல் வேலையாக இருந்துவரும். இதைத் திருப்திகரமாக உருவாக்கி முடித்தபிறகு, இன்னும் சில காரியங்களையும் நான் செய்யவேண்டி யிருக்கின்றன. காங்கிரஸும் பொதுஜனங்களும் எனக்குத் துணையா யிருப்பார்களானல், இந்தச் சில காரியங்கள் பெரிய காரியங்களாக ஆனாலும் ஆகலாம். எனது திட்டத்தை வலியுறுத்துவதற்கு முன்பு, அதன் விவரங்கள் அனைத்தையும் நான் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவேன். மௌலான சாஹிப்பை நான் இன்னும் சந்தித்துப் பேசவில்லை. பண்டித நேருவோடு நடக்கிற பேச்சுவார்த்தைகள் இன்னும் முற்றுப் பெறவில்லை. நேற்றையப் பேச்சு இன்னும் முற்றுப்பெற வில்லை யாயினும், நாங்கள் ஒருவரோடு ஒருவர் நட்ரிமையுடன் கலந்து, ஒருவரையொருவர் நன்கு அறிந்துகொண் டிருக்கிறோம். முடியுமானல், காங்கிரஸையும், ஏன் அகில இந்தியாவையும் நான் என்னோடு ஒத்து வரும்படி செய்ய எண்ணுகிறேன். இது இயற்கையே. ஏனெனில் சுதந்திரம் என்பதை நான் குறுகிய கண் கொண்டு பார்க்கவில்லை. மனிதனிடம் காணப்பெறும் பெருமை, மேன்மை ஆகியவற்றோடு நான் கொண்டுள்ள சுதந்திரநோக்கு ஒன்றி விரிந்துநிற்கும். எனவே, தீர்க்காலோசனை செய்யாமல், நான் எந்தக் காரியத்தையும் தொடங்கமாட்டேன்.

# 'முடிவான அபிப்பிராய மன்று'

"யுத்தத்தின் முடிவைப்பற்றி எனக்கு ஒரு திட்டமான அபிப்பிராயம் கிடையாது. எந்தக் கட்சி மிகவும் பலவினமா யிருக்கிறதோ, அந்தக் கட்சியையே என் மனம் இயல்பாக நாடுகிறது; இதுதான் எனக்கு உள்ள திட்டமான முடிவாகும். இந்த இயல்பை ஒட்டியே, சங்கடம் விளைவிக்கலாகாது என்ற எனது கொள்கை இருந்து வருகிறது."

கேள்வி: பிரிட்டிஷாரும் நேசநாட்டினரும் இந்த யுத்தத்தில் தோல்வியடைந்துவிடுவார்கள் என்று தாங்கள் நம்புவதாகவும், ஜப்பானிடமும் இங்கிலாந்தினிடமும் தாங்கள் காட்டுகிற தற்போதைய மனநிலைக்கு இந்த நம்பிக்கையே தூண்டுகோலாய் இருக்கிறதென்றும் சொல்லுகிறார்களே? இது உண்மைதானா? இதுபற்றி, தங்களது கருத்தைத் தெளிவுபடுத்துவது அவசியமாகும். காங்கிரஸில் மிகவும் முக்கியமாக விளங்கும் தலைவர் ஒருவர் இவ்விதம் அபிப்பிராயப்படுகிறார். தங்களுடன் பேசிக்கொண்டிருந்ததன் விளைவாகவே, தாம் இந்த அபிப்பிராயத்திற்கு வந்துள்ளதாக அவர் உறுதி கூறுகிறார்.

பதில்: அந்தத் தலைவருடைய பெயரை நீங்கள் தெரிவிப்பது நலமென்று எண்ணுகிறேன். அவர் யாராய் இருந்தபோதிலும் சரி, அவர் கூறியதில் உண்மை இல்லையென்று நான் தயங்காமல் கூறுவேன். அதற்கு மாறாக, சில தினங்களுக்கு முன்பு, பிரிட்டிஷாரைத் தோற்கடிப்பது முடியாத காரியம் என்று 'ஹரிஜன்'* பத்திரிகையில்

---

*சமீபத்தில், சில இடங்களில் பிரிட்டிஷார் பின்வாங்கி யிருக்கிறார்கள். இதைக் கண்டு யாரும் திகில் அடையவேண்டிய அவசியமில்லை, பிரிட்டன் நடத்தியுள்ள யுத்தங்களில், அல்லது பிரிட்டன் தொடர்புகொண்டுள்ள யுத்தங்கள் அனைத்திலும் பிரிட்டிஷார் பின்வாங்கி யிருக்கிறார்கள்; சில சமயம் பின்வாங்கியதால் ஏற்பட்ட நாசம் மிகவும் கேடானது என்று கூடச் சொல்லலாம். ஆயினும், இவ்விதம் ஏற்படுகிற தோல்விகளை யெல்லாம்மீறி, அவற்றை வெற்றிதரும் கருவிகளாக உபயோகித்துக்கொள்ளும் சாமர்த்தியம் பிரிட்டிஷாருக்கு உண்டு. தவறுகள் செய்வதன் மூலமாகவே, பிரிட்டிஷார் வெற்றி பெற்றுவிடுகிறார்கள் என்பது இதனாலேதான். இந்தக் குணம் அவர்களுக்கு மட்டும் ஏதோ சிறப்புரிமையாக இருந்துவருகிறது. தோல்வியைக் கண்டு பிரிட்டிஷார் மனங்கலங்கமாட்டார்கள்; ஒழுங்கு குன்றிவிட மாட்டார்கள். தோல்வியை அமைதியாகவும் விளையாட்டு மனப்பாங்கோடும் ஏற்றுக்கொள்கிற வழக்கம் அவர்களிடமுண்டு. அவர் தேசவிளையாட்டான, புட்பால் ஆட்டம்போலவே அவர்கள் யுத்தங்களைக் கருதுவார்கள். தோல்வியடைந்த கட்சியார் வெற்றியடைந்த கட்சியை மனமாரப் பாராட்டி, வெற்றியை இரண்டு கட்சிகளுக்கும் பொதுவானதோ என்று தோற்றும்படி செய்துவிடுவார்கள். விஸ்கிப் போத்தல்களைப் பரிமாறிக்கொண்டு, தோல்வியால் ஏற்பட்ட துன்பத்தை மறந்துவிடுவார்கள். பிரிட்டிஷாருடன் பழகியது காரணமாகப் பயனுள்ளதெதையும் நாம் கற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், துன்பத்தைக் கண்டு சோர்வுற்று மனங்கலங்காம லிருக்கவாவது கற்றுக்கொள்வது நல்லது.

ஹரிஜன், 22—2—42.

எழுதியிருக்கிறேன். தோற்கடிக்கப்படுவது என்றால் என்ன என்பதை அவர் அறியவில்லை. அமெரிக்கர்களைப்பற்றி, 'சண்டே டெஸ்பாட்சு'* பத்திரிகைக்கு நான் சொல்லியுள்ள பதிலை இதே இதழில் காணலாம். மேற்சொன்ன

---

*லண்டன் சண்டே டெஸ்பாட்சு பத்திரிகை, காந்திஜிக்கு, கீழ் வரும் தந்தியை அனுப்பிற்று:

"விரும்பினால், அமெரிக்கா இந்த யுத்தத்திலிருந்தே விலகியிருந்திருக்கலாம் என்று தாங்கள் சொன்னதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அமெரிக்கா நடுநிலைமையாகச் சும்மா இருந்தபோது, ஜப்பான் அமெரிக்காவைத் தாக்கி, அதன்மீது யுத்தம் தொடுப்பதாகப் பிரகடனமும் செய்திருக்கிறது. உண்மை இப்படி இருக்கும்போது, தங்கள் அறிக்கைக்குத் தாங்கள் என்ன நியாயம் கூறுவீர்கள்?"

இதற்குக் காந்திஜி அனுப்பிய பதில்:

"தந்தி கிடைத்தது. எனது அறிக்கை முழுதும் தங்களிடம் இல்லை என்று தெரிகிறது. அமெரிக்காவைப் பற்றிய பகுதி அந்த அறிக்கையில் இவ்விதம் இருக்கிறது: 'இவ்வளவு பெரிய தேசத்தைக் கண்டித்துப்பேச எனக்கு உரிமை இல்லை. படுநாசமான இந்தக் காரியத்தில் இறங்கும்படி அமெரிக்காவைத் தூண்டிவிட்ட காரியங்கள் யாவையோ நான் அறியேன். எப்படியோ எவ்வாறோ தெரியவில்லை, அமெரிக்கா இந்த யுத்தத்தில் கலந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம். தன்னிடமுள்ள அபரிமிதமான செல்வச் செருக்கால் மதிமயங்காது இப்போதும் தன்னை அதிலிருந்து அமெரிக்கா திருப்பிக்கொள்ளலாம் என்ற எண்ணம் என் மனதில் குடிகொண்டுவிட்டது. பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்று சொன்னதையே நான் இங்கு மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். நிறத்திமிரை ஒழிக்க வேண்டும்; ஆப்பிரிக்கா, ஆசியா இரண்டிலும் உள்ள செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் உறுதியோடு நின்று, அமெரிக்காவும் பிரிட்டனும் விட்டொழிக்க வேண்டும். அப்படிச் செய்து தங்களைத் திருத்திக்கொண்டாலன்றி, அந்த இரு நாடுகளும் இந்த யுத்தத்தில் கலந்துகொள்வதற்குரிய ஒழுங்குபற்றிய அடிப்படை அவற்றிற்கு இல்லாது போய்விடுகிறது. வெள்ளையர்களே உயர்ந்தவர்கள் என்ற கொடிய மனப்பாங்கை அடியோடு முற்றும் நசுக்கிப் புதைத்தாலன்றி, ஜனநாயகம், நாகரிகம், மனித சுதந்திரம் ஆகியவற்றை காக்க நாங்கள் முன்வந்துள்ளோம் என்று பேச அந்த நாடுகளுக்கு உரிமையே இல்லை.' இந்த அறிக்கையில் சொல்லிய கருத்துக்களை நான் இன்னும் ஆதரிக்கிறேன். அமெரிக்கா யுத்தத்தைத் தடுப்பதற்கு அஹிம்சை வழியைத் தவிர வேறு வழியை என்னால் சிபார்சு செய்ய இயலாது. அமெரிக்கரோடு எனக்கு ஏற்பட்டுள்ள நட்பு, உலகில் அமைதி நிலவ அமெரிக்கா அதிக பங்கு எடுத்துக்கொள்ளும் என்ற உயர்ந்த எண்ணத்தை என் மனத்தில் தோற்றுவிக்கிறது. அறிவு, பொருள், விஞ்ஞானத் திறன் ஆகியவற்றில் அமெரிக்காவிற்கு ஈடான தேசமே கிடையாது. எந்தத் தேசத்தாலுமே, அல்லது பல தேசங்கள் ஒன்று சேர்ந்தாலுமே அதைத் தோற்கடிக்க முடியாது. இப்படிப்பட்ட ஒரு பெரிய தேசம், படுநாசமான காரியத்தில் இறங்கி இருப்பதைக் கண்டுதான், நான் கண்ணீர்விடுகிறேன்."

'தலைவர்' கூறிய உரைகள் பொய் என்று இப் பதில் காட்டுகிறது. எனவே, ஒன்று அவர் நான் கூறியவற்றைப் புரிந்துகொள்வதில் தவறிவிட்டார், அல்லது தாங்கள் அவர் கூறியவற்றைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டீர்கள். கடந்த பன்னிரண்டு மாதங்களாக, ஏன் இன்னும் அதிகமான காலமாகவே இந்த யுத்தத்தில் எந்தக் கட்சியாரும் தீர்மானமான வெற்றியை யடையப்போவதில்லை என்று கூறிவந்திருக்கிறேன். களைப்பு மேலிட மேலிட, அமைதியில் நாட்டம் ஏற்படலாம். இது ஏதோ ஒருவிதமான ஹேஷ்யந்தான். இயற்கை பிரிட்டனுக்குச் சாதகமாயிருக்கலாம். அமைதியாகப் பொறுத்துக்கொண் டிருப்பதனால், பிரிட்டனுக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. அமெரிக்காவும் பிரிட்டனுக்கு நேசநாடகச் சேர்ந்துகொண்டதனால், அதற்கு எல்லையற்ற பொருள்வளமும், சயன்ஸ் நியதியான அறிவுச் சாதனங்களும் இருக்கின்றன. அச்சு நாடுகள் எதற்கும் இவ்வித வசதிகள் இல்லை. இந்த எண்ணத்தோடு பார்த்தால், யுத்தத்தின் முடிவைப்பற்றி எனக்கு ஒரு திட்டமான அபிப்பிராயம் கிடையாது. எந்தக் கட்சி மிகவும் பலவீனமா யிருக்கிறதோ, அந்தக் கட்சியையே என் மனம் இயல்பாக நாடுகிறது. இதுதான் எனக்கு உள்ள திட்டமான முடிவாகும். இந்த இயல்பை ஒட்டியே, சங்கடம் விளைவிக்கலாகாது என்ற எனது கொள்கை இருந்து வருகிறது. இந்தியாவின் நலத்தைப் போலவே, நான் பிரிட்டனுடைய நலத்தையும் எண்ணுகிறேன். அதனாலேதான் பிரிட்டன் இந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று சொல்லுகிறேன். தானாகவே மனமுவந்து பிரிட்டன் நீதியை வழங்க முன்வராது எனத் தாங்கள் நம்புகிறீர்கள். உங்களுக்கு உள்ள சிரமம் இதுதான். மனித இயல்புக்கு என்றென்றும் இணங்கிப்போகிற தன்மை வராதென்பதை, அஹிம்சையில் பற்றுதல் உள்ள என் மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

# முக்கியமான கேள்விகள்

''அமெரிக்காவும் பிரிட்டனும் மகத்தான பெரிய சமுதாயங்கள்தாம்; இதில் சந்தேகமில்லை. ஆயினும் வாயற்ற ஆப்பிரிக்க மக்கள் ஆசிய மக்கள் ஆகியோரை ஒதுக்கிவைக்கிற கொடுமையைக் கருதும்போது, இந்த இரு நாட்டினரின் பெருமையெல்லாம் வெறும் தூசிக்கு ஒப்பாகும். சீர்கேட்டைத் திருத்துவதற்கு, இவர்கள் மட்டுமே ஆற்றலுடையவர்கள். தங்கள் நடத்தையை ஒழுங்குபடுத்தி, தங்களிடம் காணப்படுகிற இந்த மாசை இவர்கள் போக்கிக்கொள்ளாதவரை மனித சுதந்திரத்தையும் மற்றதையும் பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கு உரிமையே இல்லை.''

புதிதாக உத்தேசித்துள்ள ஏற்பாட்டின் பலாபலன்களைப்பற்றி ஒரு நண்பர் என்னோடு பேசிக்கொண்டிருந்தார். விவாதம் இயல்பாகவே ரசமற்ற முறையில் சென்றுகொண்டிருந்தபடியால், அவர் கேட்க விரும்பிய கேள்விகளைக் குறித்து அனுப்பினால், அவற்றுக்கு நான் 'ஹரிஜன்' பத்திரிகையில் பதில் எழுதுவதாய்த் தெரிவித்தேன். அப்படியே, அவர் பின்வரும் கேள்விகளை அனுப்பினார்.

கேள்வி: இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரை உடனே வெளியேறும்படி தாங்கள் சொல்லுகிறீர்கள். பிரிட்டிஷார் வெளியேறிய பின், தேசிய அரசாங்கத்தை நிறுவ இந்தியர் முன்வருவார்களா? ஏற்படப்போகிற இந்திய சர்க்காரில் எத்தகைய கட்சியைச் சேர்ந்தவர்கள், அல்லது எத்தகைய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்வார்கள்?

பதில்: எனது யோசனை ஒருதலைச்சார்புள்ளதாயிருக்கிறது. ஏனெனில், இந்தியர் என்ன செய்வார்கள், என்ன செய்யமாட்டார்கள் என்பதை முற்றும் அனுசரியாமலே, பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென நான் சொல்லுகிறேன். அவர்கள் வெளியேறியதும் நாட்டில், தாற்காலிகமாக, குழப்பங்கள் ஏற்படக்கூடுமென்று கருதவும் நான் தயார். அவர்கள் ஒழுங்கான முறையில் இந் நாட்டைவிட்டு வெளியேறுவார்களானால், அவர்கள் வெளியேறிய உடனேயே, இப்போதுள்ள தலைவர்கள் தாங்களாகவே ஒரு தற்காலிக அரசாங்கத்தை

நிறுவக்கூடும். வேறுவிதமாக நடந்தாலும் நடக்கலாம். தேசத்தைப்பற்றிய சிந்தனையே இல்லாமல், சுயநலமே பிரதானமாய்க் கொண்டவர்களனைவரும், அதிகாரத்தைக் கைப்பற்ற முயலக்கூடும்; குழம்பிக் கிடக்கும் சக்திகளை ஒன்றுதிரட்டி, எப்படியாவது, எங்காவது தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட இவர்கள் முயலவுங்கூடும். ஆனால், பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு நேர்மையாகவும், முடிவாகவும், பூரணமாகவும் வெளியேறிவிட்டால், புத்திசாலிகளான தலைவர்கள் தங்களுக்குள்ள பொறுப்பை உணர்ந்து, வேற்றுமைகளை யெல்லாம் தற்போதைக்கு மறந்துவிட்டு, பிரிட்டிஷார் விட்டுப்போன மக்கள் ஸ்தாபனம் முதலியவற்றைக்கொண்டு தற்காலிக சர்க்கா ரொன்றை நிறுவுவார்கள் என்றே நான் நம்புவேன். தனிப்பட்ட நபர்களை, அல்லது கட்சிகளை ஆட்சி செலுத்தும் அதிகார சபையில் ஏற்றுக்கொள்ளவோ, வேண்டாமென்று ஒதுக்கவோ கூடிய சக்தி இல்லாதுபோவதால், தங்களுக்குள்ளேயே இவர்கள் கட்டுப்பாடாக நடந்துகொள்வார்கள். அதுவே அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து உதவும். இது நடைபெறுமானல், காங்கிரஸ், லீக், சமஸ்தானம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஒன்றுகூடித் தங்களுக்குள்ளேயே ஏதோ ஒருவகையான ஏற்பாட்டைச் செய்துகொண்டு, தற்காலிக தேசிய சர்க்காரை அமைப்பார்கள். இவை யாவும் வெறும் ஹேஷ்யத்தைத் தவிர வேறில்லை.

**கேள்வி:** புதிதாக நிறுவப்பெறுகிற இந்திய தேசிய அரசாங்கம் அச்சு நாடுகளையும் ஜப்பானையும் எதிர்ப்பதற்கு வேண்டிய ராணுவ நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள, நேசநாடுகளுக்கு இந்திய நாட்டில் தேவையான இடம் கொடுக்குமா?

பதில்: தேசிய சர்க்கார் நிறுவப்பெற்றதாகவே வைத்துக்கொள்வோம். நான் எதிர்பார்க்கிறதைப்போல, தேசிய சர்க்கார் அமைந்துவிடுமேயானல், ஆக்கிரமிப்பு நாடுகளை எதிர்த்துப் பாதுகாப்புக்கானவற்றைச் செய்யும்பொருட்டு, இந்திய தேசிய சர்க்கார் முதலில் நேசநாடுகளோடு ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளும். எந்த பாஸிஸ சர்க்காரோடும் இந்தியா தொடர்புவைத்துக்கொள்ளாது; பாஸி

ஸத்தை நசுக்க வேண்டியது பொதுவான காரியமாக இருப்பதால், இந்தியா எப்போதுமே நேசநாடுகளுக்குக் கருத்தளவிலாவது உதவி செய்யக் கடமைப்பட்டுத்தான் இருக்கும்.*

கேள்வி: பாசிஸப் போர் வெறியர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு, இந்திய தேசிய சர்க்கார் இன்னும் எந்தெந்த வகையில் நேசநாடுகளுக்கு உதவிபுரியத் தயாராயிருப்பார்கள்?

பதில்: தேசிய சர்க்கார் என்று சொல்லி வருகிறோமே, இந்தச் சர்க்காருக்கு, வழிகாட்டும் பொறுப்பு எனக்கு இருந்துவருமாயின், தெளிவாய் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின்பேரில், நேசநாடுகள் இந்திய மண்ணில் தங்கிப் போர் நடத்த இடம் கிடைக்குமேயன்றி, வேறு எவ்வித உதவியும் கிடைக்காது. ஆனால் இந்தியர் யாரேனும் தமது சொந்த முறையில் படையில் சேரவோ, அல்லது பணஉதவி செய்யவோ, அல்லது இரண்டையும் செய்யவோ முன்வந்தால், இதற்கு எவ்விதமான தடையும் இருக்கமாட்டாது. பிரிட்டிஷ் ஆதிக்கம் அகன்றவுடனே, இந்திய ராணுவமும் கலைக்கப்பட்டுவிடுமென்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்திய தேசிய சர்க்காருக்கு ஆலோசனை கூறும் நிலைமை எனக்கு இருக்குமானால், அந்தச் சர்க்காரின் பலம், செல்வாக்கு அனைத்தையுமே உலக சமாதானம் சித்திபெறுவதற்கென்றே

---

* நேசநாடுகளுடன் சுதந்திர இந்தியா உடன்படிக்கை செய்துகொள்ளக்கூடும் என்று சொல்லியதை விளக்கும்படி ராயட்டரின் லண்டன் நிருபர் கேட்டார். அதற்குக் காந்திஜி கூறிய மறுமொழி:

"நேசப்பாங்குடன் சுதந்திர இந்தியா உதவி புரிவதற்கு ஒரு எல்லையே இல்லை. ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்க்கச் சேனைக்கு உதவுவதுபற்றி, இந்தியாவும் நேசநாடுகளும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமென்பதே எனது கருத்து. பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் இருக்குமானால், மனித குலத்தின் மேன்மையையும் உரிமையையும் ஆயுத பலங்கொண்டு பாதுகாக்க முயலாது, வேறு வழிகளில் நாம் பாதுகாக்க முடியும். ஆயுத பலம் கொண்டு பாதுகாக்க முனைவதென்றால், மக்களைப் படுகொலை செய்வதில் யார் அதிகம் என்று பார்ப்பதேயாகும். இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுபட்டால், நேசநாடுகளின் லட்சியமே வேறு வகையில் அமையும் என்பதையும், இதனால் வெற்றி நிச்சயமாய் விரைவிலே கிடைத்துவிடும் என்பதையும் பிரிட்டிஷ் பொதுமக்கள் உணரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்".

ஹரிஜன்: ஜூன், 28, 1942

உபயோகிக்கப்பெறும். . ஆனல், தேசிய சர்க்கார் நிறுவப் பெற்ற பிறகு, என் வார்த்தைக்கு மதிப்பில்லாமலும் போக லாம். தேசிய இந்தியாவுக்கு யுத்த வெறி பிடித்தாலும் பிடிக்கலாமல்லவா ?

கேள்வி : இந்தியாவும் நேசநாடுகளும் ஒன்றுசேர்ந்து ஒத் துழைப்பதற்கு, நேச உடன்படிக்கையில் திட்டம் வகுக்கலாமா? அல்லது, பரஸ்பர உதவிக்கான ஒப்பந்தத்தில் திட்டம் வகுக்கலாமா? அல்லது, இப்படி வகுப்பது அவசியமா? தங்கள் அபிப்பிராய மென்ன?

பதில்: இந்தக் கேள்விக்கு இது சந்தர்ப்பமல்ல ; எப் படியானலும், இருந்துவரும் தொடர்பை ஒழுங்குபடுத்து வதற்கு உடன்படிக்கையோ ஒப்பந்தமோ அவ்வளவு முக் கியமன்று. இதில் எவ்வித வேற்றுமையும் எனக்குப் புலப் படவில்லே.

என்னுடைய கருத்தைத் தொகுத்துச் சொல்லுகிறேன். என்னைப் பொறுத்தவரை, ஒரு விஷயம், இந்த ஒரு விஷய மட்டும் திட்டமானது, நிச்சயமானது. நேசநாடுகள் நிச்சயம் வெற்றிபெற வேண்டுமென்ருல், இயற்கைக்கு மாருன முறையில், மகத்தான இந்த நாட்டினரைத் துன்புறுத்து வதுநின்றுபோக வேண்டும். இந்நாட்டை, பலதேசங்களின் தொகுதி, அல்லது பல இனத்தவரின் தொகுதி என்று கூறுகிருர்கள் ; இக்கூற்றுப் பொருந்தவே பொருந்தாது. நேசநாட்டினரின் போக்கு நீதிமுறைமையை அடிப்படை யாகக்கொள்ள வில்லே. பாஸிஸ அல்லது நாஸிஸ ஆதிக்கத் திற்கும் நேசநாடுகளின் ஆதிக்கத்திற்கும் எவ்வித வேறு பாடும் எனக்குப் புலப்படவில்லே. இவர்கள் அனைவரும் பிற நாட்டினரைச் சுரண்டும் தொழிலுடையவர்கள் ; தங்கள் எண்ணம் கைகூடி வருவதற்கு வேண்டிய கொடுமைகளே எல்லாம் இவர்கள் புரிகிருர்கள். அமெரிக்காவும் பிரிட்டனும் மகத்தான பெரிய சமுதாயங்கள்தாம் ; இதில் சந்தேக மில்லே. ஆயினும், வாயற்றவர்களான ஆப்பிரிக்க மக்கள் ஆசிய மக்கள் ஆகியோரை ஒதுக்கிவைக்கிற கொடுமையைக் கருதும்போது, இந்த இரு நாட்டினரின் பெருமை யெல் லாம் வெறும் தூசிக்கு ஒப்பாகும்; உள்ள சீர்கேட்டைத் திருத்துவதற்கு, இவர்கள் மட்டுமே ஆற்றலுடையவர்கள்,

4

தங்கள் நடத்தையை ஒழுங்குபடுத்தி, தங்களிடம் காணப்படுகிற இந்த மாசை போக்கிக்கொள்ளாதவரை, மனித சுதந்திரத்தையும் மற்றெதையும்பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கு உரிமையே இல்லை. இவ்விதம் தங்களைப் பரிசுத்தப் படுத்திக்கொள்வார்களாயின், இவர்கள் வெற்றி பெறுவது திண்ணம். ஏனெனில் அப்போது கோடிக்கணக்கான ஆப்பிரிக்க, ஆசிய மக்களின் நல்லெண்ணம் இவர்கள் பக்கம் வந்துசேரும்; இந்த நல்லெண்ணத்தை அவர்கள் வெளிப் படையாகத் தெரிவிக்காவிட்டாலும், இது அவர்கள் மனத்திலிருப்பது உண்மைதான். அமெரிக்கரும் பிரிட்டிஷாரும் அப்போதுதான் - அப்போது மட்டுமே - ஒரு புதிய சமுதாயத்தை நிறுவதற்காகப் போராடுகிறார்கள் என்று சொல்வது உறுதியாகும்; அதுவரையில் உறுதியாகாது. இது ஒன்றுதான் உண்மையான காரியம்; மற்றதெல்லாம் வெறும்கற்பனை. என்னுடைய நல்ல நோக்கத்தைச் சோதித்துக் காட்டும் பொருட்டும், எனது யோசனையின் கருத்தென்ன வென்பதை விளக்கிக்காட்டும் பொருட்டும், இவ்விதமாக நான் சற்று விரித்துப் பேச நேர்ந்தது.

# முக்கியமான ஒரு பேட்டி

*"இந்தியா முழுதுமே அஹிம்சையைக் கடைப்பிடித்திருக்குமாயின், நான் பிரிட்டனுக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டிய அவசியமே ஏற்பட்டிராது. கோடிக்கணக்கான மக்கள் அஹிம்சை முறையில் போர்செய்வார்கள் என்று நான் பிரிட்டனிடம் சொல்லிக்கொள்ளவில்லை. தவிர, நாங்கள் மேற்கொண்ட சாத்துவிகப் போரை பலமற்றவர்களது அஹிம்சை என்பதாகப் பிரிட்டிஷார் அலட்சியம் செய்துவிட்டார்கள். நியாயமுறையில் அடிப்படையான நீதி வேண்டும் என்று பிரிட்டிஷாரிடம் வேண்டிக்கொள்வதுதான் நான் செய்யக்கூடியது. இந்த வேண்டுகோள் பிரிட்டிஷாரின் இதயத்தில் அனுதாபத்தை உண்டுபண்ணவேண்டும். நீதிமுறைமை பற்றியே இவ் வேண்டுகோளை விடுக்கிறேன்."*

வெய்யில் கொடுமையாகக் காய்ந்துகொண்டிருந்த ஒரு நாள், பிற்பகலில், அமெரிக்கப் பத்திரிகை நிருபர் இருவர் காந்திஜியைக் காணவந்தார்கள். ஒருவர் பெயர் சாப்ளின், இண்டர்நேஷனல் நியூஸ் சர்விஸ் என்ற செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர். மற்றவர் பெயர் பெல்டன். இவர், லைப், டைம் ஆகிய பத்திரிகைகளுக்குப் பிரதிநிதி யாவார்; சீனா, பர்மா ஆகிய தேசங்களிலிருந்து சமீபத்தில்தான் திரும்பினர். காந்திஜியை விரைவில் கைதுசெய்தாலும் செய்யக்கூடும் என்று இவர்கள் புது டெல்லியில் கேள்விப்பட்டனர். எனவே, எந்த நேரத்தில் வந்து கண்டு பேசலாம் என்று முன்னதாகவே ஏற்பாடு செய்துகொள்ளாமல் மிக்க விரைவாய்க் காந்திஜியை இவர்கள் காணவந்தார்கள்.

இவர்கள் வந்தபோது, காந்திஜி வேறொரு அமெரிக்கரோடு ஆழ்ந்து விவாதித்து முடித்திருந்தார். எனவே, இவர்களைக் கண்டதும், காந்திஜி, "இதுவரை அமெரிக்கரொருவர் என்னைத் துண்டம் துண்டமாகச் சோதனை போட்டார். இனி நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்" என்றார்.

### சாத்விக ஒத்துழையாமை ஏன்?

சமீபத்தில் காந்திஜியின் நடவடிக்கைகளைப்பற்றி வந்துள்ளவை அனைத்தையும் அவர்கள் படித்திருந்தார்கள்.

குறித்த ஒரு சந்தர்ப்பத்தில், அவர் சொல்லியவற்றைச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமில்லாதபடி எடுத்து வெளியிட்டிருந்தவற்றையும் காந்திஜியைப்பற்றிப் பலர் எழுதியிருந்தவையனைத்தையும் இவர்கள் படித்திருந்தார்கள். "தங்கள் குறைபாடுகள் மட்டுமே புது டெல்லியில் தெரிகின்றன; சிறப்புக்கள் தெரியவில்லை" என்று ஒரு பத்திரிகைக்காரர் காந்திஜியிடம் முன்னமே சொல்லியிருந்தார். எனவே, இவர்கள் தாங்கள் கேள்விப்பட்டவற்றில் ஏதாவது தவறான அபிப்பிராயம் இருக்குமாயின், அதைத் திருத்திக்கொள்ள ஆவல்கொண்டிருந்தார்கள். நேரடியாக ஜப்பானியரை எதிர்த்துப் போரிடாமல், சாத்விக ஒத்துழையாமையை ஏன் மேற்கொள்ள வேண்டும்? சாத்துவிக ஒத்துழையாமையானது, தடைசெய்வதற்குப் பதிலாக, இந்தியாமீது படையெடுக்கும்படி ஜப்பானியரைத் தூண்டுவதாக முடியவுங் கூடும். இது சிறிய ஆபத்தை விட்டுப் பெரிய ஆபத்தை விரும்பி அழைத்த கதையாக முடியும் என்று அவர்கள் அஞ்சினார்கள்.

இதற்குப் பதில் கூறும் முறையில், காந்திஜி, ஓர் எதிர்க்கேள்வி கேட்டார்:

"என்னுடைய ஆலோசனை ஒரு புறம் இருக்கட்டும். யுத்ததந்திர முறைகளை அனுசரித்து, இங்கிலாந்து இந்தியாவிலிருந்து வேறிடத்துக்குச் சென்றுவிடுவதாக வைத்துக்கொள்வோம்; சமீபத்தில் பர்மாவில் அவர்கள் இப்படி நடக்கவேண்டியிருந்தது; அந்த நிலையில் நேரக்கூடியது என்ன? இந்தியா என்ன செய்யும்?"

"இதைத் தெரிந்துகொள்ளத்தான் நாங்கள் தங்களிடம் வந்திருக்கிறோம். அதைத் தெரிந்துகொள்வதில் எங்களுக்கு மிக்க ஆவல்தான்."

"நல்லது. இங்குதான் எனது அஹிம்சை உபயோகமாகிறது. எங்களிடம் போர்க்கருவிகள் இல்லை. தவிர, அமெரிக்க, பிரித்தானியப் படைகளின் சேனாதிபதியானவர் இந்தியா போர்த்தளமாவதற்குத் தகுந்த இடம் அல்லவென்று தீர்மானித்து, வேறோர் இடத்திற்குப் போவதே சரியென்று எண்ணி, நேசநாடுகளின் படைகளையெல்லாம்

அங்கே கொண்டுபோய்விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்படி நடந்துவிட்டால் எங்களிடமுள்ள பலத்தையே நாங்கள் நம்பியிருக்க வேண்டியவர்கள். எங்களிடம் படையில்லை; போர்க்கருவிகள் இல்லை; ராணுவ தளவாடங்கள் இல்லை; இவை மட்டுமா? ராணுவ தந்திர முறைகளையும் நாங்கள் அறியோம். எனவே, அஹிம்சை ஒன்றை மட்டுமே நாங்கள் நம்பியிருக்க வேண்டும். பரிசீலனை செய்தாலும்கூட, அஹிம்சா முறையில் செய்கிற எதிர்ப்பானது நிச்சயமாக வெற்றி தரும் என்று நான் கொள்கையளவிலாவது உங்களுக்கு நிருபித்துக்காட்ட முடியும். ஒரு ஜப்பானியனைக் கூடக் கொல்லவேண்டிய அவசியமிராது; அவர்களுக்குச் சிறிதேனும் இடங்கொடாமல்தான் இருப்போம்.''

"ஆனால், அஹிம்சா முறையைக் கொண்டு, படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முடியாதே?''

"அஹிம்சா முறைப் போராட்டத்தில், படையெடுப்பைத் தடுப்பதற்குரிய உபாயம் இல்லை என்பது உண்மைதான். ஜப்பானியர் படையெடுத்து இந் நாட்டிற்குள் நுழையலாமாயினும், அவர்களுடன் ஒத்துழைப்பவர் ஒருவருமே இருக்கமாட்டார்கள். இங்குள்ள 40 கோடி மக்களையும் தங்கள் கொடுமையினல் அவர்கள் அழித்தாலும் அழித்துவிடக் கூடும். இது ஒரு பூரண வெற்றியாகலாம். முட்டாள்த்தனமான காரியமாகத் தோன்ருவிட்டாலும், மனித இயல்புக்கு அப்பாற்பட்ட காரியம் என்று சொல்லி இதைக் கேட்டு, நீங்கள் சிரித்தாலும் சிரிக்கக்கூடு மென்பதை நான் அறிவேன். நீங்கள் சொல்வதை நான் சரியென்று ஒப்புக்கொள்கிறேன்; அவர்கள் இழைக்கும் கொடுமைகளை தாங்கமுடியாது இப்போதுள்ளதைவிடக் கேவலமான அடிமைப் படுகுழியில் நாங்கள் ஒரு வேளை விழுந்தாலும் விழ நேரலாம். ஆயினும் கொள்கையளவில்தான் நாம் விவாதிக்கிருேம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.''

"பிரிட்டிஷார் வாபஸ் ஆகாவிட்டால்?''

"சந்தர்ப்ப வசத்தாலோ, அல்லது இந்தியர் செய்யும் கட்டாயத்தினலோ, பிரிட்டிஷார் வாபஸ் ஆகவேண்டுமென்று நான் கேட்கவில்லை. தங்கள் சொந்த நலனையும்

புகழையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டியே அவர்கள் வெளியேற வேண்டுமென்று நான் சொல்லுகிறேன்.''

"தங்களைக் கைது செய்தாலும் செய்யக்கூடும் என்று நாங்கள் கேள்விப்பட்டோம். அப்படிக் கைது செய்யப் பட்டால், தங்கள் இயக்கம் என்னவாகும்? அல்லது நேரு வைக் கைது செய்தால் என்னவாகும்? உங்கள் இயக்கம் சிதைந்து போகாதா?''

"நாங்கள் பொதுஜனங்களிடையே கலந்து வேலை செய்து வந்திருக்கிறோமென்பது உண்மையானால், இயக்கம் சின்னபின்னப்படாது. எங்களைக் கைது செய்வார்களா யின், இயக்கம் தானாகவே வலிமைபெற்றுவிடும்; இதனால் இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் தம்மால் இயன்றதைச் செய்ய உள்ளக் கிளர்ச்சியோடு முன்வருவார்கள்.''

"ஒரு மனிதனாவது இந்தியாவில் எஞ்சிநிற்கும்வரை போராடுவதற்குப் பிரிட்டன் தயாராயிருக்குமானால், உங்களு டைய சாத்விக ஒத்துழையாமை இயக்கம் ஜப்பானியருக்கு உதவுவதாய்த்தானே இருக்கும்?'' என்று தாம் முன்பு கேட்டகேள்வியையொட்டி, சாப்ளின் மறுபடியும் கேட்டார்.

"பிரிட்டிஷாருடன் ஒத்துழையாதிருப்பது என்பது உங் கள் கருத்தாயின் நீங்கள் சொல்வது சரிதான். அந்த நிலைக்கு நாங்கள் இன்னும் வரவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைப்பதாயினும், ஜப்பானியருக்கு உதவிபுரியும் நோக்கம் எனக்கு இல்லை. சுதந்திரம் அடைவதற்காகச் சென்ற ஐம் பது அறுபது ஆண்டுகளாகப் போராடி வந்ததில், தேசபக்தி யையும், எந்த அன்னிய ஆதிக்கத்திற்கும் தலை குனிந்து நிற் பதில்லை என்ற பாடத்தையும் இந்தியா கற்றுக்கொண்டிருக் கிறது. ஆனால், பிரிட்டிஷார் பலாத்காரப் போர் நடத்தும் போது பலாத்காரமற்ற எங்கள் போராட்டம் பயனற்றுப் போய்விடும். பலாத்கார எதிர்ப்பில் நம்பிக்கை உள்ளவர் களும் பிரிட்டிஷாருக்கு ராணுவ உதவி செய்ய விரும்புகிறவர் களும், நிச்சயமாக, உதவி செய்யவே செய்வார்கள்; அப்படி உதவி செய்தே வருகிறார்கள். பிரிட்டிஷாருக்குத் தேவைப் படும் செல்வம், ஆட்கள் அனைத்துமே கிடைத்து வருவதாக அமெரி சொல்லுகிறார்; அவர் சொல்வது சரிதான். காங்கி

ரஸோ கோடிக்கணக்கான ஏழை மக்களுக்குப் பிரதிநிதியாக விளங்கும் ஒரு ஏழை ஸ்தாபனம். 'மனமுவந்து' தந்த பொருள் என்ற பெயரால் ஒரு நாளில் சர்க்கார் வசூலித்து இருக்கிறதொகைகூட, காங்கிரஸால் இத்தனை ஆண்டுகளிலும் வசூலிக்க முடியவில்லை. எனவே, இப்படிப்பட்ட காங்கிரஸ், பலாத்காரமற்ற வழிகளில்தான் உதவிபுரியக்கூடும். உங்களுக்குத் தெரிந்திராவிட்டால், நான் ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். பிரிட்டிஷார் இந்த உதவியை விரும்பவில்லை; இதைப் பெரிதாக அவர்கள் எண்ணினாலும் சரி எண்ணவிட்டாலும் சரி, பலாத்கார எதிர்ப்பும் பலாத்காரமற்ற எதிர்ப்பும் ஒன்றுசேர்ந்து நடைபெற முடியாது. எனவே, இந்தியாவின் சாத்விக ஒத்துழையாமை என்பது, முடிவாக ஒரு செயலும் செய்யாமலிருப்பதே யாகும். அதாவது பிரிட்டிஷ் படைகளுக்குத் தடைசெய்யாமலும், ஒருபோதும் ஜப்பானியருக்கு உதவி புரியாமலும் இருப்பதேயாகும்."

"பிரிட்டிஷாருக்கு உதவிபுரியாம லிருப்ப தாகுமா?"
"சாத்விக முறையில் வேறு எவ்வித உதவியும் செய்ய முடியாது என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?"

"ரயில்வேக்களை நீங்கள் தடைசெய்யமாட்டீர்களென நம்புகிறேன். அப்படியே அரசாங்க இலாகாக்கள் தங்கள் வேலையைச் செய்துவர அனுமதி யுண்டல்லவா?"

"இன்று இவற்றை அனுமதித்திருப்பது போலவே, அப்போதும் அவை நடைபெறும்படி விட்டுவைப்போம்."

"இப்படி விட்டுவைப்பதனால், ரயில்வேக்களையும் அரசாங்க இலாகாக்களையும் அப்படியே விட்டுவிட்டால் நீங்கள் பிரிட்டிஷாருக்கு உதவி செய்வதாகத்தானே ஏற்படும்?" என்று கேட்டார் பெல்டன்.

"உண்மைதான். நாங்கள் பிரிட்டிஷாருக்குத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்ற கொள்கையின் பயனாகவே இந்த நிலைமை ஏற்படுகிறது."

### நல்லதல்ல

"அமெரிக்கத் துருப்புகள் இந்தியாவில் தங்கி இருப்பதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? இந்தியா

சுதந்திரம் அடைய உதவிபுரியவேண்டும் என்ற உணர்ச்சி ஒவ்வொரு அமெரிக்கருக்கும் இருந்து வருகிறது.”

“அது அவ்வளவு நல்ல காரிய மல்ல.”

“நாங்கள் உண்மையாகப் பிரிட்டிஷாருக்குத்தான் உதவுகிறோம், இந்தியாவுக்கு அல்ல என்கிற காரணத்தினாலா?”

“இந்தியரின் சம்மதம் பெறாமலே, அமெரிக்கர்களை இங்கு கொண்டுவந்து திணித்திருப்பதனாலேதான், அது நல்ல காரியமல்ல என்று சொல்லுகிறேன். இந்தியரின் சம்மதத்தினாலேயோ, அலலது அவர்களுடைய வேண்டுகோளின்பேரிலோ அமெரிக்கர் இங்கு வரவில்லை. எங்களைக் கலந்து ஆலோசனை செய்யாமலே, எங்களை இந்த யுத்தத்தில் இழுத்து மாட்டிவிட்டார்கள். நாங்கள் மனம் நொந்து கொள்வதற்கு இது ஒன்றே போதுமானது. வைசிராய் பிரபு தம்முடைய நிர்வாக சபையைக்கூடக் கலந்து ஆலோசிக்க வில்லை! நாங்கள் கூறுகிற முக்கியமான குற்றச் சாட்டும் இதுதான். அமெரிக்கப் படைகளை இங்கு கொண்டு வந்து இறக்கி இருப்பதானது, மூச்சுத் திணறும்படி எங்களைப் பற்றியிருப்பதை இன்னும் அழுத்திப் பிடிப்பதாகும் என்றே நான் கருதுகிறேன்.

“இந்தியாவில் நடப்பவற்றைப்பற்றி நீங்கள் யாதொன்றும் அறியமாட்டீர்கள். இவற்றை ஆராய்வது உங்கள் வேலையு மல்ல. ஆனாலும், சில உண்மைகளை நான் உங்களிடம் சொல்லுகிறேன். ராணுவத்திற்கு இடம் தேவைப்படுகிறதென்று சொல்லி, ஆயிரக்கணக்கான கிராமவாசிகளை, உடனே வீடுவாசல்களைவிட்டு வெளியேறும்படி நிர்தாட்சண்யமாய் உத்தரவு போடுகிறார்கள். அவர்கள் எங்கே போவது என்று நான் கேட்கிறேன். ஓரிடத்திலுள்ள ஏழைத் தொழிலாளிகள் ஆயிரக்கணக்கானவர்களை வெளியேறும்படி உத்தரவிட்டதாக நான் இன்று கேள்விப்பட்டேன். அவர்களுக்கு முன்கூட்டியே யாதொரு விதமான அறிவிப்பும் இல்லை. ஏதோ சொற்பத் தொகை மட்டும் அவர்களுக்கு நஷ்டஈடாய்க் கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். சுதந்திரமுள்ள நாட்டில் இவ்விதம் நடைபெறாது. ராணுவத்தைச் சேர்ந்த சாப்பர், மைனர் என்ற

ஊழிய வர்க்கத்தார் இவர்களுக்கு முதலில் வீடுகட்டிக் கொடுப்பார்கள். போக்குவரத்து வசதி செய்து கொடுப்பார்கள். ஆறு மாத காலம் வாழ்வதற்குத் தேவைப்படும் அளவு பணமும் கொடுப்பார்கள். ஏனெனில் இவர்கள் தங்கள் பழகிய இடத்திலிருந்து அடியோடு பிரிக்கப்பட்டு விட்டார்களல்லவா? ஜப்பானியர்கள் இங்கு வருவதற்கு முன்னரே, இந்தவிதமான காரியங்கள் இங்கு நடைபெற வேண்டுமா என்ன? "நீங்கள் வெளியேற வேண்டும், என்று சொல்லுவதைத் தவிர வேறுவழி எங்களுக்குப் புலப்படவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி நின்றுவிடுமாயின், நீதிமுறைமையையொட்டிய அந்தச் செய்கை, அமெரிக்காவையும் பிரிட்டனையும் பாதுகாக்கும். நண்பர்கள் என்ற முறையில் அமெரிக்கரும் பிரிட்டிஷாரும் இந்தியாவில் இருக்கலாமே யன்றி, எஜமானர்கள் என்ற முறையில் இருக்கக்கூடாது. அமெரிக்கப் போர்வீரர்களும் பிரிட்டிஷ் போர்வீரர்களும் இங்கு வசிப்பதா யிருந்தால், சுதந்திர இந்தியாவின் அனுமதி பெற்றே அவர்கள் இங்கு வசிக்கலாம்."

"இந்தியத் தலைவர்களும் மகாஜனங்களும் ஒன்று சேர்ந்து, இந்த நிலையை விரைவில் அடைவதற்கு முயல்வது அவசிய மல்லவா?"

"எங்குமே இந்தியாவில் கலகங்கள் ஏற்படவேண்டுமென்பது உங்கள் கருத்தா என்ன? அந்த எண்ணம் எனக்கு இல்லை. பிரிட்டிஷார் இந்நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று நான் சொல்வது, சோம்பேறித்தனத்தால் சொல்லும் வார்த்தை யன்று. வெளியேறச் சொல்பவர்கள் எவ்வளவோ தியாகங்கள் செய்துதான், பிரிட்டிஷாரை வெளியேறும்படி செய்யமுடியும். பொதுஜன அபிப்பிராயமும் சேர்ந்து அவர்களை நெருக்க வேண்டும்; பொதுஜன அபிப்பிராயம் பலாத்காரமற்ற முறையில்தான் நெருக்கமுடியும்."

"வேலை நிறுத்தங்கள் நடைபெறுவது அசாத்தியம் என்பது கருத்தா?" என்று கேட்டார் பெல்டன்.

"இல்லை" என்று சொன்னார் காந்திஜி. "வேலை நிறுத்தங்கள் பலாத்காரமற்ற முறையிலேயே நடைபெற முடியும்; அப்படியே நடைபெற்று யிருக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சி

இந்தியாவில் பலப்படுவதற்கு, ரயில்வேக்கள் உதவுமாயின், அவை நடைபெற உதவிபுரியத் தேவையில்லை. ஆனால், சுறு சுறுப்பாகச் செயலில் இறங்க முடிவுசெய்யுமுன், எனது கோரிக்கை நியாயமானது என்பதை நான் எடுத்துக் காட்ட முயலவேண்டும். இந்தக் கோரிக்கைக்குப் பிரிட்டிஷார் இணங்குவார்களாயின், மனக்கசப்புடன் இருக்கும் இந்தியா, நேசப்பான்மையுடைய இந்தியாவாக மாறிவிடும். ஜப்பானி யர்களை இங்கு வரவிடாமல் தடுப்பதில் பிரிட்டிஷாரைவிட எனக்கு அதிக அக்கரை உண்டு என்பது ஞாபகமிருக்கட்டும். இந்தியாவை யொட்டிய கடற்போரில் பிரிட்டிஷார் தோல்வி அடைவார்களாயின், அவர்கள் இழப்பது இந்தியா மட்டுமே யாகும்; ஆனால், ஜப்பான் வெற்றிகொள்ளுமேயானல், இந்தியா, எல்லாவற்றையுமே இழந்துவிடுகிறது.''

### சரியான சோதனை

"அமெரிக்கப் படைகளை, திணிக்கப்பட்ட படைகள் என்று தாங்கள் கருதுவீர்களேயானல், 'அமெரிக்க டெக்க னிக்கல் மிஷினை'யும் (யந்திர)சம்பந்தமான தூதுகோஷ்டி யையும் அதேபோலத் தாங்கள் கருதுகிறீர்களா?'' இது அடுத்த கேள்வி.

''பழத்தைக்கொண்டுதான் மரத்தை மதிப்பிட வேண் டும்'' என்று காந்திஜி சுருக்கமாய்ப் பதில் சொன்னர். "நான் டாக்டர் கிரேடியைச் சந்தித்தேன். அவரோடு மனம்விட்டுப் பேசினேன். அமெரிக்கர்மீது எனக்கு மனக்கசப்பு இல்லை. ஆயிரக்கணக்கில் இல்லாவிட்டாலும், நூற்றுக்கணக்கில் எனக்கு அமெரிக்காவில் நண்பர்கள் இருக்கிறார்கள். இந்தி யாவிடம் அமெரிக்க டெக்கனிக்கல் மிஷனுக்குப் பூரண நல் லெண்ணமே இருக்கலாம். ஆனல் இந்தியாவின் விருப்பத் துக் கிணங்கியோ, அல்லது வேண்டுகோளுக் கிணங்கியோ இவர்கள் இங்கு வரவில்லை. எந்தக் காரியமும் எங்கள் விருப் பம் பெற்று நடைபெறவில்லை என்பதுதான் நான் சொல்ல விரும்பும் முக்கிய விஷயம். எனவே யாவற்றையுமே சந்தேகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. எங்கள் கண்முன்பே, நான் முன்பு தெரிவித்தபடி, எத்தனையோ

காரியங்கள் தினந்தோறும் நடைபெறுகின்றன. வேதாந்தி போலக் கலக்கமில்லாமல் இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பது எங்களுக்கு இயலாத காரியம். மக்கள் எப்படியேனும் பிழைத்துக்கொள்ளட்டும் என்ற எண்ணத்தோடு, இடங்களைக் காலிசெய்யச் சொல்லி, ராணுவ ஸ்தலங்களாக மாற்றிவிடுகிறார்கள். பர்மாவிலிருந்து வந்துகொண்டிருந்த ஜனங்கள் ஆயிரக்கணக்கில்லாவிட்டாலும், நூற்றுக்கணக்கில், உண்ண உணவின்றி, குடிக்கத் தண்ணீரின்றி மடிந்து போனார்கள். இப்படித் துன்புற்ற மக்களிடமும் வெள்ளையர் கறுப்பர் என்று பாகுபாடு செய்வதற்கு அரசாங்கத்தார் தயங்கவில்லை. வெள்ளையருக்கு ஒரு பாதை; கறுப்பருக்கு ஒரு பாதை. உணவும் தண்ணீர் வசதியும் வெள்ளையருக்கு உண்டு. கறுப்பு நிறத்தவருக்குக் கிடையாது! இந்தியாவுக்கு வந்த பின்னுங்கூட இவ்வித வித்தியாசங்கள்! ஜப்பானியர் வருவதற்கு முன்னரே, இந்தியாவை நசுக்கி ஒடுக்கி, இவ்விதம் இழிவுபடுத்துகிறார்கள். இவை யாவும் யாரைப் பாதுகாப்பதற்கு என்பதுதான் விளங்கவில்லை. ஆகவே, 'கடவுள் புண்ணியமாக இருக்கட்டும். இந்தியாவை அதன் பாட்டுக்கு விட்டுவிடுங்கள். நாங்கள் சுதந்திரம் என்ற காற்றைச் சுவாசிக்க விடுங்கள். அடிமைகள் விடுதலையானவுடன், தொல்லைகளை அனுபவிக்க நேர்ந்தது போல், நாங்கள் பல தொல்லைகளை அனுபவிக்க நேர்ந்தாலும் பாதகமில்லை. போலியான இந்த நடைமுறைக்கு ஒரு முடிவு ஏற்படவேண்டும்' என்ற ஒரு நேர்மையான கோரிக்கையை, நான் கேட்கவேணுமென்ற முடிவு ஒரு நாள் என் மனத்தில் எழுந்தது.''

"நீங்கள் பிரிட்டிஷ் துருப்புகளைப்பற்றி மட்டுமே அவ்விதம் எண்ணி இருப்பீர்கள். அமெரிக்கத் துருப்புகளைப் பற்றி நீங்கள் அவ்விதம் எண்ணி இருக்கமாட்டீர்களே?''

"இரண்டு விஷயத்திலும் எனக்கு வித்தியாசமில்லை. ஏனெனில், இன்றையப் போக்கு முழுதும் ஒன்றே, பிரித்துப் பார்க்க முடியாது.''

"தாங்கள் சொல்லுவதைப் பிரிட்டன் கேட்கும் என்ற நம்பிக்கை உண்டா?''

"எனக்கு எப்போதுமே அந்த நம்பிக்கை உண்டு. சாகும் தறுவாயிலும் எனக்கு அந்த நம்பிக்கை இருக்கவே செய்யும். நான் இன்னும் அதிக காலம் உயிருடன் இருப் பேனாகில், எனது நம்பிக்கை நிறைவேறினாலும் நிறை வேறக்கூடும். நான் சொல்வதில் நடைமுறைக்கு ஒவ்வாத செயல் எதுவும் இல்லை. சமாளிக்க முடியாத சங்கடங்களும் இல்லை. மனமுவந்து இந்தக் காரியத்தைப் பிரிட்டன் செய்ய முன்வராவிட்டால், பிரிட்டன் வெற்றியடையத் தகுதி யற்றது."

### சுதந்திர இந்தியா என்ன செய்யும்?

பிரிட்டிஷார் இந்திய நாட்டை விட்டு ஒழுங்கான முறை யில் வவளியேறுவதன் பலனாக, கடுகடுப்புள்ள இந்தியா, நட்புரிமையுடைய நாடாக மாறிவிடும் என்று காந்திஜீ மீண்டும் மீண்டும் பலமுறை குறிப்பிட்டிருந்தார். அப்படி ஏற்படும் நட்புரிமை என்பது எத்தகையது என்பதை இந்த அமெரிக்க நண்பர்கள் ஆராய விரும்பினார்கள். "சுதந்திர இந்தியா, ஜப்பான்மீது யுத்தப் பிரகடனம் செய்யுமா?" என்று கேட்டார்கள்.

"சுதந்திர இந்தியா பிரகடனம் செய்ய வேண்டிய அவசிய மில்லை. நெடுநாளையப் பாக்கியாயிருந்த கடனைத் திருப்பிக் கொடுத்தற்கு நன்றிபாராட்டும் பொருட்டே, நேச நாடுகளுடன் இந்தியா நட்புரிமை பூண்டிருக்கும். கடன் வாங்கினவன் கடனைத் திருப்பித்தரும்போது, கடன்கொடுத் தவன் அவனுக்கு நன்றி கூறுவது மனித இயற்கை."

"அப்படியானால், இந்தியாவுக்குச் சாத்துவிகமே லட் சியமாயிருக்கும்போது இந்த நட்புரிமை பொருந்துமா?"

"இது ஒரு சரியான கேள்வி. இந்தியா முழுதுமே இப் போது அஹிம்சையைக் கடைப்பிடிக்க வில்லை. இந்தியா முழுதுமே அஹிம்சையைக் கடைப்பிடித்திருக்குமாயின், நான் பிரிட்டனுக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டிய அவ சியமே ஏற்பட்டிராது. ஜப்பானியப் படையெடுப்பு ஏற்படுமோ என்ற அச்சமும் இராது. நான் சொல்லுகிற அஹிம்சையை அனேகமாய், மிகமிகக் குறைந்த தொகை

யினரான மக்களே பின்பற்றுகிறார்கள்; அல்லது ஒரு வேளை இயல்பாகவே அஹிம்சைப்பற்றுள்ள வாயில்லாப் பூச்சிகள் என்னத் தக்க கோடிக்கணக்கான பாமரமக்கள் பின்பற்றுவதாக வைத்துக்கொண்டாலும் கொள்ளலாம். அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்கலாம். அவர்கள் ஒன்றுமே செய்துவிடவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், முடிவான சோதனைக் காலம் வரும்போது அவர்கள் தங்கள் கடமையைச் செய்யக்கூடும். ஒருகால் செய்யாமலும் போகலாம். கோடிக்கணக்கான மக்கள் அஹிம்சை முறையில் போர்செய்வார்கள் என்று நான் பிரிட்டனிடம் சொல்லிக்கொள்ள வில்லை. தவிர, நாங்கள் மேற்கொண்ட சாத்துவிகப் போரை பலமற்றவர்களது அஹிம்சை என்பதாகப் பிரிட்டிஷார் அலட்சியம் செய்து விட்டார்கள். நியாயமுறையில் அடிப்படையான நீதி வேண்டும் என்று பிரிட்டிஷாரிடம் வேண்டிக்கொள்வதுதான் நான் செய்யக்கூடியது. இந்த வேண்டுகோள் பிரிட்டிஷாரின் இதயத்தில் அனுதாபத்தை உண்டுபண்ண வேண்டும். நீதிமுறைமை பற்றியே இவ் வேண்டுகோளை விடுக்கிறேன். உடல்வருந்த முயன்று, எவ்வளவு பெரிய இன்னல் வந்த போதிலும் பிரிட்டிஷார் தைரியத்தோடு நிற்பதுபோல, நீதி முறைமையை மனதில்கொண்டு, பிரிட்டிஷார் துணிந்து காரியத்தைச்செய்ய முன்வந்து, இந்தியாவின் கோரிக்கை எதுவாயிருந்தபோதிலும் இந்தியா இனிச் சுதந்திர நாடு என்று பிரகடனம் செய்ய முன்வர வேண்டும்."

### முஸ்லிம்களைப்பற்றி என்ன?

"ஜின்னா சொல்வதைப்போல், ஹிந்துக்களின் ஆட்சியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று முஸ்லிம்கள் சொல்வார்களாயின், சுதந்திர இந்தியா என்பதற்குப் பொருள் யாது?"

"காங்கிரஸினிடமோ, அல்லது ஹிந்துக்களிடமோ இந்தியாவை ஒப்படைத்துவிடும்படி நான் பிரிட்டிஷாருக்குச் சொல்லவில்லை. இந்தியாவைக் கடவுளிடம் ஒப்படைத்து விடுங்கள் என்றே சொல்லுகிறேன். அல்லது தற்கால

பாஷையில், அராஜகம் நிலவும்படி விட்டுவிடட்டும். பின்னர் பல கட்சினரும் ஒருவரோடொருவர் நாய்கள்போல் சண்டையிட்டுக்கொள்வார்கள். பொறுப்புணர்ச்சி அவர்களுக்கு ஏற்படும்போது, தாங்களாகவே நியாயமான முறையில் ஒப்பந்தம் செய்துகொண்டுவிடுவார்கள். குழப்பம், கொந்தளிப்புக்கு மத்திலேதான், அஹிம்சை தோன்றுமென நான் எதிர்பார்க்கிறேன்.''

"இந்தியா சுதந்திர நாடு என்று பிரிட்டிஷார் யாரிடம் சொல்வது?'' என்று அவர்கள் பொறுமையிழந்தவர்களாய்க் கேட்டார்கள்.

ஒருசிறிதும் தயக்கமின்றி "உலகத்தாரிடம் சொல்லட்டுமே'' என்ருர் காந்திஜி. இப்படிச் சொன்ன உடனே இந்தியச் சேனை கலேபட்டுவிடும், கூடிய விரைவில் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு வெளிக்கிளம்பப் பிரிட்டிஷார் முடிவு செய்ய வேண்டும். அல்லது யுத்தம் முடிந்த பிறகுதான் அவர்கள் போவதாகச் சொல்லலாம். ஆனல் அவர்கள் இந்தியாவின் உதவியை எதிர்பார்க்கக் கூடாது. இந்தியா மனமுவந்து தானேகொடுப்பதைப் பெற்றுக் கொள்ளவேண்டுமே யொழிய, வரிவிதிக்கவோ, பட்டாளத்திற்கு ஆள்சேர்க்கவோ கூடாது. பின்னர், இந்தியாவுக்கு என்னநேர்ந்தாலும் சரி, அந்தக் கணமே பிரிட்டிஷ் ஆட்சி ஒழியும். இன்று அவ்வாட்சி முழுதும், போலி, பொய். இந்த நிலே ஒழிய வேண்டும். இந்தப் பொய்ம்மை ஒழிந்த பிறகே, புதிய அமைப்புமுறை ஏற்பட முடியும்.''

"சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதாக பிரிட்டனும் அமெரிக்காவும் சொல்லிக்கொள்வது சிறிதும் பொருந்தாது'' என்று பேச்சை முடிக்கும்போது காந்திஜி சொன்ஞர் "ஒருசமுதாயம் அனைத்தையும் கேவலமான பயங்கரமான அடிமைத்தனத்தில் பிணித்துவிட்டு, இப்படி வீண் பெருமை பாராட்டிக்கொள்வது முற்றும் பிசகான காரியம்.''

"தங்கள் கோரிக்கைக்குச் சாதகமாக அமெரிக்கா என்ன செய்யக் கூடும்?''

"குதர்க்கவாதத்திற்கு இடமில்லாதபடி, எனது கோரிக்கை நியாயமானதென்று ஒப்புக்கொண்டால்,

இந்தியாவின் கோரிக்கைக்கு இணங்கும்படி பிரிட்டனை அமெரிக்கா வற்புறுத்தவேண்டும். பிரிட்டனுக்குப் பொருள் உதவியும் அபாரமான ஒப்பற்ற அறிவு உதவியும் யந்திர உதவியும் செய்வதற்கு இதை ஒரு நிபந்தனையாக அமெரிக்கா சொல்லவேண்டும். பணம்கொடுக்கிறவர்களின் விருப்பப்படி நடந்துகொள்ளும்படி பாடகனை வற்புறுத்த, பணம் கொடுப்போருக்கு உரிமை உண்டு. நேசநாடுகளின் போர் முதலியவற்றில் அமெரிக்கா முக்கியப் பங்கெடுத்துக் கொண் டிருக்கிறபடியால், பிரிட்டன் செய்கிற தவறுகளிலும் அமெரிக்காவுக்குப் பங்குண்டு. உலகிலேயே மிகவும் புராதனமான ஒரு சமுதாயத்தையும், உலகிலேயே பெரும்பகுதியான நிலப் பகுதியையும் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொண்டு, நீதிமுறைமையில் நாஜிகளின் லட்சியத்தைவிட மேலான லட்சியத்திற்குத் தாங்கள் பாடுபடுவதாகச் சொல்ல, நேச நாடுகளுக்கு உரிமை இல்லை.''

மகாதேவ தேசாய்

# பிணத்தைத் தூர எறிந்துவிடுங்கள்

"உலகில் சமாதானம் நிலவும் பொருட்டும், சீனு, ருஷ்யா, நேசநாடுகள் ஆகியவற்றின் நலத்தை உத்தேசித்தும், பிரிட்டிஷ் ஆதிக்கம், இன்றேடு இந்தியாவில் ஒழிய வேண்டு மென்று சொல்ல விரும்புகிறேன்."

மாலுமி சிந்துபாத்தையும் அவன் தோள்மீது உட்கார்ந்து கொண்டு இறங்கமாட்டேன் என்றுசொன்ன கடல் வாழும் கிழவனையும்பற்றிய கதை எல்லோருக்கும் தெரியும். இந்தியாவைச் சிந்துபாத்து மாலுமிக்கும், பிரிட்டனைக் கடல் வாழும் கிழவனுக்கும் உவமை சொன்னுல் ஆச்சரியப் படுவதற் கில்லை. இது மிகவும் பொருத்தமான உவமை. சிந்து பாத்தின் தோளைவிட்டு இறங்காமலே இருந்துகொண்டு, பகைவனை அடிப்பதற்குச் சிந்துபாத்தின் ஒத்துழைப்பை அக் கிழவன் நாடுவதைப்போலத்தான், பிரிட்டன் இந்தியாவின் ஒத்துழைப்பை நாடுவதும் இருக்கிறது.

ஆனுல், சமீபத்தில் அளித்த பேட்டியில், காந்திஜி இந்த உவமானத்தை மாற்றிச் சொன்னுர். தமது தோள் மீது பெரும் சுமையான ஒரு பிணத்தைத் தூக்கிச்செல்லுகிற சிந்துபாத்து மாலுமிக்கு, பிரிட்டனையும் மற்ற நேச நாடுகளையும் உவமை கூறினுர். வெற்றியில் விருப்பம் இருந்தால், பிணத்தைத் தூர எறிந்துவிடும்படி நேச நாடுகளை அவர் வேண்டிக்கொண்டார்.

அமெரிக்கா அசோசியேடட்டுப் பிரசின் பிரதிநிதி மிஸ்டர் பிரஸ்டன் கிரோவர், காந்திஜியைப் பேட்டிகாணுவதற்காகவே, டெல்லியிலிருந்து வந்திருந்தார். அவரிடம் காந்திஜி தெரிவித்ததாவது: "உண்மையில் இந்தியாவுக்கு இந்த யுத்தத்தில் எவ்வித ஈடுபாடும் கிடையாது. இருப்பினும் இந்தியாவின் நோக்கம் ஜப்பான்மீதுதான் இருக்கிறது. இந்தியாவின் இயற்கைச்செல்வத்தை நீங்கள் இன்று உங்கள் மனம்போனவாறு பயன்படுத்தி வருகிறீர்கள்; ஆனுல் இது கொடுப்பதில் பிரியமில்லாத இந்தியாவினிடமிருந்து பலவந்தமாகப் பறிப்பதே யாகும். எனவே,

பிணம்போன்று, பாரமாக இருக்கும் இந்தியாவை, நீங்கள் சுமந்து செல்லுகிறீர்கள். இந்தப் பிணத்தின் கனமே வெற்றி கிடைப்பது சாத்தியம் இல்லாதபடி செய்துவிட லாம். தற்செயலாக இங்கிலாந்துக்கு அறிவுவந்து, நேசநாடு களுக்கும் அறிவுவந்து, இந்தப் பிணத்தைத் தூரஎறிந்து விடலாம் என்று அவை சொல்லுமானல், ராணுவதந்திரங் களும், மற்ற இயற்கைச் செல்வங்களும், அமெரிக்கா செய் கிற உதவியும் சேர்ந்து தரும் ஆக்கத்தைக் காட்டிலும், இந்த ஒரு செயலே மிகவும் மேலான ஆக்கத்தைத் தருவ தாக இருக்கும்.''

வழக்கம்போலவே, வெய்யில் தகித்துக்கொண் டிருந் தது. வேலைகளும் அதிகம் இருந்தன. உடல் நலம் இல்லா திருந்த மௌலான சேவாக்கிராமம் வருவதற்குப் பதிலாக, தாமே சென்று அவரைக் கண்டு பேசவேண்டி, காந்திஜி வர்தா செல்ல எண்ணினர். எனவே, நாங்கள் புறப்பட்டுச் சென்றபோது, சேத்ஜி பங்களாவிலிருந்து ஆறு பர்லாங் தூரம் சென்றதும், மோட்டார் பழுதாயிற்று. காந்திஜி கீழே இறங்கிக் கொடுமையான அவ் வெய்யிலில் நடக்க ஆரம்பித் தார். அவரைத் தொடர்ந்து என்னல் நடக்க முடியவில்லை. இரண்டொரு பர்லாங்கு நடந்ததும் முடியாமல் நின்றுவிட் டேன். பிறகு, ஒரு குதிரை வண்டியைப் பிடித்துக்கொண்டு நான் பங்களாவிற்குச் செல்வதற்குள், காந்திஜி அங்கு சென்றுவிட்டார். இந்தக் கொடிய வெய்யிலை அவரால் தாங்க முடிந்தது. அவருடைய உள்ளத்தில் தகித்துக் கொண்டிருந்த கொடிய அனலோடு ஒப்பிட்டுப்பார்த்தால், இந்தப் பயங்கரமான வெய்யிலின் கொடுமை, எந்த மூலை? இந்தக் கொடிய அனலை மௌலானவோடு சேர்ந்து அனு பவிக்கவே காந்திஜி வர்தா சென்ருர். ஜவாஹர்லால் நேருவோடும் மௌலானவோடும் இரண்டு மணி நேரம்வரை பேசிக்கொண்டிருந்துவிட்டு, பிறகு, குரோவருக்கு, காந்திஜி பேட்டி யளித்தார். தமது இதயத்திலிருந்த தாங்கமுடியாத வேதனையை யெல்லாம் அவரிடம் ஏறக்குறைய ஒரு மணி நேரம் எடுத்துக்கொட்டிக்கொண் டிருந்தார். "இந்த யுத்தத் தில் மிச்சமுள்ள காலத்தில், தங்களுடைய செயல்கள் எப்படி

யிருக்கும் என்பதுபற்றி இந்தியாவிலும் அமெரிக்காவிலும் மக்கள் பலவிதமாய்ப் பேசிக்கொள்கிறார்கள். நானும் அதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.'' என்று குரோவர் சொன்னார். "அது சரி, இந்த யுத்தம் எப்பொழுது முடியும் என்று தாங்கள் சொல்ல முடியுமா?'' என்று காந்திஜி சிரித்தபடியே கேட்டார்.

### அதை உலகே உணரும்

மறுபடியும் குரோவர் சொன்னார்: "தாங்கள் ஏதோ ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக பலரும் பலவாறு பேசிக்கொள்கிறார்கள். அது எப்படி இருக்கும்?''

"அது அரசாங்கமும் ஜனங்களும் நடந்துகொள்கிற தன்மையைப் பொறுத்திருக்கிறது. இதைப்பற்றி நமது மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதையும், வெளி உலகை இது எப்படிப் பாதிக்குமென்பதையும் நான் அறிய முயன்றுகொண்டிருக்கிறேன்.''

"நடந்துகொள்வது என்பதைப்பற்றி சொன்னீர்களே, தாங்கள் நடத்தப்போகும் புதிய இயக்கத்தில், எப்படி மக்கள் நடந்துகொள்ளப் போகிறார்கள் என்பதைத் தானே சொல்கிறீர்கள்?''

"ஆம். பிரிட்டிஷ் சர்க்காரின் ஆட்சி இன்றோடு இந்தியாவில் நின்றுவிட வேண்டும் என்ற அபிப்பிராயம் சம்பந்தமாக, மக்கள் எவ்விதம் ஒத்துழைக்க விரும்புகிறார்கள் என்பதையே, நான் அறிய விரும்புகிறேன். நான் சொல்லுவதைக் கேட்டுத் தாங்கள் திடுக்கிட்டுவிட்டீர்களா என்ன?''

"இல்லை. நெடுங்காலமாகத் தாங்கள் இதையே கேட்டும் இதை அடையப் பாடுபட்டும் வருகிறீர்களே!''

"தாங்கள் சொல்வது சரி. பிரிட்டிஷ் ஆட்சி இந்நாட்டில் ஒழிய வேண்டும் என்று, பல ஆண்டுகளாக, நான் பாடுபட்டு வருவது உண்மைதான். ஆனால் இன்று அந்த எண்ணம் திட்டமாக உருவடைந்திருக்கிறது. உலகில் சமாதானம் நிலவும் பொருட்டும், சீனா, ருஷ்யா, நேசநாடுகள் ஆகியவற்றின் நலத்தை உத்தேசித்தும், பிரிட்டிஷ் ஆதிக்

கம், இன்றோடு இந்தியாவில் ஒழிய வேண்டுமென்று சொல்கிறேன். இதனால் எவ்வாறு நேசநாடுகளுக்கு நலமுண்டு என்பதை விளக்கிக் கூறுகிறேன். இந்தியாவிற்குப் பூரண சுதந்திரம் கிடைக்குமானால், அதனால் இந்தியாவில் உற்சாகமும் ஊக்கமும் அதிகப்படும். உலக நெருக்கடியைப் போக்க இந்தியாவும் தயாராக முடியும். இன்று பாரமான ஒரு பிணத்தை நேசநாடுகள் சுமந்து செல்லுகின்றன. பிரிட்டன் காலடியில்-நேசநாடுகளின் காலடியில் என்றுகூட நான் சொல்வேன் - மகத்தான ஒரு பெரிய சமுதாயம் செயலற்று வீழ்ந்து கிடக்கிறது. இந்த யுத்தத்தில், அமெரிக்கா தான் முக்கிய பங்கு எடுத்துக்கொண் டிருக்கிறது. தனது எல்லையற்ற செல்வம், இயந்திர ஆற்றல் ஆகியவற்றைக் கொடுத்து உதவிசெய்து, யுத்தத்தை நடத்திக்கொண் டிருக்கிறது. எனவே, இந்தியாவை அடிமையாக வைத்திருக்கும் பெரிய குற்றத்தில், அமெரிக்காவுக்கும் பங்கு உண்டு."

"இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்துவிட்ட பின்னர், அமெரிக்கத் துருப்புகளும் நேசநாட்டுத் துருப்புகளும் இந்தியாவிலிருந்து எதிரிகளோடு போர் நடத்தத் தாங்கள் அனுமதிப்பீர்களா?" என்று கிரமமான ஒரு கேள்வியை, குரோவர் கேட்டார்.

"ஆம்" என்றார் காந்திஜி. "அதன் பிறகுதான், இந்தியாவின் உண்மையான ஒத்துழைப்பை நீங்கள் காணமுடியும். இல்லையேல், நீங்கள் செய்கிற பெருமுயற்சிகள் யாவும் பயனற்றனவாய்ப் போய்விடும். இப்போது இந்தியா தன் வசமிருப்பதால், அதனுடைய பொருள் வளத்தை யெல்லாம் பிரிட்டன் தன் மனம் போனவாறு பயன்படுத்தி வருகிறது. நாளை, நீங்கள் பெறுகிற உதவி எதுவாயிருப்பினும், அது சுதந்திர இந்தியாவிடமிருந்து பெறும் உண்மையான உதவி யாகும்."

"இந்தியா கட்டுப்பட்டிருப்பது, ஜப்பானிய ஆக்கிரமிப்பை நேசநாடுகள் எதிர்ப்பதற்குத் தடையாயிருக்கிறது என்று தாங்கள் கருதுகிறீர்களா?"

"ஆம்."

"நேசநாட்டுத் துருப்புகள் நடபடிக்கைகள் எடுத்துக்

கொள்வதை நான் குறிப்பிட்டபோது, தற்போது இந்தியாவி லிருந்துவரும் துருப்புகள் அனைத்தையுமே அப்புறப் படுத்திவிட வேண்டும் என்ற நோக்கம் தங்களுக்கு உண்டா என்பதையே அறிய விரும்பினேன்."

"முற்றும் அப்புறப்படுத்த வேண்டிய தேவையிராது."

"இது பற்றித்தான் மக்களுக்கு மிகவும் தவறான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது."

"நான் எழுதிவருபவை யெல்லாம், தாங்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்தப் பிரசினைப்பற்றி, இந்த வார 'ஹரிஜன்' இதழில் விரிவாக எழுதியிருக்கிறேன். இந்தியா பூரண சுதந்திரம் அடைய வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், அவர்கள் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அந்த நிலையில் அவர்கள் வெளியேற வேண்டுமென்று நான் வற்புறுத்த முடியாது. ஏனெனில், நான் இந்தியாவுக்கு விரும்பி யழைப்பதாக என் மீது ஜப்பானியரே சாட்டுகிற குற்றச்சாட்டை நான் பொய் யென்று காட்ட விரும்புகிறேன்."

"சரி, உங்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், பிறகு, தாங்கள் என்ன இயக்கம் தொடங்குவீர்கள்?"

"உலகம் முழுதுமே உணரத்தக்கவகையில் என் இயக்கம் அமைந்திருக்கும். பிரிட்டிஷ் துருப்புகளின் நடமாட்டத்தில் இந்த இயக்கம் தலையிடாவிட்டாலும், பிரிட்டிஷாரின் கவனத்தை அது நிச்சயம் இழுக்கும். நான் கூறும் ஆலோசனையை ஏற்காது தள்ளிவிட்டு, பிரிட்டன் வெற்றி பெறும் பொருட்டோ, அல்லது சீனவைப் பாதுகாக்கும் பொருட்டோ இந்தியா அடிமை நாடாகவே இருக்க வேண்டுமென்பது தவருகும். இவ்வளவு கேவலமான நிலையை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. சீனத்தைப் பாதுகாப்பதில் சுயேச்சையும் சுதந்திரமும் பெற்ற இந்தியா முக்கியமான பங்கு எடுத்துக்கொள்ளும். ஆனல், இன்றைய நிலையில், இந்தியா எவ்வித உண்மையான உதவியும் சீனவுக்குச் செய்கிறதென்று நான் நினைக்க வில்லை. யாதொரு விதமான சங்

கடமும் உண்டுபண்ண லாகாது என்ற கொள்கையோடு நாங்கள் இதுவரை இருந்துவந்திருக்கிறோம். இனிமேலும், அப்படியே இருந்துவருவோம். ஆனால், மென்னைப்பிடியாகப் பிடித்திருப்பதால் இந்தியாவைப் பலப்படுத்திக்கொள்ளும் பொருட்டு, பிரிட்டிஷ் சர்க்கார் செய்துவரும் சுரண்டல் வேலைகளுக்கு, நாங்கள் இடங்கொடுக்க மாட்டோம். இன்று, அந்த பிரிட்டிஷ் சர்க்காரின் போக்கு மேற்சொல்லிய பிடிப்பைப் பலப்படுத்துவதாகத்தான் இருந்துவருகிறது. கலகம் விளைவிக்கலாகாது என்ற எங்கள் கொள்கையின் பயன்; இன்று ஆயிரக்கணக்கான மக்களைத் தங்கள் தங்கள் வீட்டைவிட்டு வெளியேபோகும்படி சொல்வதில்தான் வந்து முடிந்திருக்கிறது. இம் மக்களுக்குத் தங்க இடமில்லை, உழுது பயிரிட நிலமில்லை, வாழ்க்கை நடத்த எவ்விதச் சொத்தும் இல்லை. சுயேச்சையுள்ள எந்த நாட்டிலும் இப்படி நடப்பது சாத்திய மன்று. இந்தவிதமான நடத்தைக்கு, இந்தியா பணிந்துபோவதை, என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. இதனால், இந்தியாவுக்கு இன்னும் அதிக இழிவும் அடிமைத்தனமும் ஏற்படுகின்றன. ஒரு சமுதாயம் முழுதுமே அடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்ளுமேயானால், சுதந்திரம் என்ற பேச்சே எப்போதும் தலைகாட்ட முடியாதென்பதுதானே பொருள்?''

### பிரிட்டனுடைய வெற்றியினால் இந்தியாவுக்கு லாபமா?

"தாங்கள் விரும்புவதெல்லாம் ஆட்சிமுறையில் இருந்துவரும் பிடிப்புத் தளர வேண்டுமென்பதே. பிடிப்புத் தளர்ந்துவிட்டால், ராணுவ முயற்சிகளுக்கு இடையூறு செய்ய மாட்டீர்கள் அல்லவா?'' என்று அடுத்தபடியாகக் கேட்டார் குரோவர்.

"என்னால் சொல்ல முடியாது. கலப்படம் அற்ற சுதந்திரத்தையே நான் விரும்புகிறேன். ராணுவ முயற்சி மென்னைப்பிடியைப் பலப்படுத்துவதாயின், அதையும் நான் எதிர்க்கத்தான் வேண்டும். எனது சுதந்திரத்தைப் பலிகொடுத்துவிட்டு, உதவி செய்யக்கூடிய தாராள மனப்பாங்கு எனக்கு இன்னும் ஏற்படவில்லை. உயிரற்ற பிண

மானது உயிரோடு இயங்கும் உடலுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டு மென்பதே என் விருப்பம். நீக்ரோவர்களையும் ஆப்பிரிக்க நாட்டினரையும் அடிமைப்படுத்தி வைத் திருக்கிறார்கள். இந்தியாவையும் அடிமை நிலையில் வைத் திருக்கிறார்கள். இந்தவிதமான இரண்டு பாவகாரியங் களைச் செய்துகொண் டிருக்கும் நேசநாட்டினர், இந்தப் பாவத்தை நிவர்த்தி செய்யாதவரையில், அவர்கள் போராடு வதற்கு நீதிமுறைமையை யொட்டிய எவ்வித நியாயமு மில்லை.''

நேசநாடுகளின் வெற்றிக்குப் பின்னர் உருவாகும் சுதந்திர இந்தியா எப்படி யிருக்கு மென்று குரோவர் சித்த ரிக்க முயன்றார். சென்ற உலக யுத்தத்தின் விளைவாய்க் கிடைத்த வரங்க ளென்று அமிர்தசரஸ் படுகொலையையும், ராணுவச் சட்டம், ரௌலட் சட்டம் ஆகியவற்றையும் காந்திஜி எடுத்துக்காட்டினார். பொருளாதாரத் துறையிலும் தொழில் துறையிலும் ஏற்பட்ட அபிவிருத்தியைக் குரோவர் குறிப்பிட்டார். சர்க்கார் காட்டும் கருணையினால் ஏற்படா விட்டாலும், சந்தர்ப்பவசத்தால், பொருளாதாரச் செழிப் பும் தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டன. பொருளாதாரச் செழிப்பு சுயராஜ்யத்தை நோக்கி ஒரு படி முன்னேறிய தாகும். விருப்பமின்றி வற்புறுத்தலின்பேரில் சிறிது தொழில்வளர்ச்சி யேற்படலாமாயினும், அதனால் கிடைக்கும் லாபத்தால் இந்த யுத்தத்தின் பிறகு யாதொரு பயனு மில்லை. இந்த லாபமே நமக்கு ஒரு தளையாக மாறினாலும் மாறிவிடக்கூடும். தொழில் துறையில் யுத்த காலத்தில் அனுஷ்டித்து வருகிற கொள்கையை எண்ணிப் பார்த்தால் லாபம் கிடைக்குமா என்பது சந்தேகமானதே. குரோவர் இந்த விஷயத்தை முக்கியமானதாக வற்புறுத்தி மேலும் பேசவில்லை.

### அமெரிக்கா செய்யக்கூடியது என்ன?

"இந்தியாமீதுகொண்டுள்ள தன் ஆதிக்கத்தை விட்டு விடும்படி பிரிட்டனிடம் சொல்வதில், அமெரிக்கா உதவி

செய்யுமென்று தாங்கள் எதிர்பார்க்கிறீர்களா?'' என்று நம்பிக்கை யில்லாமலே குரோவர் கேட்டார்.

"ஆம், நான் எதிர்பார்க்கிறேன்'' என்று காந்திஜி பதில் அளித்தார்.

"ஆனல், தங்கள் நம்பிக்கையின்படி உதவி கிடைக்குமா?''

"ஏன் கிடைக்காது?'' என்ருர் காந்திஜி. "இந்தியாவின் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது என்று மனப்பூர்வமாக அமெரிக்கா உணருமாயின், தனது முழு பலத்தையும் கொண்டு அமெரிக்கா நியாயத்தை ஆதரித்து நிற்க வேண்டும். அவ்விதம் ஆதரித்து நிற்க, அமெரிக்கா முன் வருமென்று எதிர்பார்க்க எனக்கு உரிமை உண்டு.''

"பிரிட்டிஷார் இந்தியாவில் நிலைத்திருப்பதற்கு அமெரிக்கச் சர்க்கார் ஆதரவு காட்டக் கடமைப்பட்டிருக்கிருர்கள் என்று, தாங்கள் எண்ணுகிறீர்களா என்ன?''

"நான் அவ்விதம் எண்ணவில்லை. ஆதரவு காட்ட அமெரிக்கா கடமைப்பட்டிராவிட்டாலும்கூட, பிரிட்டிஷ் ராஜதந்திரமுறை அங்கே அவ்வளவு தூரம் வேலை செய்திருக்கிறது. அதன் பயனுக, தலைவர் ரூஸ்வெல்ட்டும் அமெரிக்க ஜனங்களும் இந்தியாவுக்கு உதவி செய்ய விரும்பியபோதிலும், அவர்கள் விருப்பம் நிறைவேருமல் போகலாம். இந்தியர்களின் அபிலாஷைகளுக்கு எதிராக, பிரிட்டிஷ் பிரசாரம் மிகவும் திறமையான முறையில் அமெரிக்காவில் நடத்தப்பெற்று வருகிறது. இதனல் அங்கு இந்தியாவுக்கு நண்பர்களாயுள்ள ஒருசிலர்கூடத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெளிவாய் எடுத்துச் சொல்லச் சந்தர்ப்பம் கிடைப்ப தில்லை. தவிர, அரசியல்முறை மிகவும் கடுமையாயிருப்பதனல், பொதுஜன அபிப்பிராயமானது அரசியல் நிர்வாகத்தை எவ்வகையிலும் அசைக்க முடிய வில்லை.''

"மெல்ல மெல்ல நிலைமை மாறலாந்தானே?'' என்று தவற்றை ஒப்புக்கொள்கிற முறையில் குரோவர் சொன்னர்.

"மெல்ல மெல்லவா?'' என்ருர் காந்திஜி. "நான் எவ்வளவோ காலம் பொறுத்தேன். இனிமேலும் என்னல் பொறுத்திருக்க முடியாது. இந்த யுத்தத்தில் நாற்பது

கோடி மக்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாதிருப்பது மிகவும் பயங்கரமான படுகொலைக்கு ஒப்பாகும். எங்கள் கடமையை நாங்கள் செய்வதற்கான சுதந்திரம் மட்டும் எங்களுக்கு இருக்கும் பட்சத்தில், ஜப்பானின் படையெடுப்பைத் தடுத்து சீனவையும் காப்பாற்ற முடியும்.

### தாங்கள் என்ன செய்வதர்கச் சொல்லுகிறீர்கள் ?

பிரிட்டிஷாரோ, அல்லது துருப்புக்களோ வெளியேறியே ஆகவேண்டும் என்று காந்திஜி வற்புறுத்தவில்லை என்பதைக் கண்ட குரோவர், நேசநாடுகளின் நிலைமையில் தம்மைவைத்து, இந்த பேரத்தால் ஏற்படக்கூடிய லாபத்தைக் கணக்கிட ஆரம்பித்தார். செய்த தொண்டுக்கு வெகுமதியாகச் சுதந்திரம் தரவேண்டுமென்று காந்திஜி கேட்கவில்லை. நீண்ட நாளாக இருந்துவந்த கடனைத் திருப்பிக்கொடுக்கும் முறையிலும், உரிமை என்ற முறையிலுமே காந்திஜி சுதந்திரத்தை விரும்பினர்.

“இந்தியா சுதந்திர நாடு என்று பிரகடனம் செய்துவிட்டால், சீனத்தைக் காப்பாற்றுவதற்காக, திட்டமாக என்ன நடபடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளும்?” என்று குரோவர் கேட்டார்.

“இன்று என்னல் திட்டமாய்க் குறிப்பிட முடியாவிட்டாலும்கூட, மகத்தான காரியங்களை இந்தியா செய்யும்” என்று காந்திஜி உடனே மறுமொழி கூறினர். “ஏனெனில், எங்களுக்கு வரப்போகும் சர்க்கார் எத்தகையதாய் இருக்கும் என்று சொல்ல முடியாது. இங்கு அனேக அரசியல் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. தேசத்துக்கேற்ற தொரு முறையை இவை வகுத்துக்காட்ட முடியுமென்று நான் நம்புகிறேன். இப்போது இவை உருவான கட்சிகளாயில்லை, அனேகமாய்ப் பிரிட்டிஷ் சர்க்காரின் போக்குக்கேற்பவே அவை தொழிற்படுகின்றன. எதற்கும் பிரிட்டிஷ் சார்க்காரையே இவை எதிர்பார்க்கின்றன. சர்க்காரின் கோபமோ, அல்லது உதவியோ அவற்றை மிகவும் பாதிப்பதாய் இருக்கிறது. சூழ்நிலை முற்றுமே சீர்கேடானது; முற்றிலும் இழிவானது. பிணம்போல

இருந்துவரும் இந்தக் கட்சிகள் உயிர்பெற்றுவந்தால் இன்ன நடக்கும் என்று யார்தான் சொல்ல முடியும்? இப்போது, இந்தியா நேசநாடுகளுக்கு வீணான ஒரு பெரும் சுமையாய்த்தான் இருந்துவருகிறது."

"வீணான ஒரு பெருஞ்சுமை என்றால், பிரிட்டனுக்கு ஆபத்து, அமெரிக்க நலன்களுக்குக் குந்தகம் என்பது தங்கள் கருத்தா?"

"ஆம். மனம்நொந்து வருந்தும் இந்தியா, குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் என்ன செய்யும் என்பதை அறிய முடியாது. இதனால்தான் இதை ஆபத்து என்று சொல்லு கிறேன்."

"சரி, பிரிட்டனை வற்புறுத்தி, இந்தியாவிற்குச் சுதந் திரம் வழங்கும்படி அமெரிக்கா செய்வதானால், தாங்கள் உறுதியாக உதவி செய்வீர்களா? இதை உறுதி செய்து கொள்ள விரும்புகிறேன்."

"நானா? எனக்கு வயது 73 ஆகிவிட்டது. என்னைக் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டாம். ஆனால், பலம் பொருந்திய, சுதந்திரமாயுள்ள ஒரு மகத்தான சமுதாயத் தின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக் கிறது. நானும் ஒத்துழைக்கவே செய்வேன். வாரந் தோறும் நான் எழுதுவதன் மூலமாய் என்னாலானதைச் செய்துவருவேன். என்னைக் காட்டிலும் இந்தியாவுக்குத் தான் அதிக ஆதிக்கம் உண்டு. இன்று அதிருப்தி எங்குமே பரவியிருப்பதால், ஜப்பானியரின் முன்னேற்றத்தைத் தடைசெய்வதில் மக்கள் அதிக சுறுசுறுப்புக் காட்ட வில்லை. சுதந்திரம் கிடைத்த அந்த நிமிஷத்திலேயே, எங்க ளிடம் ஒரு மகத்தான உணர்ச்சி ஏற்பட்டுவிடும். சுதந்தி ரத்தை மிக உயர்வாக மதித்து, அதை எங்கள் பலங் கொண்ட மட்டும் முயன்று பாதுகாக்கவல்ல ஒரு புதிய சமு தாயமாக நாங்கள் மாறிவிடுவோம். எனவே, நேசநாடு களுக்கு எங்கள் உதவி இருக்கும்."

"குறிப்பிட்டுப் பேசுவதானால், பர்மா நடந்துகொண்ட முறைக்கும், ருஷ்யா இப்போது நடந்துகொள்கிற முறைக் கும் எவ்வளவு வேற்றுமை இருக்கிறதோ, அவ்வளவு

வேற்றுமை இந்தியாவில் நடைமுறையில் ஏற்படும் என்று தாங்கள் சொல்லுகிறீர்களா?”

“வேண்டுமானால் அப்படிச் சொல்லலாம். இந்தியாவிலிருந்து பர்மாவைப் பிரித்த பிறகு, பிரிட்டிஷார் பர்மாவுக்குச் சுதந்திரம் வழங்கியிருக்கலாம். அவர்கள் அப்படியொன்றும் செய்யவில்லை. பழைய சுரண்டல் கொள்கையையே கடைப்பிடித்தார்கள். அதனால் பர்மியர் சிறிதும் ஒத்துழைக்கவில்லை. அல்லாமலும், பகையும் பராமுகமுமே இருந்துவந்தன. தங்களுடைய அபிலாஷைகளுக்காக அவர்கள் போராடவுமில்லை; நேச நாடுகளின் அபிலாஷைகளுக்காக ஒத்துழைக்கவும் தயாராயில்லை. என்ன நேர்ந்திருக்கக்கூடுமென்பதையும் கவனிப்போம். நேசநாடுகளை இந்தியாவிலிருந்து ஜப்பான் துரத்தியடிக்க முயன்று, அதன் காரணமாக நேசநாடுகள் இன்னும் பாதுகாப்பாக உள்ள இடத்திற்கு மாறும்படி நேர்ந்தால், இன்று இருக்கும் நிலையில் ஜப்பானை எதிர்த்து இந்தியா முழுதுமே போர் செய்ய முன்வரும் என்று நான் சொல்ல முடியாது. சில பர்மியர் இழிவாக நடந்துகொண்டதைப்போல இந்தியர் சிலரும் நடந்துகொண்டுவிடுவார்களோ என்ற அச்சம் எனக்கு உண்டு.

“இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் ஜப்பானை எதிர்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தியா சுதந்திர நாடாக இருக்குமானால், அது இவ்வாறு ஜப்பானை எதிர்க்கும்; இருபத்து நான்கு மணி நேரத்திற்குள்ளேயே, அதனுடைய மனநிலை முற்றும் மாறுதலடைந்து இப்படி எதிர்ப்பதே ஒரு புது அனுபவமாகும். எல்லாக் கட்சிகளும் அப்போது ஒன்றுசேர்ந்து ஒருமையுணர்ச்சியோடு, வேலை செய்யும். இத்தகைய உயிருள்ள சுதந்திரம் இந்தியாவுக்கு வழங்கப்படுமேயானால், இந்தியா மிக்க ஆற்றலுடைய ஒரு நேசநாடாக விளங்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.”

சமூக ஒற்றுமையின்மைதான் தடையாய் இருக்கிறது என்பதைக் குரோவர் குறிப்பிட்டார். சுதந்திரம் அடைவதற்கு முன்னர், அமெரிக்காவிலே பல மாகாணங்களுக்

கிடையில் ஒற்றுமை நிலவவில்லை என்பதையும் அவரே ஒப்புக்கொண்டார். "மூன்றாவது கட்சி ஒன்று இருந்து கொண்டு, மற்ற கட்சிகள் ஒன்றுசேரவிடாமல் தடைசெய்து வருகிறது. அந்தக் கட்சியின் ஆதிக்கம் நீங்கிவிடுமே யானால், நிலைமையை உள்ளது உள்ளவாறே உணர்ந்து எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்துகொள்வார்கள்" என்றார் காந்திஜி. "எங்களைப் பிரித்துவைத்து வருகிற பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கிவிடுமேயானால், எங்களிடையே காணப்படும் சமூகச் சச்சரவுகள் நிச்சயமாக மறைந்து விடும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்."

குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ஏற்றுக்கொண்டால் என்ன?

"குடியேற்ற நாட்டு அந்தஸ்து இன்று வருவதாயிருந்தால், அது போதாதா என்ன?" என்று கடைசியாய்க் கேட்டார் குரோவர்.

"போதாது" என்று காந்திஜி உடனே பதில் சொன்னார். "அரைகுறையான முறையிலோ, அல்லது பேரம் பேசியோ வருகிற சுதந்திரத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இந்தக் கட்சிக்கோ அல்லது அந்தக் கட்சிக்கோ அவர்கள் வழங்க விரும்பும் சுதந்திரம் வேண்டாம்; வரையறுத்துச் சொல்ல இயலாத இந்தியாவுக்குத்தான் சுதந்திரம் வழங்க வேண்டும். இந்தியாவை உடைமையாக வைத்திருப்பது தவறு. இத் தவற்றைத் திருத்த வேண்டுமானால், அவர்கள் இந்தியாவை அதன்பாட்டுக்கு விட்டு விடவேண்டும்."

ராஜாஜி

"கடைசியாக ஒன்று கேட்க விரும்புகிறேன். ராஜாஜி கூறிவரும் ஆலோசனைபற்றித் தங்கள் கருத்தென்ன?"

"ராஜாஜி பற்றிய விவாதங்களை வெளிப்படையாகப் பேசுவது கூடாது என்பது என் கருத்து. மதிப்புக்குரிய தோழர்களைத் தாக்கிப் பேசுவது அருவருப்பானது. எனக்கும் அவருக்கும் கருத்துவேற்றுமை உண்டு என்பது உண்மைதான்; ஆயினும் வெளிப்படையாகப் பேசத்தக்க

நிலைமையைக் கடந்துநிற்கிற புனிதமான தன்மையுடைய விஷயங்களும் சில உள்ளன அல்லா ?"

பாகிஸ்தான் கொடுக்கலாம் என்று ராஜாஜி சொல்லியதை மனதில் வைத்துக்கொண்டு, குரோவர் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை; தேசிய சர்க்கார் அமைக்கலாமென்று ராஜாஜி சொல்லியதை எண்ணியே இதைக் கேட்டார். பிரிட்டிஷாரின் தூண்டுதல் காரணமாக, ராஜாஜி இதைச் சொல்லியிருக்க முடியாது. அவருடைய அபிப்பிராயம் இச்சமயம் பிரிட்டிஷார் நிலையோடு தற்செயலாய் ஒத்திருக்கிறது. குரோவர் நுண்ணிறிவோடு கண்டறிந்து சொன்னர்.

"தாங்கள் சொல்வது சரி, ஜப்பானியருக்குப் பயந்தே, ராஜாஜி பிரிட்டிஷ் ஆட்சியை சகித்துக்கொள்ளத் துணிந்துவிட்டார். யுத்தம் முடியும்வரை சுதந்திரப் பிரசினையைக்கூட அவர் ஒத்திப்போட எண்ணுகிருர். நான் அப்படி எண்ணவில்லை. யுத்தத்தில் நாம் நிச்சயமாக வெற்றிபெற விரும்பினல், இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கி, தாம் செய்ய வேண்டிய கடமைகளை அது செய்ய இடம் கொடுக்க வேண்டும். நான் சொல்வதில் யாதும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. பலமுறை நானே ஆழ்ந்து ஆலோசனை செய்த பிறகே இந்த முடிவிற்கு வந்தேன். அவசரப்பட்டோ, கோபங்கொண்டோ நான் எதையும் செய்யவில்லை. ஜப்பானியருக்கு இடம் கொடுக்கும் எண்ணம் என்னிடம் ஒருசிறிதும் இல்லை. இந்திய சுதந்திரம் இந்தியாவுக்கு மட்டும் முக்கியமானதன்று; நேசநாடுகள், சீனம் ஆகியவற்றின் நன்மைக்கும் அது மிக முக்கியமானதாகும்."

"சீனத்தைக் காப்பாற்ற திட்டமாக எந்தவித முறைகளைத் தாங்கள் மேற்கொள்வீர்கள் ?"

"ஜப்பானைப்பற்றிய சிந்தனையே இந்தியாவிலிருந்து விலகிஓடிவிடும். இன்று நிலை அப்படியில்லை. இதை ராஜாஜி அறிந்திருக்கிருர். அதனுலேதான், அவர் மனம் வேதனை அடைகிறது. அறிவுள்ள எந்தச் தேசபக்தனுக்கும் இந்த உணர்ச்சி ஏற்படவே செய்யும். இந்த

மனவேதனை எனக்கும் உண்டு. ஆனால், எனது முடிவு நேர் மாறானது. கிரேட் பிரிட்டன் காலடியில் இந்தியா கட்டுண்டு கிடப்பதென்றால், ஜப்பான் காலடியில் சீனா கட்டுண்டு கிடப்பதே யாகும். இவ்விதம் சொல்லாது இருக்க என்னால் இயல வில்லை. இதை நான் இவ்விதமாகவே உணர்கிறேன். ஒரு பெரிய விஷயமென்றும் கேட்டுத் திடுக்கிடத்தக்கதென்றும் நீங்கள் எண்ணலாம். திடுக்கிடுவதற்கு இதில் என்ன இருக்கிறது? சுதந்திரம் வேண்டித் தவிக்கிற நாற்பது கோடி மக்களைச் சிறிது எண்ணிப் பாருங்கள். தங்களைச் சும்மாவிட்டால் போதுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் காட்டுமிராண்டிகள் அல்லர். அவர்களிடம் புராதனமான பண்பாடு உண்டு; புராதனமான நாகரிகம் உண்டு; சொல் வளம்மிக்க அனேக மொழிகள் உண்டு. இத்தகைய சிறப்பு வாய்ந்த மக்களை, அடிமைகளாக வைத்திருப்பதற்கு, பிரிட்டன் வெட்கப்பட்டேயாகவேண்டும். 'இந்த அடிமைத்தனம் அவர்களுக்கு வேண்டுவது அவசியந்தான்!' என்று நீங்கள் சொல்லக் கூடும். அப்படிச் சொல்வீர்களாயின், பிற நாடுகளை அடிமையாக்கி ஆள எந்தச் தேசத்திற்கும் உரிமை கிடையாது என்றுதான் நான் சொல்லக்கூடும்."

"நான் இதை ஒப்புக்கொள்கிறேன்." என்று குரோவர் மெதுவாகத் தெரிவித்தார்.

"ஒரு தேசம் அடிமையாக இருக்க விரும்பினாலும், அதை அடிமையாக வைத்திருப்பது யாருக்கும் கண்ணியக் குறைவான காரிய மாகும். உங்கள் நாட்டிலும் இதே போன்ற சங்கடங்கள் இருக்கவே செய்கின்றன. உங்கள் நாட்டில் அடிமைத்தனத்தை இன்னும் அகற்றிவிட்ட பாடில்லையே?"

"ஐக்கிய அமெரிக்காவைக் குறிப்பிடுகிறீர்களா?"

"ஆம். உங்களிடையே தாண்டவமாடும் இனவேற்றுமை உணர்ச்சியையும் நீக்ரோவரை எரிக்கும் பழக்கத்தையும் நீங்கள் இன்னும் போக்கவில்லையல்லவா? ஆனால், இவற்றை நான் ஞாபக மூட்டுவது உங்களுக்கு விருப்ப மில்லா திருக்கலாம்."

# வெளியேறுதல் என்பதற்கு விளக்கம்

"ஆசியா, ஆப்பிரிக்கா முதலான கண்டங்களில் உள்ள நாடு களைப் பிரிட்டன் அப்படியே விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண் டிருக்கிறவரையில், நியாய முறையில் பார்த்தால், அது இந்த யுத்தத்தில் வெற்றியடையத் தகுதியற்றதாகிறது. நான் கூறும் ஆலோசனையை ஏற்றுக்கொள்வதனால், பிரிட்டனின் பொருளா தார அமைப்பில் பெரியபெரிய மாற்றங்கள் ஏற்பட வேண்டியிருக் கும் என்பதை நான் அறியாமலில்லை. ஆனால், திருப்திகரமான இந்த முடிவு அடைவதற்கு, இந்த மாற்றம் உயிர்நாடிபோன்ற ஒரு தேவையாகும்.

*வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை விளக்கும்படியாக, காந்திஜியை ஒரு நிருபர் கேட்டிருந்தார். அதற்குக் காந்திஜி எழுதிய பதில் :*

நேசத்துருப்புகளை இந்தத் தேசத்திலேயே வைத்திருக்க வேணுமென்ற உத்தேசமானது, பொதுஜனங்களின் மனத்தில் ஒருவிதக் கலவரத்தை உண்டுபண்ணியிருப்பது உண்மைதான். வெளியேறிவிட்டதாகப் பிரகடனம் செய்த பின்னர், நேசத் துருப்புகள் இங்கிருந்துகொண்டு யுத்த நட படிக்கைகளில் ஈடுபடுவதன் அவசியத்தைப் பொது ஜனங் களோ, அல்லது பிற வகுப்புகளோ அறிந்துகொள்வது கடினம். ஆனால், நேசத் துருப்புகள் இங்கு தங்க வேண்டிய தன் அவசியத்தைச் சரியானபடி எடுத்துக்காட்டிவிட்டால், தவிர்க்கமுடியாத நிலைமையென்று எண்ணி, பொது ஜனங் கள் இதை ஒப்புக்கொண்டுவிடுவார்கள்.

நான் முன்பு எழுதியதில் ஓரிடத்தில் தொடர்பில்லை. என்னைப் பேட்டிகாண வருவோர் அனேகருள், ஒருவர் இதைக் கண்டுபிடித்துச் சொன்னார். உடனே, அந்தத் தொடர்பென்ன என்பதை விளக்கி எழுதிவிட்டேன். என்னென்ன சோதனைகளுக்கு ஆளானபோதிலும் சரி, நேர்மை ஒருசிறிதும் பிறழாது நடக்க வேண்டும் என்று அஹிம்சைத் தத்துவம் கூறுகிறது. எனவே, இதைப் பலவீனம் என்று கூறலாமாயின், எனது இந்தப் பலவீனத் தைப் பொதுஜனங்கள் பொறுத்துக்கொள்ளவே வேண்

டும். நேசநாடுகளுக்குத் தோல்வி தரும்படியாகவுள்ள எந்த நடபடிக்கையையும் செய்யும்படியான குற்றத்திற்கு நான் ஆளாக முடியாது. ஜப்பானியன் இங்கு வராமல் தடுப்ப தற்கு, அஹிம்சா நெறிதான் மிகவும் உத்தரவாதமுள்ள நெறி. இதனல் எப் பிழையும் நேராது என்று சொல்ல நான் முன்வரவில்லை. நேசத்துருப்புகள் திடீரென்று இந்தியாவை விட்டு வெளியேறிவிடுமாயின், அதனல் இந்தியா ஜப்பா னியரின் வசமாகிவிடுவதுடன், சீனவின் வீழ்ச்சிக்கும் அது காரணமாகக் கூடும். பிரிட்டிஷார் வெளியேற வேண்டும் என்று நான் சொல்வதால் இவ்வித ஆபத்தான விளைவுகள் உண்டாகும் என்ற உணர்ச்சி சிறிதளவும் எனக்கு இல்லா திருந்தது. எனவே, நான் கூறுகிற ஆலோசனையை ஏற் றுக்கொண்ட பிறகும், இந்தியா ஜப்பானியர் வசமாகாதிருக் கும் பொருட்டு, நேசத்துருப்புகள் இந்தியாவில் தங்குவது அவசியமாயின், நேசநாடுகள் அவ்விதம் செய்யத்தான் வேண்டும். ஆனல், பிரிட்டிஷார் வெளியேறிய பிறகு இங்கு நிறுவப்பெறும் தேசிய சர்க்கார் விதிக்கும் நிபந்தனை களுக்கு உட்பட்டே அந்தத் துருப்புகள் இங்கு தங்க வேண்டும்.'

நான் கூறுகிற ஆலோசனையை, பிரிட்டன் ஏற்றுக் கொண்டு, அதிலுள்ள நியாயப்படியே ஆப்பிரிக்காவில் நடந்துகொள்ளுமாயின், மேலும் போரைத் தொடர்ந்து நடத்தவேண்டிய அவசியமே இராது என்று இந்த நிருபர் கூறுகிறார்; இது மிகவும் சரியானதே. ஆனல், இது பிரிட்டிஷாரின் நடத்தையை மதிப்பிட முடிவான சோதனை யாகும். தனிப்பட்ட மனிதனது சுதந்திரம், பேச்சு உரிமை, ஜனநாயகத்தை நிலைநாட்டுதல், நியாயமுறைமை என்றெல்லாம் தடபுடலான வார்த்தைகளைக் கொட்டி அளக் கிறார்கள்; இதன் உள்ளீடான சரக்கு யாது என்று பரி சோதிக்க இந்தியாவுக்குச் சகல உரிமையும் உண்டு. கொள் ளைக் கூட்டத்தினர் பலர் ஒன்றுசேர்ந்துகொண்டு, கொள் ளையைத் திறம்பட நடத்துவதற்காக, தங்களுக்குள்ளேயே ஜனநாயகம் நியதிகளை அமைத்துக்கொண் டிருப்பார்களே யானல், அவர்களை ஜனநாயகமுறையிலுள்ள கூட்டம்

என்று சொல்ல முடியுமா? இந்தியா ஜனநாயக நாடா? இங்குள்ள சமஸ்தானங்களில் ஜனநாயகம் நிலவுகிறதா? ஆசியா, ஆப்பிரிக்கா முதலான கண்டங்களில் உள்ள நாடுகளை பிரிட்டன், விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறவரையில், நியாயமுறைமையில் பார்த்தால், அது இந்த யுத்தத்தில் வெற்றியடையத் தகுதியற்றதாகிறது. நான் கூறும் ஆலோசனையை ஏற்றுக்கொள்வதனல், பிரிட்டனின் பொருளாதார அமைப்பில் பெரியபெரிய மாற்றங்கள் ஏற்படவேண்டியிருக்கும் என்பதை நான் அறியாமலில்லை. ஆனல், இந்த யுத்தம் திருப்திகரமான முடிவு அடைவதற்கு, இந்த மாற்றம் உயிர்நாடிபோன்ற ஒரு தேவையாகும்.

நான் கூறுகிற ஆலோசனையை பிரிட்டிஷார் ஏற்றுக்கொண்டார்களேயானல்,ஒருவேளை அதன் காரணமாகவே, அச்சுநாடுகளின் மனப்பாங்குகூட மாற்றமடைந்து, யுத்தத்தை கண்ணியமான முறையில் முடித்துவிட்டாலும் விடக்கூடும். யார் கண்டார்கள்?

பிரிட்டிஷ் துருப்புகள் இங்கு தங்க, நான் இசைவது அஹிம்சை என்ற உயர்ந்த ஸ்தானத்திலிருந்து, சற்றே தாழ்ந்த நிலைக்கு வருவதாகுமென்று இந்த நிருபர் அஞ்சுகிறர். ஆனல், மிகவும் அவசியமான தேவையை உணர்ந்து அதற்கு அஹிம்சா தத்துவம் சிறிது விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அஹிம்சையில் எனக்குள்ள பற்றுதல்,அமெரிக்காவுக்கோ பிரிட்டனுக்கோ இல்லை. அஹிம்சையைக் கடைப்பிடித்து இந்தியாவானது ஜப்பானிய ஆக்கிரமிப்பையோ, அல்லது வேறு எந்த ஆக்கிரமிப்பையுமோ எதிர்த்து நிற்க முடியுமென்று நான் கூற இயலாது. எந்தக் கருத்தில் அஹிம்சை வேண்டுமோ அந்தக் கருத்தின்படி இந்தியா முழுதும் அஹிம்சையைக் கடைப்பிடிக்கிறது என்று என்னல் உறுதி சொல்லவும் இயலாது. இந்த நிலைமையில் எனது ஆலோசனையை நிறைவேற்றுவதென்ருல், நேசநாட்டுத் துருப்புகள் உடனே வெளியேறித்தான் ஆகவேண்டும் என்று நான் வற்புறுத்துவது வஞ்சகத்தனமாகும். இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் எவ்விதச்

சண்டையு மில்லாதபடியால், இந்தியாவைப் பொறுத்த வரையில் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்குத் துருப்புகளே தேவை யில்லை என்று நான் கூறுவ தொன்றே போதுமான தாகும்.

ஆயினும், தேசியத் தற்கொலைக்கு ஒப்பான எந்தக் காரியத்தையேனும் செய்து, சீனாவைக் கைவிட்டுவிடுதல் கூடாது; அல்லது நேசநாடுகளை ஆபத்தில் விட்டுவிடவும் கூடாது. பிற நாட்டினரின் ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, அஹிம்சையைக் கடைப்பிடிப்பதே போதுமானது என்ற பூரண உறுதி இந்தியாவுக்கு ஏற்படாதவரையில், யுத்தம் நடந்துகொண்டிருக்கும் தருணத்தில், நேசத் துருப்புகள் இங்கிருந்து வெளியேற வேண்டுமென்று சொல்லுவதே பலாத்காரத்திற்கு ஒப்பான செயலாகும்; இந்தத் துருப்புகளுக்கு எஜமானர்கள், தங்களைப் பாதுகாத்துக் கொள்வ தென்ற ஒரு நோக்கத்திற்காகவே நேசத் துருப்புகளை இந்தியாவில் வைத்திருக்கிறதாகவும், பாதுகாப்புக்கு அது அவசியமான தென்றும் கருதுவார்களானால், அத் துருப்புகள் இங்கு இருப்பதை மேற்கூறியவாறு அனுமதித்தே யாக வேண்டும்.

# வேண்டுமென்றே திரித்துக்கூறல்

"நான் கூறும் ஆலோசனைகளைத் திரித்துக்கூறுவோர் எவ்வளவு பெரியவர்களாய் இருப்பினும், அவர்களை நேசநாட்டு நலனுக்கு விரோதிகள் என்றே சரித்திரம் கூறிக் கண்டிக்கும்."

தாம் சமீபத்தில் கூறிய ஆலோசனையைக் கண்டித்து, லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்ததற்கு, காந்திஜி கூறிய பதில்:

தேசியவாதிகள் இந்திய அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழிகளைச் சொல்லியபோதெல்லாம், அவ் வழிகள் எவ்வளவுதான் யுக்தமானவையா யிருந்தபோதிலும் கூட, அவர்களுடைய பேச்சும் எழுத்தும் திரித்தே கூறப்பெற்று வருகின்றன; பின்னர் அவர்களைச் சட்டப்படித் துன்புறுத்தி தண்டனைக்கும் ஆளாக்குகிறார்கள். நட்புரிமை பாராட்டி, சமீபத்தில் நான் சில ஆலோசனைகளை வெளியிட்டேன்; இவை மிகவும் சரியானவை என்றே நான் கருதுகிறேன்*. இவற்றை இப்பொழுதே திரித்துக்கூற ஆரம்பித்துவிட்டார்கள். என்னுடைய ஆலோசனையில் தப்பபிப்பிராயத்துக்கே இடமில்லை என்பது என் கருத்து. நான்

---

* பிரிட்டிஷ் ஆதிக்கம் இங்கிருந்து வாபஸ் ஆகவேண்டும் என்று காந்திஜி வேண்டிக்கொண்டதை, பிரிட்டிஷார் வெளியேறித்தான் ஆகவேண்டும் என்று சொன்னதுபோல, சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் குறிப்பிட்டுள்ளார். இதை ஒத்துக்கொள்ள மறுத்து, காந்திஜி எழுதியதாவது:

"தாக்கும் எண்ணத்தோடு நான் இந்த வேண்டுகோளை வெளியிடவில்லை; மிகவும் நட்புரிமை பாராட்டி நான் சொல்லக்கூடியது, இந்த வேண்டுகோள்தான். இந்த வேண்டுகோள் நேசநாடுகளின் நலத்தைக் கோரியே வெளியிடப்பட்டதாகும். அஹிம்சைத் தத்துவத்தை யொட்டியும், அதன் முதல்படியாகவுமே நான் இவ் வேண்டுகோளை விடுத்தேன். தனிப்பட்ட முறையில், நான் மட்டுமே பொறுப்பாளி. நான் கூறும் ஆலோசனையைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இது அடிப்படையில் அஹிம்சையைத்தான் கொண்டது என்பதை எண்ண வேண்டும். இந்தியாவுக்குள்ள அஹிம்சை உணர்ச்சி, அல்லது இருக்கவேண்டிய அஹிம்சை

கூறிய ஆலோசனையில் நேசநாட்டுப் படைகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்க்க நடபடிக்கை எடுத்துக்கொள்வதற்கு எவ்வித இடையூறு மில்லை. தாம் வெளியிட்ட கருத்துக்களுக்குத் துரோகமில்லாமல் பிரிட்டன் நடந்துகொள்ள வேண்டும் என்றும், இந்தியாவை வெற்றிகொண்ட தேசம் என்ற நிலையிலிருந்து விலக்க வேண்டும் - அதாவது இந்தியாவின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தைப் பிரிட்டன் தன்வசம் வைத்திருக்கக் கூடாதென்றும் - எவ்விதத்திலும் பிரிட்டன் தலையிடாமல், இந்தியா தன் தலையெழுத்தைத் தானே நிர்ணயித்துக்கொள்ளும்படி விட்டுவிட வேண்டும் என்றும் நான் வெளியிட்ட ஆலோசனை கூறுகிறது. இப்படி நடந்தால் பிரிட்டன் நீதிமுறைமையையொட்டி நடந்ததாகும். இதன்மூலம் சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காகவன்றி, மனித சமுதாயத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு மகத்தான தேசமானது பிரிட்டனுக்குத் துணை வருகிறது. இந்தியாவில் அராஜகம் தலைவிரித்து ஆடுகிறது என்றால், இதற்குப் பொறுப்பாளி நான் அல்ல; பிரிட்டன்தான். இப்போதுள்ள அடிமை வாழ்வையும், அதன் விளைவாக, இந்தியாவில் பேடித்தனம் நிலவுவதையும்விட, அராஜகம் வந்தாலும்கூட நல்லதென்றே நான் சொல்லியிருக்கிறேன். நான் கூறும்

உணர்ச்சி, பிரிட்டிஷ் ஆதிக்கம் இங்கிருந்து வெளியேறுதவரையில் சக்தியற்றதாகவே இருக்கும். ஆயுதம் தாங்கிப் போராட விரும்பும் இந்தியாவின் நிலை எப்படிச் சக்தியற்றதா யிருக்கிறதோ, அப்படியேதான் இதுவும். நான் சொல்லுகிற திட்டத்தை மேற்கொண்டால் எல்லாவிதமான சங்கடங்களையும் சமாளிக்க முடியும்; பலாத்காரம் பலாத்காரமின்மை இரண்டையும் பற்றிய சச்சரவும் நீங்கும்; அதனால் நேசநாடுகளின் பக்கம் சேர்ந்து திறம்பட உதவி செய்யக்கூடிய சுயேச்சையும் இந்தியாவுக்குக் கிடைக்கும்; சிறப்பாக, உடனடியான அபாயத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் சீனத்திற்கு நன்கு உதவும் நிலைமையும் உண்டாகும். பிரிட்டிஷார் இந்நாட்டைவிட்டு வெளியேறி விடுவார்களாயின், இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைத்துவிடும். இதனால் சீனத்தின் சுதந்திரம் உறுதிப்படுவதுடன், நேசக் கட்சியில் அசைக்கமுடியாத நியாயம் இருக்கிறது என்றும் ஏற்படும். இது எனது உறுதியான நம்பிக்கை.'' ஹரிஜன். ஜூன். 28, 1942.

ஆலோசனைகளைத் திரித்துக்கூறுவோர் எவ்வளவு பெரியவர்களாய் இருப்பினும், அவர்களை நேசநாட்டு நலனுக்கு விரோதிகள் என்றே சரித்திரம் கூறிக் கண்டிக்கும். சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸின் திட்டங்களை இந்தியா நன்கு பரிசிலனை செய்து பார்த்தது. நீண்ட ஆலோசனை செய்த பிறகே, எல்லாக் கட்சியினரும் அவற்றை நிராகரித்து விட்டார்கள். இவைதான் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் முடிவான திட்டங்களென்று மீண்டும் அவற்றையே கூறுவது இந்தியாவை அவமதிப்பதாகும்.

# போலி நியாயம்

"நான் கூறிய ஆலோசனையைக் கேட்டு, ஏற்கனவே மனக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்திய மண்ணில் நேசத் துருப்புகள் நடபடிக்கை எடுத்துக்கொள்ள லாகாது என்று சொல்வது, அந்த மனக்கொதிப்பை இன்னும் அதிகப்படுத்திவிடும். முதல் விஷயம் தவிர்க்க முடியாத ஒன்று, இரண்டாவதோ வேண்டுமென்றே துன்புறுத்துவதாக இருக்கும்."

**கேள்வி:** அஹிம்சா தத்துவத்தின்படி, நேசத் துருப்புகளுக்கு இந்தியாவில் தங்க இடம் கொடுப்பது மிக்க அவசியம் என்று தாங்கள் கருதுகிறீர்கள். இந்தியாவை ஜப்பானியர் ஆக்ரமித்துக்கொள்ளாதபடி தடுப்பதற்கு அஹிம்சா நெறியே தவறாத சாதனம் என்று தாங்கள் சொல்ல முடியாததனால், நேச நாடுகளைத் திடீரென்று துரத்தியடிப்பது நியாயம் என்று தாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அஹிம்சா சக்தியைக்கொண்டு ஆங்கிலேயரை வாபஸ் ஆகச் செய்யலாம் என்று எண்ணுகிற தாங்கள், அதே சக்தியின் வலிமையைக் கொண்டு ஜப்பானியர் இந்தியாவை ஆக்கிரமித்துக்கொள்ளாதபடி தடைசெய்து விடலாம்தானே? முரட்டுத்தனமான இரண்டு அன்னிய வல்லசுரகள் ஒன்றோடொன்று மோதி, சண்டையிட்டுக்கொள்வதால், தங்கள் நாடு, தங்கள் வீடு, தங்கள் சொத்து முதலியனயாவும் நாசமுறாதபடி தடுக்கவேண்டியது அஹிம்சாவாதியின் முக்கியமான கடமையல்லவா?

இந்தக் கேள்வியில் வெளிப்படையான ஒரு போலி வாதம் இருக்கிறது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாவே, தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுத பலமே சிறந்த கருவி என்ற எண்ணத்தில் ஊறிய பிரிட்டிஷ் மக்களைத் திடீரென்று அஹிம்சையில் நம்பிக்கை கொள்ளும்படி செய்வது இயலாத காரியம். நன்றாய்ப் புலப்படக்கூடிய அளவுக்கு, இந்தியர் மனத்திலேயே இந்த நம்பிக்கை இன்னும் பதியவில்லையே! அப்படியிருக்கும் போது பிரிட்டிஷார் மனதிலா திடீரென்று பதிந்துவிடப் போகிறது? பலாத்காரம் வேலை செய்கிற மாதிரியே அஹிம்சா சக்தியும் வேலை செய்யலாகாது. நான் கூறிய ஆலோசனையைக் கேட்டு, ஏற்கனவே மனக்கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்திய மண்ணில் நேசத் துருப்புகள்

நடபடிக்கை எடுத்துக்கொள்ள லாகாது என்று சொல்வது, அந்த மனக்கொதிப்பை இன்னும் அதிகப்படுத்திவிடும். முதல் விஷயம் தவிர்க்க முடியாத ஒன்று; இரண்டாவதோ, வேண்டுமென்றே துன்புறுத்துவதாக இருக்கும்.

மேலும், பிரிட்டிஷார் வாபஸ் ஆவார்களாயின், அது அஹிம்சை ஒன்றினுல் மட்டும் விளைந்தது என்று கொள்ள முடியாது. எப்படி இருந்தபோதிலும், பழைமையான ஆசாமியைப் போகச் செய்வதற்கு மேற்கொள்ளும் உபாயங்கள் புதிதாகப் படையெடுத்துவரும் ஆசாமியைத் தடுப்பதற்கு ஏற்றவையா யிரா. வரிகொடா இயக்கம் போன்ற முறைகளையும் இன்னும் வேறுபல முறைகளையும் கையாண்டு, பிரிட்டிஷாரை ஆட்சிமுறையின் அதிகாரத்தை நாம் உதறிவிட முடியும். ஆனுல், ஜப்பானியர் படையெடுப்பைத் தடைப்படுத்த இதே முறைகள் போதா. ஆகவே, பலாத்காரமற்ற முறைகளைக் கையாண்டு, ஜப்பானியர் இந்நாட்டிற்குள் நுழையாதபடி நாம் தடுத்துவிடலாம் என்ற அஸ்திவாரமற்ற ஒரு நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு, ஜப்பானியரை எதிர்ப்பதற்கு நாம் தயராயிருந்த போதிலுங்கூட, போரிடுவதில் சௌகரியமான நிலைமையில் இப்போதுள்ள பிரிட்டிஷாரைத் தம் சௌகரியத்தை விட்டுக்கொடுக்கும்படி நாம் கேட்க முடியாது. நாம் அவர்களைக் காலிசெய்யும்படி சொல்லக்கூடாது.

கடைசியாக, நமக்குத் தெரிந்த முறைகளைக் கையாண்டு நாமே நம்மை பாதுகாத்துக்கொள்ளத்தான் வேண்டும்; ஆயினும், நாம் மேற்கொள்ளும் அஹிம்சையால் பிரிட்டிஷாருக்குத் துன்பம் நேர்ந்து, அவர்கள் தோல்வியுறும்படி இருத்தலாகாது. அப்படி நாம் நடந்துகொள்வோமாயின், சென்ற இருபத்திரண்டு ஆண்டுகளாக உருவாகிவந்த நமது சரித்திரமே பொய்யென்று கூறுவதாக முடியும்.

# ஓ! இந்தத் துருப்புகளா?

"தானாக விட்டுவிடுவது என்பதில் எவ்வளவு பொருள் உண்டோ, அவ்வளவும் அடங்கத்தக்க வகையில், இந்தியாவைப் பிரிட்டன் நேர்மையான முறையில் தானாக விட்டுவிடுவாமாயின், அச் செய்கை, இந்த நூற்றாண்டிலேயே மிகவும் மகத்தானதொரு செயலாக விளங்குவதோடு, யுந்தத்தின் போக்கையே அது மாற்றி விடவுங் கூடும்."

ஒரு பிரிட்டிஷ் போர்வீரன்கூட இராத சுதந்திர இந்தியாவை மிகவும் கவர்ச்சிதரும் வகையில் நான் சித்திரித்திருக்கிறேன். அப்படி சித்திரித்ததற்காக, பட்டு அனுபவிக்கவேண்டியிருக்கும் சிரமம் கொஞ்சமல்ல. எவ்வித சந்தர்ப்பத்திலும் பிரிட்டிஷ் துருப்புகளுக்கும், ஏன் அமெரிக்கத் துருப்புகளுக்குகூட, நான் கூறும் திட்டத்தின்படி இங்கே இடம் கிடைத்துவிடும் என்பதாக எண்ணி நண்பர்கள் குழப்பமடைகிறார்கள். ஆனால், இந்திய ஜனங்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ, அல்லது இந்தியப் பணத்திற்குக் கேடான வகையிலோ இத் துருப்புகள் இருக்கமாட்டாவென்றும், இருக்க நேர்ந்தால், சுதந்திர இந்தியாவோடு ஒப்பந்தம் செய்துகொண்டு நேசநாடுகளின் செலவில்தான் இருக்குமென்றும், ஜப்பானை விரட்டியடித்துச் சீனத்தைக் காக்கும் ஒரே காரியத்துக்காக மட்டுந்தான் துருப்புகள் இங்கே தங்கியிருக்கக் கூடும் என்றும் எத்தனையோ முறை நான் விளக்கிச்சொல்லியும் பலன் இல்லை.

யுத்தம் நடந்துகொண்டிருக்கும் காலம்வரையில் இந்தியாவில் நேசத் துருப்புகளுக்குத் தங்க இடம்கொடுக்க மறுப்பது இந்தியாவையும் சீனாவையும் ஜப்பான்வசம் ஒப்படைப்பதுபோலாகும் என்றும், இதனால் நேசநாடுகளுக்கு நிச்சயம் தோல்வி ஏற்படும் என்றும் சொல்லிவருகிறார்கள். இத்தகைய எண்ணம் என் மனதில் ஒருபோதும் உதித்திருக்க முடியாது. துருப்புகள் தங்கியிருப்பதை நாம் சகித்துக்கொள்ள வேண்டியதுதான் என்பதே நான் இதற்குக் கூறத்தக்க பதில்; ஆனால், ஆளுவோர் என்ற முறையில்

இப்போது தங்கியிருப்பதுபோலன்றி, நண்பர்கள் என்ற முறையில்தான் துருப்புகள் இங்கு தங்கலாம்.

எவ்வித பயமோ அவநம்பிக்கையோ கூடாது என்பது நான் கூறும் திட்டத்துக்கு அடிப்படை. நம்மிடத்திலேயே நமக்கு உறுதி இருக்குமானல், நேசத் துருப்புகள் இங்கு தங்குவதைப்பற்றிச் சந்தேகமோ, அல்லது பயமோ கொள்ள வேண்டியதில்லே.

இப்போது கூறிவரும் திட்டம் மிகவும் சங்கடமான ஒரு காரியம். துருப்புகள் இங்கே தங்க இடம் கொடுத்தாலும் இத் திட்டத்தை ஏற்றுக்கொள்வார்களோ என்பது சந்தேகம்தான்; அப்படியிருக்கும்போது, இதில் காணப்படும் அற்பமான விஷயங்களேப் பரிசீலனே செய்ய முயல்வது தவறு; இக்காலத்துக்கு உவந்ததல்ல என்பதை நான் சொல்லவே வேண்டும். தாளுக விட்டுவிடுவது என்பதில் எவ்வளவு பொருள் உண்டோ, அவ்வளவும் அடங்கத்தக்க வகையில் இந்தியாவை பிரிட்டன் நேர்மையான முறையில் தானுக விட்டுவிடுமாயின், அச்செய்கை இந்த நூற்ருண்டிலேயே மிகவும் மகத்தான தொரு செயலாக விளங்குவதோடு யுத்தத்தின் போக்கையே அது மாற்றிவிடவுங் கூடும். ஜப்பானியப் படையெடுப்பைத் தடுக்கிற ஒரே நோக்கத்தோடு நேசநாட்டுத் துருப்புகள் இங்கு தங்கியிருக்கிறபடியால், தாளுக இந்தியாவை விட்டுவிடுவதற்குள்ள மேன்மைக்கும் மதிப்புக்கும் எவ்விதத்திலும் இழுக்கு நேராது என்றே நான் நினைக்கிறேன். யோசித்துப்பார்த்தால், ஜப்பானேத் துரத்தியடிப்பதில் நேசநாடுகளேப் போலவே, இந்தியாவுக்கும் அக்கரை உண்டு. ஆனல், நான் கூறும் திட்டத்தின் பிரகாரம் துருப்புகளுக்காகவேண்டி, இந்தியா ஒரு பைசாக் கூடச் செலவு செய்யவேண்டி இராது.

நான் கூறியுள்ள ஆலோசனேயைப் பிரிட்டிஷார் ஏற்றுக்கொள்வார்களே யானல், அதனல் கண்ணியமான முறையில் சமாதானம் ஏற்பட்டு அதன் பயனுகத் துருப்புகளுமே இங்கிருந்து வாபஸ் ஆகிவிடக்கூடும் என்று முந்தின 'ஹரிஜன்' இதழ் ஒன்றில் முன்னரே தெரிவித்துள்ளேன். எனவே, சந்தேக உணர்ச்சி உள்ளவர்கள்,

தங்கள் கவனத்தை யெல்லாம் பிரிட்டிஷார் தாமாக விட்டு விட வேண்டியதாகிய மகத்தான காரியத்தில் செலுத்தி, காரியம் கைகூடி வரவேண்டிய உதவிகளை யெல்லாம் செய்ய முன்வரும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆகையால், மேலே நான் குறிப்பிட்டுள்ள காரியத்துக்காக இந்தியாவில் துருப்பு களுக்கு இடம் கொடுப்பதைப்பற்றி அவர்கள் கலக்கம் அடைய வேண்டாம்; அப்படித் துருப்புகள் தங்க நேரு வதை நான் கூறியுள்ள ஆலோசனையில் தவிர்க்க முடியாத ஒரு பகுதி யென்றும், எனது ஆலோசனை நியாயமானதாக வும் தோல்வியுறாததாகவும் அமைவதற்கு இந்த நிபந்தனை அவசியமான தென்றும் கருதுவார்களாக. என் அறிவுக்கு எட்டியவரையில், துருப்புகள் தங்குவதால் சுதந்திர இந்தி யாவுக்கு யாதொரு கெடுதலும் நேராது. அதனுடைய சுதந்திரத்தின் பெருக்கமும் அதனால் குறைவடையாது.

எனது திட்டத்தை ஏற்பதனால் பின்வரும் நிலைமை ஏற்படும்:

1. பண சம்பந்தமாக, பிரிட்டனோடு இந்தியாவுக்குள்ள எல்லாக் கட்டுபாடுகளிலிருந்தும் இந்தியா விடுதலை பெறு கிறது.

2. வருஷந்தோறும் பிரிட்டன் செல்வத்தைச் சுரண்டி யடித்துக்கொண்டு போவது தானாகவே நின்றுவிடுகிறது.

3. அதிகாரம் ஏற்றுக்கொண்ட சர்க்கார் விதிக்கிற வரிகள், அல்லது அப்படியே வைத்துக்கொள்ளும் வரிகளைத் தவிர, மற்ற வரிகள் எல்லாம் நின்றுவிடும்.

4. இந்த நாட்டின் பெரியோர்களையும்கூட அடிமைப் படுத்திவைத்திருக்கும் சர்வ சக்திவாய்ந்த அதிகாரவர்க்கத் தின் வீணான பெரும்சுமை அடியோடு நீங்கிவிடும்.

5. சுருக்கமாய்ச் சொன்னால், இந்தியா தனது தேசிய வாழ்வில் புதியதொரு அத்தியாயத்தைத் தொடங்குகிறது. அஹிம்சை என்ற ஆயுதத்தைத் தனது முக்கிய கருவி யாகக்கொண்டு, யுத்தத்தின் பலாபலன்களையே இந்தியா மாற்றிவிடக் கூடு மென்று நான் நம்புகிறேன். இந்த அஹிம்சையானது ஒத்துழையாமை போன்ற உருவத்தில் வெளிப்படாது. அச்சுநாடுகளிடம் தனது தூதர்களை

அனுப்பி, கண்ணியமான முறையில் முடிவு காண்பதற்கு யுத்தம் தக்கதல்ல என்பதை எடுத்துக்காட்டும். ஆனல், சமாதானம் அடைவதற்கு மண்டியிட்டுக் கேட்கும் நிலையில் அவர்களை அனுப்பிவைக்காது. அனேகமாய் உலகமே இதுவரை கண்டறியாத அளவில், நிர்வாகத் திறனேடும் வெற்றிகரமாகவும் பலாத்காரத்தைக் கையாண்டு, ஏராள மான லாபத்தைத் தேடிக்கொண்ட பிரிட்டன், அந்த லாபத்தையெல்லாம் பிரிட்டன் விட்டுக்கொடுக்க விரும்பினலன்றி, இது சாத்தியமாகாது; அப்படி விட்டுக்கொடுக்கிற போதுதான் இது சாத்திய மாகும்.

இவை யாவும் நடைபெருமல் போனலும் போகக்கூடும். அதைப்பற்றி நான் கவலைப்பட வில்லை. இதற்காக ஒரு தேசம் தன்னிடமுள்ளது அனைத்தையுமே செலவிட்டாலும் பாதகமில்லை; அதற்காகவே போராடத்தக்க தகுதிவாய்ந்தது, இந்தக் கொள்கை.

# இந்தியாவில் நண்பர்களின் ஆம்புலன்ஸ் யூனிட்

"அடிமை யொருவனுக்கு சுதந்திரம் வழங்க விரும்பினால், அதற்கு அவ் வடிமையான் சம்மதம் வேண்டும் என்பதில்லை; அடிமை விலங்கையே அவன் ஆசையோடு கட்டிக்கொள்வது முண்டு. அவன் உடலில் அந்த விலங்கே ஒரு பகுதியாகி விடுகிறது. எனவே, அதைத் தனியேபிய்த்துத் தூர எறிய வேண்டும். இந்தியாவை விட்டு வாபஸ்ஆவது உங்கள் கடமை. ஆதலால் நீங்கள் வாபஸ் ஆகியே தீரவேண்டும். இந்தியாவிலுள்ள சகல கட்சிகள், வகுப்புக்கள் ஆகியோரின் ஏகோபித்த சம்மதத்திற்காக நீங்கள் காத்துக்கொண் டிருக்கலாகாது."

யுத்தம் சமாதானம் இரண்டையும்பற்றிச் சற்றே மாறுபட்ட அபிப்பிராயங்கொண்ட தொண்டர்கள் அடங்கிய ஒரேகூட்டம் ஆகும், நண்பர்களின் ஆம்புலன்ஸ் யூனிட் என்பது. மனச்சாட்சிக்கு விரோதமின்றி யுத்தத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளவோ, அல்லது பலாத்கார முறையைக் கையாண்டு அதன்மூலம் தமது இலட்சியங்களை நிறைவேற்ற நிறுவியுள்ள ஸ்தாபனங்களில் கலந்து கொள்ளவோ இஷ்டப்படாதபோதிலும், யுத்தத்தினால் சங்கடப்படுகிற இவ்வுலகின் துயரத்திலும் துன்பத்திலும் இவர்கள் பங்குகொள்ள விரும்புகிறார்கள். எனவே, துன்பப் படுவோருக்கு ஆறுதலானவற்றைச் செய்யவும் காயப் பட்டு வருந்துவோருக்குச் சிகிச்சை செய்யவும், தங்கள் சேவையை வேண்டுவோரிட மெல்லாம் சென்று தொண்டு செய்வதைக் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சுமார் 700 பேர்; இவர்களுக்குச் சம்பளமில்லை. உணவும் இருக்கை வசதியும் மட்டுமே பெற்று, எங்கு தங்களை அழைப்பினும், அங்கெல்லாம் சென்று தொண்டு புரிவ தென்று இவர்கள் உறுதிகொண்டுள்ளார்கள். முதல் சிகிச்சை, விஷப்புகையினின்றும் பாதுகாத்தல், காயப்பட்டோரைத் தூக்கிச்செல்லுதல் முதலியவற்றில் பயிற்சிபெற்று இருப்பதுடன், ஆஸ்பத்திரிகளிலும் இவர்கள் பயிற்சிபெற்று

இருக்கிறார்கள். தற்போதைய யுத்தத்தில் இந்த யூனிட்டைச் சேர்ந்தவர்கள் லண்டனிலும் இங்கிலாந்திலுள்ள அனேக இடங்களிலும், பின்லாந்து, நார்வே, கிரீஸ், மத்திய சீனு, பர்மா ரோட், லிபியா, சிரியா முதலிய இடங்களிலும் சேவை புரிந்திருக்கிறார்கள். ஜெர்மனி, போலந்து, ஹாங்காங் முதலிய இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளிலும் இவர்கள் சேவை செய்திருக்கிறார்கள்.

பிரிட்டனில் குண்டுவீச்சு நடந்த இடங்களில் தொண்டு செய்து அனுபவம் அடைந்த சிலர், யுத்தத்தில் ஜப்பான் கலந்துகொண்ட பிறகு, தாங்கள் பெற்ற அனுபவத்தோடு இந்தியாவுக்கு வந்து தொண்டு செய்தால் நலமுண்டு என்று கருதினார்கள். எனவே, ஒரு சிறிய கூட்டத்தினரை இந்தியாவுக்கு அனுப்பி, இயலுமானல், இங்கு அதே துறையில் தாமாகவே உழைத்துவரும் ஸ்தாபனங்களோடு கலந்து உழைக்கச் செய்ய உத்தேசித்தார்கள். அவ்விதமே, ஆடவர் அறுவரும் பெண்டிர் இருவரும் ஆக எட்டுப் பேர் இங்கு அனுப்பப் பெற்றனர். பர்மிங்காம் உட்புருக் கல்லூரி ஆசிரியர் ஹோரேஸ் அலெக்ஸாண்டர் இக் குழாத்துக்குத் தலைவர். அலெக்ஸாண்டரும் ரிச்யர்டு சைமண்ட்ஸ் என்பவரும் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஆசிரியர் அலெக்ஸாண்டர் பழைய நண்பர். பெல்லோஷிப் ஆப் ரிகன்ஷிலியேஷன் என்ற சபையைச் சேர்ந்தவர். பல ஆண்டுகளாகவே இந்திய விவகாரங்களைக் கவனித்துப் பரிவு காட்டியவர். சைமண்ட்ஸ் இளம் பிராயத்தினர்; சமீபத்தில் தான் ஆக்ஸ் போர்ட்டில் படித்து வெளிவந்தவர். ஆயினும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள காரியத்தில் மிக்க அனுபவம் வாய்ந்தவர்: லண்டன் பாதுகாப்பு அரண்களில் வைத்திய உதவி புரிந்திருக்கிறார்; அபாய ஸ்தலத்திலிருந்து மக்களை வெளியேற்றும் காரியங்களில் சுறுசுறுப்பான முறையில் ஈடுபட்டு உழைத்திருக்கிறார். பாக்கிப் பேர் இன்னும் வந்து சேரவில்லை: கப்பலில் வந்துகொண்டிருக்கிறார்கள். மற்ற அறுவர், அலெக் ஹார்ஸ்பீல்டு, பிரியன் குரோவஸ், கென்னத் கிரிப்பின், கிளான்மூர் டேவிஸ் என்ற ஆடவர்களும், மிஸ் ஜீன் காப்பிள், மிஸ் பாமிலா பாங்

கார்டு என்ற பெண்களும் ஆவர். இங்கிலாந்தில் குண்டு வீச்சு நடந்த இடங்களில் இவர்கள் தொண்டு புரிந்து அனுபவம் அடைந்தவர்கள்.

"பிரீட்டிஷார் இந்தியாவிலிருந்து வாபஸ் ஆக வேண்டும் என்று தாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில், ஆங்கிலேயர் குழாம் ஒன்று இந்தியாவுக்கு வருவது சுப சூசகமானதாகுமா?" என்று ஆசிரியர் அலெக்ஸாண்டர் சிரித்தபடியே கேட்டார். "இந்தியாவிலும் ஒரு சிறிய குழாத்தை எங்களோடு சேர்த்துக் கொண்டு, இரண்டு குழாமுமாய்க் கலந்து பணி செய்யலாம் என்று மிஸ் அகாத்தா* கூறினர்" என்றார்.

"நான் முதலில் எழுதியபோது, இப்படிப்பட்ட பயம் உண்டானது உண்மைதான். மனத்திலுள்ள கருத்தை நான் அப்போது முழுதும் தெரிவிக்கவில்லையாதலால், இந்தச் சங்கடம் நேர்ந்தது. எதையும் தெளிவுபடுத்தி, முடிந்த விஷயமாகத் திடீரென்று தெரிவிப்பது எனக்கு வழக்கமில்லை. இதுபற்றி என்னைக் கேள்வி கேட்ட அந்தக் கணமே, என் கருத்தை விளக்கிவிட்டேன். ஆங்கிலேயர் யாருமே இருக்கக்கூடாது என்று நான் கருதவில்லை யென்றும், பிரிட்டிஷ் ஆதிக்கம் மட்டுமே இந் நாட்டைவிட்டு அகல வேண்டும் என்பதையே அது குறிக்கும் என்றும் சொன்னேன். எனவே நீங்கள் நண்பர்களா யிருப்பதைப்போல, ஆங்கிலேயர் ஒவ்வொருவரும் நண்பராக மாறி, அந்த முறையில் இந்தியாவில் தங்கலாம். அதிகார ஆதிக்கத்தை விட்டு விலகி நின்று, தான் காண்பது அனைத்துக்கும் தானே எஜமான் என்ற எண்ணத்தை விட்டொழித்து, இங்கு மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களோடு தங்களையும் ஒருவரெனக் கருதும் மனப்பாங்கு ஒவ்வோர் ஆங்கிலேயருக்கும் ஏற்பட வேண்டுமென்பதே முக்கியம். இவ்வித உணர்ச்சி அவருக்கு ஏற்படத் தொடங்கிய அக்கணமே அவரைத் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவராகவே இந்தியர் கருதிவிடுவார்கள்: ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்ற நிலை அவரை

* மிஸ். அகாத்தா ஹாரிஸன் என்பவர் வீட்டில்தான், காந்திஜி இரண்டாம் வட்டமேஜை மகாநாட்டுக்காக லண்டன் சென்றபோது தங்கியிருந்தார்.

விட்டொழிய வேண்டும். எனவே, வெளியேற வேண்டும் என்றபோது எஜமானன் என்ற பதவியிலிருந்து வெளியேற வேண்டும்' என்ற கருத்துடனேதான் சொன்னேன். வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையில் இன்னொரு விஷயமும் தொக்கி நிற்கிறது. இங்குள்ளோர் யாருடைய விருப்பத்தையும் கவனிக்காமல், நீங்களாகவே வெளியேற வேண்டும். அடிமை யொருவனுக்கு சுதந்திரம் வழங்க விரும்பினால், அதற்கு அவ் வடிமையான் சம்மதம் வேண்டும் என்பதில்லை. அடிமை விலங்கையே அவன் ஆசையோடு கட்டிக்கொள்வதுமுண்டு; அவன் உடலில் அந்த விலங்கே ஒரு பகுதியாகி விடுகிறது. எனவே அதைத் தனியே பிய்த்துத் தூர எறிய வேண்டும். இந்தியாவைவிட்டு வாபஸ் ஆவது உங்கள் கடமை. ஆதலால், நீங்கள் வாபஸ் ஆகியே தீரவேண்டும். இந்தியாவிலுள்ள சகல கட்சிகள், வகுப்புக்கள் ஆகியோரின் ஏகோபித்த சம்மதத்திற்காக நீங்கள் காத்துக்கொண் டிருக்கலாகாது.

"எனவே, இந்தச் சமயம் உங்களுக்குச் சுபமுகூர்த்தமாயில்லை என்பது பற்றிய பேச்சுக்கே இடமில்லை. நான் கூறும் ஆலோசனையை நீங்கள் ஏற்று நடத்த முடியுமானால், இந்த நிமிஷமே நீங்கள் இந்தியாவிற்கு வருவதற்கு மிகவும் சுபமான முகூர்த்தமாகும். அனேக ஆங்கிலேயரை நீங்கள் இங்கு சந்திப்பீர்கள். என் திட்டத்தை முழுதும் அவர்கள் தப்பாகவே அர்த்தம் செய்துகொண் டிருக்கலாம். அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று நான் என்ன எதிர்பார்க்கிறேன் என்பதைத் தெளிவாக நீங்கள் அவர்களுக்கு விளக்கிச்சொல்ல வேண்டிவரும்.

"ஆகவே, உண்மையைக் கூறுமிடத்து, நீங்கள் செய்யப்போகும் பணியில் இதுவே, முக்கிய அங்கம் வகிக்க வேண்டும். உங்களை இங்கு அனுப்பத் துணை செய்த இந்தியா காரியாலயத்தார்கூட உங்களைப்பற்றித் தவறுதலாக நினைக்க முடியாது. அனேகமாய் இந்தியாவில் குண்டுவீச்சு நடைபெறாது. அப்படி நடந்தாலும் இவ்வளவு பெரிய தேசத்தில் எங்குமே சென்று உங்களால் தொண்டு செய்வதும் இயலாது. வருந்துவோருக்கு உதவி செய்யும் பணி

யோடுகூட, இந்தப் பணியையும்-அதாவது எனது கருத்தை எடுத்துச்சொல்லி, சமாதானம் செய்யும் பணியையும்-நீங்கள் மேற்கொள்ள வேண்டும். எனவே, நீங்கள் செய்யும் பணியை என்னிடமிருந்து தொடங்குவதே ஒருவேளை நல்லதானாலும் ஆகலாம். என் மனத்தில் ஒதுங்கிக் கிடப்பவற்றையெல்லாம் திட்டமான முறையில் தெரிந்துகொள்ள முயலுங்கள். அது சம்பந்தமாக உங்கள் மனத்தைக் குழப்பக்கூடிய பிரசினைகள் சம்பந்தமான எல்லாக் கேள்விகளையும் கேட்டுத் தெரிந்துகொள்ள முயலுங்கள்.''

இப்படிக் காந்திஜி தெரிவித்ததும் அந்த நண்பர்கள் இருவருக்கும் சௌகரியமாயிற்று. காந்திஜியின் உள்ளத்தில் அடிப்படையா யிருந்த அபிப்பிராயம் முழுவதையும் அவர்கள் தெரிந்துகொள்ள முயன்றார்கள். இது சம்பந்தமாக, விநோதமான, ஆனால், முக்கியமான செய்தி யொன்றை நான் சொல்ல விரும்புகிறேன். சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் இந்தியாவுக்குத் தூது வருகிறார் என்று அறிவிக்கப்பட்டதும் ஆசிரியர் ஹோரேஸ் அலெக்ஸாண்டரும் மிஸ் அகாத்தா ஹாரிஸனும் சேர்ந்து காந்திஜி உபயோகப்படுத்தும் சொற் சொற்றொடரான 'ஆண்ட்ருஸ் சாசனம்' என்ற தொடரைக் குறிப்பிட்டு, காந்திஜிக்குத் தந்தி யடித்திருந்தார்கள். இதன் பொருள், ஆண்ட்ருஸை நினைவுகூர்ந்து, ஆங்கிலேயருள் சிறந்தோரும் இந்தியருள் சிறந்தோரும் முனைந்துநின்று, இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கு மிடையில் நிலையான நல்லுணர்ச்சியைத் தோற்றுவிக்க முயல வேண்டும் என்பதாகும். மொத்தமாக அவர்கள் அந்தத் தந்தியில் குறிப்பிட்டிருந்ததாவது. ''மிகச்சிறந்த ஆங்கிலேயர்களில் ஒருவர் இந்தியாவுக்கு வருகிறார். இந்த மகத்தான சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், தாங்கள் அவருடன் ஒருவித ஏற்பாட்டுக்கு வருவது நல்லது.''

கிரிப்ஸ் பேச்சுவார்த்தை முறிந்துபோனவுடனே இந்தத் தந்திக்குப் பதில்எழுதும் முறையில், ஹோரேஸ் அலெக்ஸாண்டருக்குக் காந்திஜி நீண்டதொரு கடிதம் எழுதியிருந்தார். பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்ற தமது எண்ணத்தைக் காந்திஜி

முதன்முதலாக அந்தக் கடிதத்தில்தான் குறிப்பிட்டார். இதைப்பற்றி அவர் அதுவரை யாரிடத்திலுமே வாதித்த தில்லை. டெல்லியிலிருந்து திரும்பிய பிறகு, இந்த எண்ணம் அவருடைய மனத்தில் உருவாகிக்கொண் டிருந்தது போலும். எனவே, கடிதம் எழுதிக்கொண் டிருந்த சமயம், அந்த எண்ணம் முதன்முதலாக எழுத்தில் வந்தது. "ஸார் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் வந்தார், திரும்பிவிட்டார். துக்ககர மான இப்படிப்பட்ட தூது பற்றி அவர் வந்திராவிட்டால், எவ்வளவோ நன்ரு யிருந்திருக்கும்...........இந்த விதமான சங்கட நிலையில் பிரிட்டிஷ் சர்க்கார் இப்போது நடந்து கொண்டதைப்போல், நடக்க அவர்களுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ? முக்கியமான கட்சிகளோடு கலந்து பேசாமல் ஏன் ஆலோசனைகளைக் கூறினர்கள் என்பது விளங்கவில்லை. கட்சிகளில் ஒன்றுக்குக்கூட இத்திட்டம் திருப்தி யளிக்க வில்லை. எல்லோரையுமே திருப்தி செய்ய முயன்று, கடைசியில் இதனல் ஒருவருமே திருப்தியடைய வில்லை" என்று காந்திஜி அந்தக் கடிதத்தில் குறிப்பிட் டிருக்கிருர்.

"வேறு ஒன்றை நினைத்துப் பேச எண்ணுவிடினும் ஆண்ட்ருஸை நினைந்து, நண்பன் என்ற முறையில் நான் ஸ்டாப்போர்டு கிரிப்ஸோடு மனதைத் திறந்து பேசினேன். ஆண்ட்ருஸின் ஆவியைச் சாட்சியாக வைத்து, நான் பேசியதாகவும் அவரிடம் சொன்னேன். சில விஷயங் களைக் குறிப்பாகவும் எடுத்துக்காட்டினேன். ஆனல், ஒன்றும் பலிக்கவில்லை. வழக்கம்போல், அவை நடை முறைக்கு ஏற்றனவா யில்லை. அவரைக் கண்டு பேச எனக்கு விருப்பமில்லை. எவ்வித யுத்தத்துக்குமே நான் விரோதி ஆனபடியால் நான் சொல்லத்தக்கது எதுவுமே யில்லை. என்னைக் கண்டுபேச ஸர் ஸ்டாப்போர்டு விரும்பிய படியால்தான் நான் சென்றேன். நிலைமை எப்படி என் பதை நீங்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டே இவற்றைத் தங்களிடம் சொல்லுகிறேன். காரியக் கமிட்டியோடு பேச்சு வார்த்தைகள் நடந்துகொண் டிருந்தபோது நான் உடன் இல்லை. இங்கு புறப்பட்டு வந்துவிட்டேன். பலனைத்

தாங்கள் அறிவீர்கள். இது தவிர்க்க முடியாத தொன்று. முடிவில், அனைத்துமே வெளியில் சொல்ல முடியாதபடி நாற்றம் எடுத்துவிட்டது."

இனி வருவதுதான் முக்கியமான பகுதி: "ஒழுங்கான முறையில் இந்தியாவைவிட்டு, பிரிட்டிஷார் வெளியேற வேண்டிய காலம் வந்துவிட்டதென்பதே எனது உறுதியான நம்பிக்கை. சிங்கப்பூர், மலேயா, பர்மா முதலியவற்றை அபாயத்திற்கு உட்படுத்தியதுபோல, அவர்கள் இந்தியாவையும் உட்படுத்தலாகாது. இப்படி அவர்கள் செய்வார்களேயானல், அந்தச் செயல் மிக மேலான தைரியத்துக்கும் மனிதருக்குள்ள ஆற்றலின் குறைபாடுகளை உணரும் தன்மைக்கும் இந்தியாவுக்கு நேர்மையான காரியத்தைச் செய்வதற்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும்.

இந்தக் கடிதம் ஏப்ரல் 22உ யன்று விமானத் தபால் மூலம் அனுப்பப்பட்டது. ஆனல், அது போய்ச் சேருமுன், ஹொரேஸ் அலெக்ஸாண்டர் இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டார். எனவே, இந்த மகத்தான அபிப்பிராயத்தைக் காந்திஜி முதன்முதலாகத் தம்மிடமே தெரிவித்துள்ளார் என்பதைக் கண்டு, ஹோரேஸ் அலெக்ஸாண்டர் மிகவும் ஆச்சரிய மடைந்தார்.

இந்தக் கடிதத்தில் கண்டுள்ள பகுதிகளுக்கு வியாக்கியானம் செய்வதாகவே இருந்தது, காந்திஜி பேசிய பேச்சு. "ஒழுங்கான முறையில் வெளியேறுவது என்ற சொற்களை உபயோகித்திருப்பதைத் தாங்கள் காணலாம். சிங்கப்பூரையும் பர்மாவையும் ஞாபகம் வைத்து, இந்தச் சொற்களை உபயோகித்திருந்தேன். ஒழுங்கற்ற முறையில் பிரிட்டிஷார் அங்கு இருந்து வெளியேறினர்கள். பர்மாவையும் மலேயாவையும் அவர்கள் கடவுளிடமோ, அல்லது அராஜகத்திடமோ ஒப்படைக்கவில்லை; ஜப்பானியர் வசமே ஒப்படைத்தார்கள்! அதே கதையை மீண்டும் இங்கு நடத்த வேண்டாம். இந்தியாவை ஜப்பானியரிடம் ஒப்படைக்காமல் இந்தியர்களிடமே ஒழுங்கான முறையில் ஒப்படைத்து, வெளியேறுங்கள், என்றுதான் நான் சொல்லுகிறேன்" என்று சொல்லி, நீண்ட நேரம் பேசிக்கொண் டிருந்த பேச்

7

சைக் காந்திஜி முடித்தார். நான் எடுத்துக்காட்டிய கடிதம் குறிப்பிடுவதைப்போல, பேச்சு முழுதுமே ஆண்ட்ருஸின் நினைவால் தூண்டப்பட்ட தாகும். ஆண்ட்ருஸை எண்ணி, அவர் செய்த மகத்தான சேவைகளை யெல்லாம் நினைந்து சொல்லப்பட்டதாகையால், பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டுமென்று கோரியது நட்புரிமை பாராட்டிச் சொன்ன கோரிக்கையாகும். "ஆண்ட்ருஸ் செய்து வந்ததைப் பின்பற்றியே நீங்களும் நடந்துகொள்ள வேண்டும். வேண்டியபடி குறுக்குக் கேள்விகள் கேட்டு, என்னை நீங்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். நான் சொல்வது உங்கள் மனத்திற்கு நியாயமென்று தோன்றினால், எனது கருத்துக்களை நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்" என்றார் காந்திஜி. இதைக் கேட்டதும் அலெக்ஸாண்டருக்கு உணர்ச்சி வெள்ளம் பொங்கி வந்தது. அவர் சொன்னார்: "ஆண்ட்ருஸுக்கு இருந்த ஆற்றலோ, தைரியமே எங்களிடம் இல்லை. அந்தத் துறையில் முயன்று பார்க்கிறோம்."

எங்கிருந்து வேலை தொடங்கலாம் என்பதைப்பற்றிய முடிவுக்கு வருமுன்னர், பலரைக் கண்டுபேசவும் பல இடங்களுக்குச் சென்று விஷயங்களை நேரில் கண்டறியவும் அவர்கள் விரும்பினார்கள். அவர்களுடைய தோழர்கள் இன்னும் ஒரு வாரத்திற் கிடையில் வந்து சேரமாட்டார்கள். ஆகையால், அவர்கள் தங்கள் வேலையைத் தொடங்கக் கொஞ்ச காலம் பிடிக்கும். ஏ.' ஆர். பி. ஸ்தாபனங்கள், தாமே சேவை செய்ய முன்வந்துள்ள ஸ்தாபனங்கள் ஆகியவற்றோடு அவர்களும் கலந்துழைத்து வருவார்கள்.

# வர்தாவில் கொடுத்த பேட்டி

"எவ்வளவு காலதாமமாயினும்கூட, பல வேறு கட்சிகளோடு கலந்து பேசவேண்டியதை ஒரு சாக்காகச் சொல்லாமல், இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதன் அவசியத்தை உணரும் நல்லறிவு பிரிட்டிஷாருக்கு வருமானல், யாவும் சாத்தியமே. ஆனல், நான் அழுத்தமாய்ச் சொல்லவிரும்பும் விஷயம் இதுவாகும்: வெளியேற வேண்டும் என்ற எங்கள் திட்டத்தில், எவ்விதமான பேச்சுவார்த்தைக்கும் நாங்கள் இடம் விட்டுவைக்கவில்லை. ஒன்று, இந்தியாவின் சுதந்திரத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும், அல்லது ஏற்றுக்கொள்ளாமலிருக்க வேண்டும்; விஷயம் இவ்வளவுதான்."

ஜூலை மாதம் 14வ செவ்வாய்க்கிழமை காரியக் கமிட்டியின் கடைசிக் கூட்டம் முடிந்தபிறகு, காந்திஜி அனேக பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அயல்நாட்டுப் பத்திரிகைகள், உள்நாட்டுப் பத்திரிகைகள் ஆகியவற்றின் நிருபர்கள் பலருக்கும் கலந்து அளித்த பேட்டி இது. கடைசியாக அவர்கள் கேட்ட கேள்வியை நாம் முதலில் பார்ப்போம். தாம் தயாரித்துக்கொடுத்த திட்டத்தை வைத்துக் கொண்டே, காரியக் கமிட்டி தன் தீர்மானத்தை உருவாக்கிற்று என்றும், பலரோடு கலந்து பேதியதன் பயனுய் அதில் சில பகுதிகளைப் புதிதாகச் சேர்த்தும், சில பகுதிகளை விலக்கியும் இருக்கிறதென்றும், காந்திஜி விளக்கிச்சொன்னர். "அத் தீர்மானத்தை நான் அங்கீகரித்திராவிட்டால், தீர்மானம் நிறைவேறியிராது. நான் அத் தீர்மானத்தை முற்றும் ஆதரிக்கிறேனு இல்லையா என்ற கேள்விக்குப் பதில் சொல்வது கடினம். ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தையும் ஒரு கூட்டத்தார்களனைவருமே ஒப்புக்கொள்வது அனேகமாய் மனித இயல்புக்கு இயைந்த காரிய மன்று. ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்துப் போவதற்கு எப்போதும் இடமுண்டு. ஆயினும், என்னைப் பொறுத்தவரையில், காரியக் கமிட்டி என்னிடம் மிக்க தாராளபுத்தியோடு நடந்துகொண்டது என்றே நான் தெரிவிக்க வேண்டும்."

## பொதுஜன இயக்கம்

"அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடி, காரியக் கமிட்டியின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமானல், அதன் பிறகு தாங்கள் செய்யவிருக்கும் காரியங்கள் யாவை என்பதைத் தாங்கள் தெரிவிக்க இயலுமா?" என்று அமெரிக்கா அஸோஸியேடெட் பிரெஸ் நிருபர் கேட்டார்.

"இந்தக் கேள்வியைக் கேட்கக்கூடிய தருணம் இன்னும் வரவில்லை. இந்தத் தீர்மானத்தை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி நிராகரித்துவிடுமானல், விஷயமெல்லாமே மாறிவிடுகிறது. ஆனல், ஒன்று மட்டும் நிச்சயம். நடக்கப்போகிற இயக்கம் பலாத்காரமற்ற பொதுஜன இயக்கமாயிருக்கும். மற்ற விவரங்களை நீங்கள் பின்னர் தெரிந்துகொள்ளலாம். பொதுஜன இயக்கத்திற்கு அவசியமானவை யாவும் இந்த இயக்கத்தில் அடங்கியிருக்கும்."

"அன்னியத் துணிக்கடை அடைப்பு, கள்ளுக்கடை அடைப்பு ஆகியன இதில் சேர்த்துக்கொள்ளப்படுமா?"

"இது சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. இயக்கத்தின் நேரடியான பலன் கலகம் விளைவதாயிருத்தல் கூடாதென்பது என் கருத்து. முன்னேற்பாடுகளையெல்லாம் மீறிக் கலகம் ஏற்படுமாயின், நம்மால் ஒன்றும் செய்வதற்கில்லை." இந்தக் கேள்வியை அவர்கள் அதிகம் வளர்த்தவில்லை. இவ்விஷயத்தின் இயல்பையொட்டி இப்படி வளர்த்தவும் இடமில்லை. மறியல், சமாதானமாய் எடுத்துக்கூறல் ஆகியவற்றை நினைவில் வைத்துக்கொண்டு, கேள்வி கேட்டவர் இந்தக் கேள்வியை கேட்டார்போலும். தானியக் கடைக் கொள்ளைகள் நடந்தது நினைவுக்கு வரவே, காந்திஜியும் துணிக்கடைக் கொள்ளை என்று கருதிப் பதில் சொல்லியிருக்கலாம். இந்தவிதமான கலகங்கள் நடந்தால், இதைப் பொருளாதார நிலையின் சீர்கேட்டால் விளைந்தது என்று கொள்ளவேண்டுமேயன்றி, இயக்கத்தின் பயனுக ஏற்பட்டது என்று கொள்ளலாகாது.

கைது செய்யப்பட்டால்?

"கைது செய்யத்தக்க காரியங்களில் தாங்கள் ஈடுபடுவீர்களா?"

"சிறைப்படுவதை நானுகத் தேடவில்லை. இந்தப் போராட்டத்தில் சிறைவாசத்தைத் தேடத்தக்க காரியம் எதுவுமில்லை. இந்த இயக்கம் தொந்தரவில்லாதது. இது வரை, நாங்கள் சிறைக்குப்போவதை ஒரு தொழிலாகவே கொண்டு அதை விரும்பித் தேடிவந்தோம் என்பதில் சந்தேகமில்லை. ஆனல், இந்தச் சமயத்தில் அத்தகைய காரியம் எதுவும் இராது. கூடுமானவரை முயன்று, இவ்விஷயத்தை குறுகிய காலத்தில் விரைவாக நடத்தவேண்டும் என்பதே என் விருப்பம்."

உடனே அடுத்த கேள்வி வந்தது: "சிறைக்குப் போனல் அங்கு உண்ணுவிரதமிருப்பீர்களா?"

"இந்த முறை சிறைக்குப் போவதில் எனக்கு விருப்பமில்லை என்று சொன்னேன். ஆனல், என்னைச் சிறைப் படுத்திவிடுவார்களேயானல், என்ன நான் செய்வேன் என்று என்னல் சொல்ல முடியாது. கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளாமல் விலக்கவே நான் சாத்தியமான வரை முயன்றுவருகிறேன். ஆயினும், இதற்கு முன் நான் உண்ணுவிரதமிருந்ததைப்போல, இந்த முறையும் என்னல் உண்ணுவிரதமிருக்க நிச்சயம் முடியும்."

பேச்சு வார்த்தையா?

"பிரிட்டிஷ் சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்த முன் வரும் என்ற நம்பிக்கை தங்களுக்குண்டா?"

"பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தாலும் வரலாம். ஆனல், யாருடன் நடத்துவார்கள் என்பதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஏனெனில், ஒரு கட்சியையோ இன்னெரு கட்சியையோ தூண்டிவிட்டுத் திருப்தி செய்கிறவிஷயமல்ல இது. எந்தக் கட்சியின் சம்மதத்துக்காகவும் கவலைப் படாமல், எவ்வித நிபந்தனையுமின்றி, பிரிட்டிஷ் ஆட்சி இங்கிருந்து வெளியேற வேண்டும் என்பதே நாங்கள் கோருவது. எனவே இந்தக் கோரிக்கையானது, அடிப்படையாய்த் தனக்குள் நியாயத்தையே ஒட்டி நிற்பது. வெளி

100272

யேறுவதுபற்றிப் பிரிட்டிஷார் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவது இயற்கை. இப்படி அவர்கள் செய்வார்களாயின், இது பெருமைப்படத்தக்க காரியமாகும். வெளியேற வேண்டும் என்ற பேச்சுக்குரிய இக் காரியம், பின்னர் இந்தப் பேச்சுக்கே இடமில்லாததாகிவிடும்.' எவ்வளவு காலதாமதமாயினும்கூட, பல வேறு கட்சிகளோடு கலந்துபேச வேண்டியதை ஒரு சாக்காகச் சொல்லலாமல் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதன் அவசியத்தை உணரும் நல்லறிவு பிரிட்டிஷாருக்கு வருமானல், யாவும் சாத்தியமே. ஆனல் நான் அழுத்தமாய்ச் சொல்ல விரும்பும் விஷயம் இதுவாகும். வெளியேற வேண்டும் என்ற எங்கள் திட்டத்தில், எவ்விதமான பேச்சுவார்த்தைக்கும் நாங்கள் இடம் விட்டுவைக்க வில்லை. ஒன்று, இந்தியாவின் சுதந்திரத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது ஏற்றுக்கொள்ளாம லிருக்க வேண்டும்; விஷயம் இவ்வளவு தான். அங்ஙனம் ஏற்றுக்கொண்டபின், பல காரியங்கள் நடைபெறுதல் கூடும். பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதிகள் இந்த ஒரே செய்கையால், நிலைமை முழுமையுமே மாற்றி விட்டவர்களாவார்கள். எத்தனையோ முறை ஏமாற்றத்துக்குள்ளான மக்களுக்கு இச் செய்கை புதிய நம்பிக்கையை ஊட்டுவதாயிருக்கும்; ஆகவே, இந்த மகத்தான செயல் பிரிட்டிஷ் மக்களின் சார்பாக நடைபெறுகிற தினத்தன்று, இந்திய சரித்திரத்திலும் உலக சரித்திரத்திலுமே ஓர் ஒப்பற்ற சுதினமாகும். நான் முன்னமே கூறியுள்ளதுபோல், இந்தச் செய்கை யுத்தத்தின் போக்கையே திட்டமாய் மாற்றிவிடவுங் கூடும்.''

"இந்தியாவின் சுதந்திரம் அங்கீகரிக்கப்படுமாயின், உடனே சுதந்திர இந்தியா நடைமுறைக்கு வந்துவிடுமா?''

"ஆம். அந்தக் காலம்முதலே நடைமுறைக்கு வந்துவிடும். ஏனெனில், சுதந்திரம் என்பது காகிதத்தில் இல்லை, செயலில் இருக்கிறது. 'அடுத்தால்போல் சுதந்திர இந்தியா எப்படி அலுவல் நடத்த ஆரம்பிக்கும்' என்று நீங்கள் நியாயமாய்க் கேட்கலாம்! இங்கு ஒரு சிக்கல் இருக்கிறது. அதனல்தான் 'இந்தியாவைக் கடவுளிடமோ, அல்லது

அராஜகத்தினிடமோ ஒப்படைத்துவிடுங்கள்' என்று நான் கூறுவேன். நடைமுறையில் நிகழக்கூடியது இதுதான்: முழுதும் நல்லெண்ணத்தோடு, பிரிட்டிஷார் வெளியேறுவார்களாயின், எவ்விதத் தொல்லையுமின்றி, மாற்றம் நடைமுறைக்கு வந்துவிடும். தொந்தரவு எதுவுமின்றி, மக்கள் தங்கள் உரிமையை அடைவார்கள். பொறுப்புள்ள வட்டாரத்தைச் சேர்ந்த அறிவாளிகள் ஒன்றுகூடி தற்காலிக அரசாங்க மொன்றை நிறுவுவார்கள். எனவே, அராஜகமோ ஆட்சியில் தொடர்பின்மையோ இராது. பெரும் புகழ்தான் வந்துசேரும்."

### வரப்போகும் நிலைமை எப்படி யிருக்கும்?

"அமைக்கப் போகும் தற்காலிக அரசாங்கம் எப்படி யிருக்கு மென்று தாங்கள் சொல்ல முடியுமா?"

"அதைப்பற்றி சிந்திக்கும் அவசியம் எனக்கு ஏற்படவில்லை, ஆனால், அந்த அரசாங்கம் ஒரு கட்சி நடத்தும் அரசாங்கமாயிராது என்பது தெளிவு. காங்கிரஸ் கட்சி உள்பட சகல கட்சிகளும் தாமாகவே கலைந்துவிடும். பிற்பட்டு, அவை நடைமுறைக்கு வந்தாலும் வரலாம். அப்படி வந்தால் ஒரு கட்சிக்கு இன்னொரு கட்சி உதவியாய் இருந்து வேலை செய்யும்; தன் வளர்ச்சிக்கு ஒன்றின் உதவியை ஒன்று நாடி நிற்கும். அப்போது நான் கூறியபடி, சூரியனைக் கண்ட பனிபோல, பொய்ம்மை யாவும் மறையும். இத்தகைய காட்சியை நாம் தினமும் பார்க்கிறோம்; ஆனால், இது எப்படி நிகழ்கிறது என்பதைத்தான் அறிவதில்லை."

"ஆனால், சென்ற காலத்தில் பிரிட்டிஷார் நடந்து கொண்ட முறையைக் கவனித்தால், எப்படியேனும் வழிக்கு வருவார்கள் என்று எண்ண இடமிருக்கிறதா?" என்று இந்திய நிருபர் இருவர் பொறுமை யிழந்து கேட்டார்கள்.

"ஏன் மாட்டார்கள்? அவர்களும் மனிதப் பிறவிகளே. உன்னத நிலைக்கு வருவது மனித இயல்புக்குச் சாத்தியம் என்பதை நான் எப்போதும் நம்பிவந்திருக்கிறேன். தவிர அஹிம்சை முக்கிய மென்று கருதி மட்டுமல்ல, முழுவதுமே அஹிம்சையைக் கடைப்பிடித்து நடத்திய ஒரு சுதந்திர

இயக்கத்தைச் சமாளிக்கும் நிலைமை இதுவரை வேறு எந்த நாட்டுக்கும் ஏற்பட்டதில்லை யல்லவா ?"

"தங்கள் தீர்மானத்தில் வெளிப்படையான ஒரு முரண்பாடு இருக்கிறதே" என்று அவர்கள் மீண்டும் சொன்னர்கள். "பிரிட்டிஷாருக்கு அதிகாரத்தை விட்டுக்கொடுக்கும் எண்ணம் இல்லவே இல்லை என்பதை முதல் பகுதி விவரிக்கிறது. அடுத்தால்போல், விட்டுக்கொடுக்கும் நோக்கம் அவர்களுக்கு இருக்கிறதாகத் தாங்களே குறிப்பிடுகிறீர்கள்!"

"இதில் எவ்வித முரண்பாடும் இல்லை. பிரிட்டிஷார் வெளியேற வேண்டும் என்று நாம் திடீரென்று கோரியதற்கு, தக்க நியாயம் காட்டும் முறையில், விஷயங்கள் விவரிக்கப்பெற்றுள்ளன. மற்றப் பகுதிகள், சாத்தியமானவை யாவை என்பதைக் குறிப்பிடுகின்றன. அனேக காரியங்கள் நடைபெறக்கூடும். அவை அனைத்துமே பிரிட்டிஷாருக்குப் பெருமை தருவனவாயிருத்தலும் கூடும்."

"சீனவில் நேசநாடுகள் செய்யும் முயற்சிக்குத் தங்கள் இயக்கம் தடையா யிராதா?"

"இராது. நேசநாடுகளின் இலட்சியத்தைத் தானும் ஏற்றுக்கொள்வதே இவ் வியக்கத்தின் நோக்கமாதலால், நேசநாடுகளின் முயற்சிக்கு எவ்விதத் தடையும் இராது."

"பிரிட்டிஷார் வெளியேருவிட்டால், கிளர்ச்சிகள் ஏற்பட்டுத்தானே தீரும்?"

"ஏற்கனவே மனக்கசப்பு இருந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். அது இன்னும் வேகமாய் வளரும். இயக்கத்தை ஆரம்பித்தவுடனேயே, பிரிட்டிஷார் மனம் இசைந்து வருவார்களாயின், மனக்கசப்பு நல்லெண்ணமாக மாறிவிடலாம். பிரிட்டிஷார் இணங்கி வராவிடினும், அன்னிய ஆதிக்கத்தின் பிடியிலிருந்து மக்கள் விடுதலை பெற முயல்வதால், மனக்கசப்பைக் காட்டிக்கொள்ள மக்களுக்கு வேறு வழி தேவையில்லை. இன்று அம்மனக்கசப்பு வெளிப்படுகிற கெடுதலான வழியைவிட்டு, நல்ல வழியில் அது வெளிப்படக்கூடும்."

"ஆனால் சென்ற வாரம் தானே ஒன்றுமே செய்ய முடியாது என்று அமெரிக்கா கையை விரித்துவிட்டார்!"

"இந்தத் துரதிஷ்டமான வாக்கியத்தை இன்னும் கடுமையான முறையில் மீண்டும் நாம் கேட்கவேண்டிய நிலைமை ஏற்படவும் கூடும். தங்கள் நாட்டத்தில் உறுதியோடு சென்றுகொண் டிருக்கும் மக்களின் மன உறுதியை இது எவ்வகையிலும் அசைக்க முடியாது."

### யுத்தத்தில் சுதந்திர இந்தியாவின் பங்கு

"நேசநாடுகளுக்கு உதவி செய்யும் பொருட்டே, இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டுமெனத் தாங்கள் விரும்புகிறீர்கள். சுதந்திர இந்தியா, சகலரையுமே ராணுவத்திற்குத் திரட்டி, சகல யுத்தமுறைகளையும் கையாளுமா?" என்று மிஸ்டர் எட்கார் ஸ்னோ கேட்டார். அதுதான் கடைசிக் கேள்வி.

"இந்தக் கேள்வி நியாயமானது, ஆனால், இதற்கு நான் பதில் சொல்ல இயலாது. நேசநாடுகளின் நோக்கத்தைச் சுதந்திர இந்தியா தானும் ஏற்றுக்கொள்ளும் என்றுதான் என்னால் சொல்லமுடியும். ராணுவமுறைகளைக் கையாளுமா, அல்லது அஹிம்சையைக் கடைப்பிடித்து நடக்குமா என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால், ஒன்று மட்டும் தயக்கமின்றிச் சொல்லுவேன். இந்தியாவை அஹிம்சா நெறியில் திருப்ப முடியுமானால், அவ்விதம் நான் நிச்சயமாய் செய்வேன். நாற்பது கோடி மக்களையும் அஹிம்சா நெறியில் பற்றுதல் கொள்ளும்படி செய்வதில் வெற்றியடைவேனேயானால், அது ஒரு பெரிய மகத்தான காரியமாகும், ஆச்சரியகரமான மாறுதலாகும்" என்று காந்திஜி சொன்னார்.

"சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து, ராணுவ முறைகளை எதிர்ப்பீர்களா?" என்ற பொருத்தமான கேள்வியை ஸ்னோ கேட்டார்.

"அவ்வித விருப்பம் எனக்கு இல்லை. சுதந்திர இந்தியாவின் எண்ணத்தை, சட்டமறுப்புச் செய்து நான் எதிர்க்க மாட்டேன். அவ்விதம் செய்வது தவறு."

ம. தே.

# இரண்டு நிமிஷத்தில் நடந்த ஒரு பேட்டி

"பிரிட்டனுக்குச் சுதந்திர இந்தியாவினிடமிருந்து இன்று எவ்வித உதவியும் இல்லை. நாளை, இந்தியா சுதந்திர மடைந்தவுடன் பிரிட்டனுக்கு நீதிமுறைமையிலே மிக்க பலமும் வலிமை மிகுந்த ஒரு துணை நேசநாடும் கிடைக்கும். இந்தியாவின் பலம் என்பது தார்மிக பலமே யாகும். இதனால் இங்கிலாந்தின் பலம் எவ்வளவோ மடங்கு அதிகரிக்கும். இது தானே விளங்கும். இதற்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை."

இதுவரையில் என்றுமே வந்திராத பெருந்தொகையினரான அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களும் இந்நாட்டுப் பத்திரிகை நிருபர்களும் வர்தாவில் தற்போது கூடியிருக்கிறார்கள். காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானிக்க வேண்டியிருக்கும் மிக முக்கியமான விஷயங்களை நினைத்துப் பார்க்கும்போது, இது முற்றும் இயல்பே யாகும். ஆனால், காந்திஜிக்கு உடல்நலம் குன்றியிருப்பதாலும், முன்பே உள்ள பல வேலைகள் குறுக்கிடுவதாலும், எல்லோரையுமே அவர் சந்தித்துப்பேச இயலவில்லை. காரியக் கமிட்டிக் கூட்டம் முடிந்தபிறகு, எல்லோருக்குமே சேர்ந்து, காந்திஜி பேட்டியளிப்பார் என்றும், அதுவரையில் பொறுமையோடு காத்திருக்கும்படி அவர்களிடம் சொன்னேன். ஆனால், எல்லோருக்கும் முதலில் வர்தாவுக்கு வந்தவருள் ஒருவரான "டெய்லி எக்ஸ்பிரஸ்" நிருபரானவர் முடிவு வரை காத்திருப்பது சாத்தியமில்லாதபடியால், இரண்டே நிமிஷத்தில் தம் பேட்டியை முடித்துக்கொள்வதாகக் கூறினார். காந்திஜியும் இசைந்தார். பிரிட்டிஷார் வெளியேற வேண்டுமென்ற கோரிக்கை நாள்தோறும் பலமடைந்து கொண்டே வருகிறது. அக்கோரிக்கையை நிராகரித்து விடுவார்களேயானால், ஏதேனும் ஓர் இயக்கம் நடைபெற்றுத் தானே தீரும் என்று அவர் உறுதியாக நம்பினார். எனவே, அவர் காந்திஜியைக் கேட்டார்:

"இந்தியாவில் ஜப்பானியர் நுழைவதைத் தடுக்க நாங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு, தாங்கள் நடத்தப் போகும் இயக்கத்தால் இடைஞ்சல் வருமா, அல்லது உதவி கிடைக்குமா?"

"ஜப்பானியர் இங்கு வருவதற்குத்தான் எங்கள் இயக்கம் அதிக இடைஞ்சல் செய்யும். பிரிட்டனும், நேசநாடுகளும் ஒத்துழைக்காவிட்டால் நிலைமை என்னவாகுமோ? என்னுல் சொல்ல முடியாது."

"யுத்தம் முழுமையும் எண்ணிப்பாருங்கள். நேசநாடுகள் வெற்றியடைய வேண்டுமெனத் தாங்கள் விரும்புவதாகச் சொன்னீர்கள்; தாங்கள் நடத்தவிருக்கும் புது இயக்கம் நேச வெற்றிக்குத் துணைபுரியுமா?" என்று கேட்டார் யங்.

"எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டால், அது துணைபுரியும்."

"வேண்டுகோள் என்று குறிப்பிடுகிறீர்களே. அது என்ன? பிரிட்டனும் அஹிம்சா முறைப் போராட்டத்தில் இறங்க வேண்டுமென்பதா?"

"அல்ல, அல்ல. பிரிட்டிஷ் ஆட்சிமுறை முடிவடைய வேண்டும் என்பதே நான் வேண்டுவது. இந்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படுமாயின், நேசநாடுகளுக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம். அதன்பிறகு, இந்தியா ஒரு சுதந்திர நாடாக மாறி, உண்மையான நேசநாடாக விளங்கும்; ஆனுல், இப்போது அது அடிமை நாடாகத்தானே இருந்துவருகிறது? நான் நடத்தும் இயக்கத்தில் அனுதாபமும் உதவியும் எனக்குக் கிடைக்குமேயானுல், அவ்வியக்கத்தின் பலனுய், விரைவில் நிச்சயமாய் வெற்றி கிடைத்தே தீரும். அப்படியின்றி, நான் சொல்லுவதைப் பிரிட்டிஷார் தவருக எண்ணி, அதை நசுக்கியே தீரவேண்டும் என்ற நிலைமைக்கு வருவார்களேயானுல், அதனுல் ஏற்படும் பலாபலனுக்கு அவர்களே பொறுப்பாளி, நானல்ல."

மிஸ்டர் யங்குக்கு இது திருப்தி யளிக்க வில்லை. எந்த இயக்கத்தையும், சம நிலையோடு சீர்தூக்கிப் பார்க்க அவர் விரும்பவில்லை. ஆகவே, அவர் காந்திஜி பல முறைகளில் வெளியிட்டிருந்த தமது உள்ளுணர்ச்சியைக் கிளறும் முறையில் கேட்டார்.

"தாங்கள் லண்டனுக்குப் போயிருக்கிறீர்கள். கடுமையான குண்டுவீச்சின் காரணமாக, பிரிட்டிஷ் மக்கள்

அடைந்த துன்பத்தைப்பற்றித் தாங்கள் சொல்வதற்கு ஒன்றுமில்லையா?''

"லண்டனிலுள்ள மூலை முடுக்குகளை யெல்லாம் நானறிவேன். நெடு நாளைக்குமுன் அங்கு மூன்று ஆண்டுகள் வசித்திருக்கிறேன்; ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், மான்செஸ்டர், ஆகியவற்றையும் பற்றி எனக்குச் சிறிது தெரியும். ஆனால், எனக்கு லண்டனிடத்து மிக்க அனுதாப முண்டு. இன்னர் டம்பிள் வாசகசாலைக்கு அடிக்கடி போய்ப் படித்திருக்கிறேன். டெம்பிள் சர்ச்சில், டாக்டர்பார்க்கர் நடத்திய மத உபன்யாசங்களை அடிக்கடி கேட்டிருக்கிறேன். மக்கள்படும் இன்னல்களைக் கேட்டு, என் மனம் உருகுகிறது. டெம்பிள் சர்ச் மீதும் குண்டுவீசினார்கள் என்று கேட்டபோது, நான் இரத்தக் கண்ணீர் வடித்தேன். வெஸ்ட் மினிஸ்டர் ஆலயம் முதலான பல புராதனக் கட்டிடங்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டது என்று கேட்டபோது, நான் மிக்க வருத்தத்தில் ஆழ்ந்தேன்.''

"எனவே, ஜப்பானியரோடும், ஜெர்மனியர்களோடும் நாங்கள் போரிட்டு ஒரு முடிவுக்கு வரும்வரையில், தங்கள் இயக்கத்தை நிறுத்திவைப்பது நியாய மென்று தாங்கள் நினைக்கவில்லையா?'' என்று கேட்டார் யங்.

"இல்லை. எங்களை விட்டுவிட்டு, நீங்கள் மட்டும் ஜெர்மானியரோடு போரை முடிக்கமாட்டீர்க ளென்பதை நான் அறிவேன். நாங்கள் சுதந்திரமுடையவர்களாக இருந்திருப்பின், எங்களுக்குரிய முறையில் நூற்றுக்கு நூறு மடங்கு உங்களுக்கு உதவிபுரிந்திருப்போம். இந்தச் சாமானிய விஷயத்தை அறிந்துகொள்ளாம லிருக்கிறார்களே என்பதுதான் விநோதமா யிருக்கிறது. பிரிட்டனுக்குச் சுதந்திர இந்தியாவினிடமிருந்து இன்று எவ்வித உதவியும் இல்லை. நாளை, இந்தியா சுதந்திரமடைந்தவுடன், பிரிட்டனுக்கு நீதிமுறைமையிலே மிக்க பலமும் வலிமைமிகுந்த ஒருதுணை நேசநாடும் கிடைக்கும். இந்தியாவின் பலம் என்பது தார்மிக பலமேயாகும். இதனால் இங்கிலாந்தின் பலம் எவ்வளவோ மடங்கு அதிகரிக்கும். இது தானே விளங்கும். இதற்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

# என்னைக் குறைகூறுவோருக்கு

"ஹிட்லரைப்போல் என்னை சர்வாதிகாரி என்று கூறிப் பழிப் பதில் பயனில்லை. ஹிட்லருக்கு யாராவது சகபாடிகள் இருந்த தாக வைத்துக்கொண்டால், அவர்களோடு அவர் கலந்தாலோ சித்தது கிடையாது. அவர் கட்டளையிடவேண்டியது; அதை மறுத்தால் மரணந்தான்; அல்லது இன்னும் கொடுமையாக தண் டனை. நாட்கணக்காக நான் நண்பர்களோடு விவாதிக்கிறேன்.... நண்பர்களுடனும் எனக்கு எதிரி என்று தங்களைக் கருதிக்கொண் டிருப்பவர்களுடனும் நான் கைக்கொள்வது அன்பும் அறிவும் தான்."

காரியக் கமிட்டிமீதோ, அல்லது என்மீதோ குற்றம் கற் பித்துக் குறைகூறுகிறவர்கள், தாங்கள் செய்வதாகச் சொல்லும் பணிக்கே கேடு தேடிக்கொள்கிறார்கள். காரி யக் கமிட்டியில் அங்கத்தினர்கள் தங்களது பொறுப்பை முற்றும் உணர்ந்து, அனுபவம் வாய்ந்த தேசத் தொண்டர் களாவார்கள். ஹிட்லரைப்போல் என்னையும் சர்வாதிகாரி என்று கூறிப் பழிப்பதில் பயனில்லை. ஹிட்லருக்கு யாரா வது சகபாடிகள் இருந்ததாக வைத்துக்கொண்டால், அவர் களோடு அவர் கலந்தாலோசித்தது கிடையாது. அவர் கட்டளையிட வேண்டியது; அதை மறுத்தால் மரணந்தான்; அல்லது இன்னும் கொடுமையான தண்டனை. நாட்கணக் காக நான் நண்பர்களோடு விவாதிக்கிறேன். சென்ற கூட்டத்தில் நான் எட்டுத் தினங்கள் விவாதித்தேன். அறி வுக்குப் பொருந்திய தென்று திருப்தி ஏற்பட்ட பிறகே, அங்கத்தினர்கள் என்னுடன் இசைந்துவந்தார்கள். நண் பர்களுடனும் எனக்கு எதிரி என்று தங்களைக் கண்டுகொண் டிருப்பவர்களுடனும் நான் கைக்கொள்வது அன்பும் அறிவும்தான். என்னை ஹிட்லரோடு ஒப்பிடுவதோ, அல் லது சர்வாதிகாரி என்ற சொல் தற்போது என்ன பொரு ளில் வழங்கப்படுகிறதோ அந்தப் பொருளில் என்னைச் சர்வாதிகாரி என்று சொல்வதோ உண்மையை மூடிக் கபடமாய்க் காட்டுவதாகும்."

அதைப்போலவே, காங்கிரஸ் மகாசபையை வகுப்பு வாத ஸ்தாபன மென்றோ, அல்லது ஹிந்து ஸ்தாபன மென்றோ கூறி அவமதித்துப் பேசுவதும் உண்மையை மூடி மறைப்பதாகும். தேசியம் என்ற சொல்லின் பொருள் முற்றுமே காங்கிரஸ் மகாசபைக்குப் பொருந்தும். மித வாதக் கட்சி எவ்விதமான வகுப்புவாத உணர்ச்சியுமின்றி இருக்கிறது. அதேபோல காங்கிரஸ் கட்சியும் சந்தேகத் திற்கு இடமின்றி, கலப்பற்ற ஓர் அரசியல் ஸ்தாபனமே யாகும். மதிக்கத்தகுந்த சிறந்த தொண்டுபுரிந்த அரசியல் வாதிகள் அதில் அங்கத்தினராய் இருந்தும், மிதவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொதுஜன விரோதமான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளதனால், துரதிர்ஷ்ட வச மாக, தேசத்தில் அக்கட்சிக்கு எவ்வித ஆதரவும் இல்லை; பின்பற்றுவோரும் கிடையாது. ஆகையால் காங்கிரஸ் மகாசபை ஒன்றுதான் பூரண பிரதிநிதித்துவம் வாய்ந்து, பொதுஜனங்கள் ஏராளமாய்ப் பின்பற்றுகிற தேசிய ஸ்தாபனமாக இந்தியாவில் விளங்கிக்கொண் டிருக்கிறது. அது அடையும் லாபங்கள் அதற்கு மட்டுமே உரியதன்று; இனம், ஜாதி, மதம் முதலிய வேற்றுமையின்றி, தேசம் முழுதுக்குமே இதன் லாபம் உரியதாகும். கலப்பற்ற ஹிந்து ஸ்தாபனம், அச்சுநாடுகளுக்கு நண்பன், வகுப்பு வாத ஸ்தாபனம் என்று சொல்லி, காங்கிரஸ் மகாசபை யைப்பற்றி, அதனுடைய கண்ணியத்தைக் குறைக்கும் நோக்கோடு அமெரிக்காவிலும் கிரேட் பிரிட்டனிலும் இவ் விதம் திரித்துக் கூறிப் பிரசாரம் செய்வது விஷமத்தன மானது, தப்பானது. அச்சுநாடுகளின் நண்பனாய் இருப் பின், அந்த எண்ணத்தை வெளிப்படையாகவே - பகிரங்க மாகவே வாய்விட்டுச் சொல்லக் கூடிய துணிச்சலும், செல் வாக்கும் அதற்கிருக்கும். அதனால் ஏற்படும் பலாபலன் களைக்கூட அலட்சியம் செய்யாமல், அது நிச்சயமாய்த் தன் அபிப்பிராயத்தை வெளியிடும்.

ரகசிய ஸ்தாபனமாகவோ, அல்லது பலாத்காரத் தைத் கொண்ட ஸ்தாபனமாகவோ காங்கிரஸ் மகாசபை ஒருபோதும் இருந்ததில்லை; இப்போதும் இல்லை. அப்படி

இருந்திருந்தால், அந்த ஸ்தாபனத்தை வெகு காலத்திற்கு, முன்னரே அடக்கி ஒடுக்கி யிருப்பார்கள். வெளிப்படையாகத் தவறான முறையில் பிரசாரம் செய்கிறார்கள் என்பதற்கு இந்தச் சில விஷயங்களே போதும்.

காங்கிரஸின் நியாயமான போக்கு வெளியே தெரியாமல் மறைப்பதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள். சுதந்திரத்தை இழந்து, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் அந்த நிலையிலே பழகிப்போய்ச் சுதந்திரத்தின் மாண்பையே மறந்துவிட்டவர்கள். இப்போது சுதந்திரம் நியாயமில்லை என்று சொல்லிவந்த போதிலுங்கூட, பிரிட்டிஷார் இந்நாட்டை விட்டுவெளியேற வேண்டுமென்பது தேசத்துக்கு இயல்பான சாமானிய உரிமை என்பதை யாருமே ஆட்சேபித்ததில்லை. இயல்பாகவே இதில் தவறு ஒன்றும் இல்லையென்றும், ஆனால் தொந்தரவு விளைவித்தலாகாது என்ற நோக்கத்தைக் காங்கிரஸ் கொண்டிருப்பதால்தான் இந்தத் தருணத்தில் வாபஸ் ஆகும்படி சொல்வது சரியல்ல வென்றும் குறிபிடுகிறார்கள்.

பிரிட்டிஷார் வாபஸ் ஆகிவிட்டபோதிலும், வரப்போகும் சுதந்திர இந்தியாவோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு நேசநாட்டுத் துருப்புகள் இங்கு தங்க வேண்டுமென்று காங்கிரஸ் ஒப்புக்கொண் டிருக்கிறது; தன்னுடைய நல்லெண்ணத்தை நிருபிப்பதற்காகவும், ஜப்பானியப் படையெடுப்பதைத் தடுப்பதற்காகவும் காங்கிரஸ் இதை ஒப்புக்கொண் டிருக்கிறது. குறைகூறுவோர் வேண்டுமென்றே இந்த உண்மையை மறைத்து விடுகிறார்கள். தற்காலிகமாகவோ, அல்லது வேறு விதத்திலோ அப்படிப்பட்ட சுதந்திர சர்க்கார் ஏற்படும் வரையில், தங்கள் கண்ணியமென்றே அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடுமே யொழிய வேறு எதுவும் கட்டுப்படுத்தக் கூடியதில்லை. இன்றைய அரசாங்கம்? தான் நிமித்த அங்கத்தினர்களைக் கலந்தாலோசிக்கும்போலிச் சம்பிரதாயத்தை, வைத்துக்கொண் டிருக்கிறது. இந்தியாவைச் சுதந்திர நாடு என்று அறிவித்துவிட்டால் அவர்கள் யாரையுமே பெயரளவுக்குக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் அப்போது

இராது. இந்த நிலையில் நோக்கும்போது, சுதந்திரப் பிரகடனம் செய்த பின்னர், தங்கள் விருப்பம்போல் ராணுவ நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது அவர்களுக்கு இன்னும் எளிது.

சுதந்திரமுள்ள நாட்டுக்கு இந்த நிலைமை மிக்க முரண்பாடுடையது என்பதை நான் அறிவேன். ஆயினும் நேர்மையாக நடப்பதானல், இந்தமுறை அவசியம். காங்கிரஸின் கோரிக்கையை எவ்விதத்திலும் தவருய்க் கொள்வதற்கு இடமில்லை என்பதை நான் முன்பு சொல்லியிருக்கிறேன். அதையே மீண்டும் நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். நேசநாடுகளுக்கு உதவி புரிவதில் அக்கரை கொண்டவர்கள் காங்கிரஸைக் குறைகூறுமுன், காங்கிரஸின் தன்மையை நன்கு பரிசீலனை செய்து பார்த்து ஏதாவது குற்றங்குறை காணப்பட்டால் அதை அவர்கள் எடுத்துக்காட்டகூடும். எனது கோரிக்கையைச் சரிவர அறிந்துகொள்ளும் பொருட்டுப் பலர் என்னிடம் வந்தார்கள். பல விதச் சந்தேகங்களோடு வந்த அவர்கள் என்னைக் கேட்டபின், என் கோரிக்கை நியாயமான தென்றும், நியாயம் வழங்கப் பெருவிட்டால், தன் நிலைமைக்குப் பரிகாரம் செய்யும் முறையில் நடவடிக்கை நடத்தக் காங்கிரஸிற்குப் பூரண நியாயம் இருக்கிற தென்றும் உறுதியாய்த் தெரிந்துகொண்டு சென்ருர்கள். குறைகூறுவோருக்கும் நான் இதையேதான் சொல்லுகிறேன்.

# பத்திரிகை நிருபர் மூவருடன்

"இந்தியாவின் கோரிக்கை அடிப்படையானது என்று கருதுகிறவன் நான். நான் கருத்தில் கொண்டிருக்கிற தேசிய வாழ்விற்கு இது இன்றிமையாதது. எனவே, மிகுந்த முன்னெச்சரிக்கையோடு நான் இயக்கத்தை மெதுவாக நடத்துவேன்; ஆயினும் நான் நடத்துகிற இந்த இயக்கம் பிரிட்டிஷ் சர்க்கார், நேசநாடுகள் மனத்தில் எவ்விதப் பரபரப்பையும் உண்டாக்கா விட்டால், மிகத் தீரமான முறைகளைக் கையாளுவதற்கும் நான் தயங்க மாட்டேன்."

காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்று முடிந்த பிறகு, சில முக்கிய விஷயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள எண்ணி, காந்திஜியைச் சாவகாசமாய்ப் பேட்டிகாண விரும்பிய பத்திரிகை நிருபர் மூவர், வர்தாவிலே தங்கிவிட்டார்கள். பத்திரிகை நிருபர்களுக்குப் பொதுவாய்க் காந்திஜி அளித்த பேட்டியில் அவர்கள் கலந்துகொண் டிருந்தும், தங்கள் தங்கள் நாட்டினருக்குச் சிற்சில விஷயங்கள் முக்கியமானவை யாகும் என்று அவர்கள் எண்ணினர்கள். தங்கள் நாட்டில் வசிக்கும் சாமானிய மனிதனுடைய அபிப்பிராயத்தை அவர்கள் எடுத்துக்காட்ட முயன்றார்கள். 'நியூஸ் கிரானிக்கள்' பத்திரிகை நிருபர் மிஸ்டர் ஸ்டுவர்டு எமெனி, சிகாகோ டெய்லிநியூஸ் பத்திரிகை நிருபர் மிஸ்டர் ஸ்டீல், சென்ரல் நியூஸ் ஏஜென்ஸி ஆப் சைனுவின் நிருபர் ரிச்சர்ட் ஜென் என்னும் மூவர் தங்கி இருந்தார்கள்.

### நிகழ்ச்சி

மிஸ்டர் எமெனியின் மனதில் சந்தேகமும் அச்சமும் நிறைய இருந்தன. பொதுப்படையாக ஒவ்வோர் ஆங்கிலேயருக்கும் உதிக்கக்கூடிய சந்தேகங்களே அவருக்கும் உதித்தன. "தாங்கள் நடத்த விருக்கும் இயக்கத்தின் திட்டங்கள் எப்படி இருக்கும் என்பதைத் தாங்கள் அறிவிக்க முடியுமா? உப்பு சட்டத்தை மீறுவது, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தொழிலாளிகள் ஆகியோரை வேலை

நிறுத்தம் செய்யச் சொல்வது முதலியன இதில் இடம் பெறுமா?''

இந்தக் கேள்விக்குக் காந்திஜி சொன்ன பதில்: "நேற்று நான் அறிவித்ததுபோல், பொதுஜன இயக்கத்தில் மேற்கொள்ளக்கூடிய சாத்துவிகமான ஒவ்வொரு செயலும் இந்த இயக்கத்தில் இடம்பெறும். எனவே, தாங்கள் கூறும் திட்டங்கள் சந்தேகமில்லாமல் இதில் அடங்கியிருக்கும். இருந்தும், உடனேயே சகல துறைகளிலும் நுழைந்து நான் அதிகப்படியாக இயக்கத்தை நடத்த எண்ணவில்லை. வேறுவிதமாய் யார் என்ன சொல்லிய போதிலும், இயக்கம் நடைபெறும்போது திடீரென்று கலகமும் குழப்பமும் நேரிட்டு, அராஜகம் விளைந்து, ஜப்பானிய ஆக்கிரமிப்பை விரும்பி அழைக்கும் முறையில் நிகழ்ச்சிகள் நடைபெருதபடி கவனித்தே நான் இயக்கத்தை நடத்த விரும்புகிறேன். இந்தியாவின் கோரிக்கை அடிப்படையானது என்று கருதுகிறவன் நான். நான் கருத்தில் கொண்டிருக்கிற தேசிய வாழ்விற்கு இது இன்றியமையாதது. எனவே, மிகுந்த முன்னெச்சரிக்கையோடு நான் இயக்கத்தை மெதுவாக நடத்துவேன்; ஆயினும் நான் நடத்துகிற இந்த இயக்கம் பிரிட்டிஷ் சர்க்கார், நேசநாடுகள் மனத்தில் எவ்விதப் பரபரப்பையும் உண்டாக்கா விட்டால், மிகத் தீவிரமான முறைகளைக் கையாளுவதற்கும் நான் தயங்கமாட்டேன். இந்தியாவில் என்ன நடைபெற்றாலும் அதற்கு நேசநாடுகளே நியாயமாய்ப் பொறுப்பாளிகள் ஆவர் என்று நான் கருதுகிறேன். ஏனெனில், யுத்தத்தின் போக்கையே நிலைகுலையச் செய்யத்தக்க எந்தக் காரியமும் நடைபெருதவாறு தடுப்பதில், எல்லோருடைய பொதுநலனை முன்னிட்டு, அவர்கள் அக்கறைகொள்ள வேண்டும். தாங்கள் கேட்ட மிகவும் தகுதியான கேள்விக்குப் போதுமான அளவு நான் பதில் சொல்லிவிட்டேன் என்று எண்ணுகிறேன். இதைவிட இன்னும் அதிகமான விபரங்களை நான் தர இயலாதவனாய் இருக்கிறேன். பொறுப்பேற்க விரும்பாமலோ, அல்லது மறைத்துவைத்துக்கொள்ளும் நோக்கத்தோடோ நான் இவ்விதம் சொல்லவில்லை;

இயக்கம்பற்றிய திட்டம் எதுவும் இன்னும் தயாராகவில்லை என்பதே காரணமாகும்."

"தங்களது இயக்கங்களிலெல்லாம் இதுவே மிகவும் பெரிதாக இருக்கும் அல்லவா?"

"ஆம். இதுதான் மிகவும் பெரிய இயக்கமாக இருக்கும்."

### காலவரையறை?

"தாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், எவ்வளவு காலம் சென்றபிறகு, தாங்கள் இயக்கத்தைத் தொடங்க உத்தேசித்தீர்கள்?" என்று எமெனி கேட்டார்.

"அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிடும் என்று கொண்டால், நீண்ட காலம் பிடிக்காது. விரைவிலேயே இயக்கம் ஆரம்பம் ஆகிவிடும். என் அறிவுக்கு எட்டியவரையில் ஒரு வாரம், இரண்டு வாரத்துக்குமேல் போகாது."

"காலத்தை முன்கூட்டியே அறிவிப்பீர்களா?"

"ஆம், நிச்சயமாக. ஒவ்வொரு போராட்டத்தின் போதும் நான் முன்கூட்டியே அறிவித்திருக்கிறே னல்லவா? அதுபோலவே இப்போதும் அறிவிப்பேன்."

"டெல்லிக்கு வரும்படி வைசிராய் தங்களை அழைத்தால், தாங்கள் டெல்லி செல்வீர்களா?"

"ஆம். செல்வேன், பொதுஜனத் தொண்டனையும் வைசிராயையும் நண்பர்கள் என்று சொல்ல இடம் இருக்குமானல். வைசிராயும் நானும் நெருங்கிய நண்பர்களாகி விட்டோம் என்பதைத் தாங்கள் மறந்துவிட வேண்டாம்."

சர்க்கார் எப்போதுமே என்ன செய்து வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்திருந்த எமெனி, நேரே ஒரு கேள்வியைக் கேட்டார். "தங்களையும் தங்களைப் பின்பற்றும் ஆயிரக்கணக்கான மக்களையும் அரசாங்கத்தார் சிறைப்படுத்தி விடுவார்களேயானல், தாங்கள் நடத்தும் போராட்டம் நிலைகுலைந்து போய்விடுமா?"

"நிலைகுலைந்துபோகும் என்று நான் எண்ணவில்லை. அதற்கு மாருக, இயக்கத்தில் உயிர் இருக்குமாயின், அது

வெற்றிபெறுவது திண்ணம்'' என்று காந்திஜி பலமாகச் சிரித்துக்கொண்டே பதில் கூறினார்.

### இடைக்கால சமாதானம் கூடாதா ?

"வாசலில் பகைவன் நிற்கும் தருணத்தில், தாங்கள் இடைக்கால ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு ஆட்சேபணை என்ன ?'' என்று எமெனி கேட்டார்.

"ஒரு பேராபத்தைத் தடுக்கும்பொருட்டே எங்கள் இந்தப் போராட்டத் திட்டம் போடப்பெற்றது'' என்றார் காந்திஜி. "ஆபத்தான நிலையில் சுதந்திரமற்ற இந்தியா தொந்தரவா யிருக்குமேயன்றி, அதனல் உதவி ஏற்பட மார்க்க மில்லை. ஜப்பானியர் இந்தியக் கடற்கரையில் இறங்க நேரிட்டால், பர்மா, மலேயா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் மக்கள் ஜப்பானியர்களோடு சேர்ந்துகொண்ட தைப்போல், இந்தியாவிலும் ஏராளமான இந்தியர்கள் ஜப்பானியர் பக்கம் சேர்ந்துகொள்ளக் கூடும் என்று காங்கிரஸ் தீர்மானம் சூசகமாக அறிவிக்கிறது. பர்மா சம்பந்தப்பட்டவரையிலாவது, பர்மாவை சுதந்திர நாடாக்கி யிருந்தால், இந்த நிலை ஏற்படாது செய்திருக்கலாம் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பர்மாவைச் சுதந்திர நாடாக ஆக்கவில்லை. அதன் பலனை நாம் அறிவோம். மனித சக்திக்கு எட்டியவரை முயன்று, சுதந்திரம் அடைய நாங்கள் உறுதிகொண்டுள்ளோம். இதனல் இந்தியன் என்று சொல்லத்தக்கவன் எவனுக்கும் ஜப்பானியர் பக்கம் சேரும் எண்ணம் இருக்க இயலாது. அப்போது, ஜப்பானியப் படையெடுப்பைப் பலம்கொண்ட மட்டும் தடுப்பதில் நேச நாடுகளுக்கு எவ்வளவு அக்கறை உண்டோ, அவ்வளவு அக்கறை இந்தியாவிற்கும் இருக்கும்.''

### நீதி முறையை யொட்டிய கடமை

"காலம் குறுகிவிட்டபடியால், சீனருக்கும் ரஷ்யருக்கும் துணை நிற்கவேண்டிய நியாயமான கடமை தங்களுக்கு இல்லையா ?'' என்று எமெனி அடுத்தபடியாகக் கேட்டார். அவரை மடக்க வேண்டுமென்று காந்திஜிக்கு எண்ணமிருந்

தால் இவ்விதம் பதில் சொல்லி இருப்பார்: "சுதந்திரமற்ற இந்தியா நேசநாடுகளுக்கு உதவி புரியும் கடமை பெரிதா? அல்லது, நேசநாடுகள் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கும் கடமை பெரிதா?" என்று கேட்டிருக்கலாம். ஆனல், காந்திஜீ அவ்விதம் கேட்கவில்லை. அவர் அமைதியாகப் பதில் சொன்னதாவது: "தனிபட்ட மனிதரின் காரியமாயிருக்கும் பட்சத்தில், தாங்கள் சொல்வதுபோல் நடப்பது முற்றும் சாத்தியமானதே. ஆனல், காரியக் கமிட்டியிலுள்ளவர்கள் அனைவருமே ஒன்றுசேர்ந்து முயன்றபோதிலும், நேசநாடுகளின் சார்பாக முன்னின்று உழைக்கும்படி பொதுஜனங்களுக்கு உற்சாக மூட்டுவது இயலாத காரியம். நேசநாடுகளுக்குரிய நியாயத்தை இவர்கள் அறியவும் மாட்டார்கள், அறியவும் முடியாது."

"பொதுஜனங்களிடம் தங்களுக்குள்ள அதிக செல்வாக்கைக் கொண்டு, தாங்கள் விரும்பினல், எதையும் சாதித்துக்கொள்ள முடியும் என்ற உணர்ச்சி எனக்கு இருக்கிறது. தாங்கள் சொல்வதை அவர்கள் நிச்சயம் கேட்பார்கள்" என்று எமெனி சொன்னர்.

"ஏதோ எனக்கு அதிக செல்வாக்கு இருப்பதாகச் சொல்லிப் புகழ்கிறீர்கள். அத்தகைய செல்வாக்குப் பெறுவதில் எனக்கும் விருப்பமுண்டு; ஆனல், அத்தகைய ஆற்றல் என்னிடம் இல்லையென்று உறுதியாய்க் கூறுகிறேன். இதைக் காட்ட, இரண்டு திட்டமான உதாரணங்கள் சொல்லுகிறேன். எனக்கு அத்தகைய செல்வாக்கு இருந்திருக்குமேயானல், யாருக்கும் எவ்வித சங்கடமும் நேராதபடி வெகு கால முன்னரே நாங்கள் சுதந்திரம் அடைந்திருக்கலாம் என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்வீர்கள். முஸ்லிம் லீகிடத்திலும் மகாராஜாக்களிடத்திலும் எனக்கோ, அல்லது, காரியக் கமிட்டிக்கோ செல்வாக்கு இல்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இது ஒரு விஷயம். இன்னொரு விஷயம் உண்டு. சென்ற யுத்தத்தின் போது, யுத்தத்துக்காக நான் முழுமனதோடு உழைத்தேன் என்பது ஒருவேளை தங்களுக்குத் தெரிந்திருக்கும். நானே வலியச் சென்று, பிரிட்டிஷ் படைக்கு ஆள் சேர்த்

தேன். எந்த ஜில்லாவில் விவசாயிகளின் கஷ்ட நிவாரணத்திற்காக ஓர் இயக்கத்தை நடத்தி அதில் தகுந்த அளவு வெற்றியும் பெற்றேனே, அதே ஜில்லாவில்தான் படைக்கு ஆள் சேர்க்கும் வேலையைத் தொடங்கினேன். என் வேலையில் அங்கு மிக்க முன்னேற்றம் கிடைத்திருக்க வேண்டும்; இருந்தும், அவ்விதம் கிடைக்கவில்லை. படைக்கு ஆள் சேர்க்கும் வேலை மிக்க அவசரமானது என்ற எண்ணத்தை மக்கள் மனத்தில் பதியவைக்கும் பொருட்டு, தகிக்கும் வெயிலில் நடந்து சென்றிருக்கிறேன். ஆனால், ஒன்றும் பலிக்கவில்லை. மற்றவர்களுக்கு எனது செல்வாக்கு மகத்தானதாய்த் தோன்றியபோதிலும், அது மிகவும் குறுகியதுதான் என்பதைத் தாங்கள் காணலாம். பொது மக்களுக்குள்ள நியாயமான சங்கடங்களை நிவர்த்திக்க நான் பாடுபட்டால், அதற்காக அவர்களும் தயராயிருந்து உதவியை விரும்புவதால், அப்போது எனக்குப் பொதுஜனங்களிடம் விசேஷ செல்வாக்கு ஏற்படக்கூடும். ஆனால், அவர்களுக்கு அக்கறையேயில்லாத ஒரு துறையில், அவர்கள் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் செலுத்திவிடக்கூடிய செல்வாக்கு என்னிடம் இல்லை.''

"பின்னர், தாங்கள் நடத்தவிருக்கும் இயக்கத்தில் எத்தகைய மக்களுக்கு நம்பிக்கை ஏற்படக் கூடுமென்று தாங்கள் கருதுகிறீர்கள்?'' என்று மிஸ்டர் ஸ்டீல் இடைமறித்துக் கேட்டார்.

"நான் அதைச் சொல்ல முடிந்தால்தான் நலமாயிருக்குமே! திட்டமாய் ஒன்றும் சொல்ல முடியாது. லட்சியம் முற்றும் பரிசுத்தமானதாயும், அதைப்போலவே, அதை அடையும் மார்க்கமும் பரிசுத்தமானதாயும், சாத்துவிகமாயும் இருக்க வேண்டுமென்று கருதி, இவற்றையே கருவியாய்க் கொண்டுள்ளேன்.''

### அமெரிக்க அபிப்பிராயம் விரோதமாக மாறலாம்

"ஆம். அமெரிக்க மனோபாவம் விரோதமாக மாறினும் மாறலாம். ஆனால், உலகம் எனக்குப் பரிவுகாட்டும் என்ற நம்பிக்கையோடு, நான் எப்பொழுதும் எந்த

இயக்கத்தையும் தொடங்கியதில்லை. அதற்கு மாறாக, எறக்குறைய எல்லா இயக்கத்திலுமே காரியங்கள் ஆரம்பத்தில் எனக்கு விரோதமா யிருந்தன. நான் முதன்முதலில் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய முதல் சத்யாக்கிரகப் போராட்டத்தில், புறத்தேயுள்ள எல்லாக் காரியங்களும் எனக்கு விரோதமாயிருந்தன. பல சத்தியாக்கிரகங்களை நடத்தி இப்பொழுது நான் பெற்ற அனுபவம் அப்போது எனக்கு இருந்ததில்லை. ஆயினும், நாங்கள் சிறு தொகையினரா யிருந்தபோதிலும், எங்களைச் சுற்றிலும் உள்ள மக்கள் கோடிக்கணக்கான பேர் நாங்கள் நடத்திய இயக்கத்தில் பரிவுகாட்டாதபோதிலும், எங்கள் சார்பிலுள்ள பூரண நியாயமும் எங்கள் மனவலிமையுமே எங்களுக்குத் துணை செய்யும் என்று சொன்னேன். எட்டு ஆண்டுகள் வரை நீண்டகாலம் துன்பத்தை யெல்லாம் பொறுத்திருக்க இந்த மனவலிமையே எங்களுக்குத் துணை செய்தது. ஆகவே, அமெரிக்க மக்களின் அனுதாபத்தை யாகட்டும், அல்லது, பிரிட்டிஷ் மக்களின் அனுதாபத்தையே யாகட்டும் ஏன் நான் இழந்துவிட வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. பூரண சுதந்திரம் வேண்டுமென்ற எங்கள் நியாயமான கோரிக்கையைக் கண்டு அவர்கள் அஞ்சுவானேன்?"

"இந்தத் தருணத்தில் சுதந்திரத்தை யடைய வேண்டி ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பது புத்திசாலித்தன மன்று; இதனால் இந்தியாவில் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும். இவை யுத்தத்தைத் திறம்பட நடத்துவதற்குக் கெடுதலாக முடியவுங்கூடும் என்று பல அமெரிக்கர் கருதுகிறார்கள்; அமெரிக்கன் என்ற முறையில் இதை நான் சொல்ல முடியும்" என்று ஸ்டீல் சொன்னார்.

"இந்த அபிப்பிராயம் அறியாமையால் வந்தது" என்று காந்திஜி பதில் சொன்னார். "இந்தியா பூரண சுதந்திர நாடென்று இன்று பிரிட்டன் பிரகடனம் செய்துவிட்டால், அதனால் என்ன உள்நாட்டுச் சிக்கல் ஏற்பட்டுவிடும்? இந்தப் பிரகடனம்தான் நேசநாடுகளின் யுத்த முயற்சி சம்பந்தமாய் ஏற்படக்கூடிய அபாயத்தில் மிகவும் குறைவான அபாயம் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

நான் இப்படி எண்ணுவது தவறென்று யாராவது தகுந்த முறையில் எடுத்துக்காட்டினுல் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். யுத்தம் நடைபெற்றுக் கொண் டிருக்கும்போதே, இந்தியா சுதந்திர நாடெனப் பிரிட்டிஷ் சர்க்கார் பிரகடனம் செய்வதால் யுத்த முயற்சிக்குக் கெடுதல் ஏற்படும் என்று, யாராவது தர்க்க ரீதியான முறையில் எடுத்துக்காட்டி, என்னை திருப்தி செய்விக்க இயலுமானுல், அவர்களுடைய வாதத்தையும் கேட்க நான் தயாராயிருக்கிறேன். அத்தகைய கோவையான வாதம் எதையும் நான் இதுவரை கேட்டதில்லை.''

### அபிப்பிராயத்தைத் திருத்திக்கொள்ளத் தயார்

“ திருப்தி ஏற்படும் வகையில் எடுத்துக்காட்டினுல், தாங்கள் இயக்கத்தை நிறுத்திவிடுவீர்களா ?''

“ நிச்சயமாக. இப்படிக் குறைகூறும் அறிவாளிகள் எல்லோரும் என்னைப் பேசுகிருர்கள் ; என்மேல் ஆணையிடுகிருர்களே யொழிய, என்னேடு பேச மனமிரங்குவோர் யாரையும் காணேம்.''

### சீனம்

சீன நண்பர் கேள்வி கேட்கும் முறை இப்போது வந்தது. அவர் சொன்னர்: “ தங்களுக்கு அஹிம்சையில் இயல்பான பூரண நம்பிக்கை இருக்கிறது. ஆனல், நாங்களோ ஆயுதம் கொண்டு போரிட்டால்தான் நம்மால் ஜப்பானியரை வெற்றிகொள்ள முடியு மென்று கண்டு வந்திருக்கிருேமே ?''

“ அஹிம்சை முறையை இதுவரை சீனம் சோதனை செய்து பார்த்ததில்லை. செயலற்றதன்மையில் சிறிது காலம்வரை சீனர் இருந்திருக்கிருர்கள் என்பதைக் கொண்டு, அவர்கள் அஹிம்சையைக் கடைப்பிடித்தார்கள் என்று சொல்ல முடியாது. சில தனிப்பட்ட மனிதர்களும் மதவாதிகளும், தத்துவஞானிகளுமே இதுவரை கையாண்டு வந்த அஹிம்சைத் தத்துவத்தை அரசியல் துறையிலும் புகுத்தி, பெருந்தொகையினரான பொது மக்களையும் அதில் ஈடுபடுத்தி, சரித்திரத்திலேயே இப்

போதுதான் முதன்முதலாகச் சோதனை செய்து பார்க்கிறோம். சில இந்தியர்கள்தான், - சில லட்சம் இந்தியர்கள் தான் - அஹிம்சையைக் கடைப்பிடித்துப் போராடுகிறார்கள். அப்படியின்றி, நாற்பது கோடி மக்கள் அனைவருமே அஹிம்சையைக் கடைப்பிடிப்பார்களேயானால், ஜப்பானால் இந்தியாவிற்குள் நுழைய முடியுமா? நாற்பது கோடி மக்களையும் அப்படியே படுகொலை செய்து ஒழிக்க எண்ணமிருந்தா லன்றி, இது சாத்தியமானதா?''

"நாற்பது கோடி இந்தியர்களும் நாற்பது கோடி காந்தியாக மாறினாலொழிய'' என்றார் ஸ்டீல்.

"இங்கேதான் நமக்குள்ள வரையறைகளை நாம் காண்கிறோம். போதுமான அளவிற்கு இந்தியா இன்னும் அஹிம்சையைப் பின்பற்றவில்லை என்பதையே இது காட்டுகிறது. முற்றுமே அஹிம்சையைப் பின்பற்றி யிருந்தால், இங்கு பலவிதமான கட்சிகள் தோன்ற இடமிராது. எனவே ஜப்பானியப் படையெடுப்பும் ஏற்படாது. அஹிம்சையைக் கடைப்பிடிப்போர் தொகை குறைவு; உண்மையாகவே கடைப்பிடிப்போரும் குறைவு என்பதை நான் அறிவேன். இருந்தும், முன்பு மக்களிடையே இல்லாத ஒரு புதிய ஊக்கத்தையும் எழுச்சியையும் இது உண்டாக்கி இருக்கிறது. 1919-ம் வருஷம் ஏப்ரல்மீ 6வ யன்று வெளிப்பட்ட விழிப்பு, ஒவ்வொரு இந்தியருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. தேசத்தில் பொதுஜனத் தொண்டர்கள் கால்வைத்தறியாத ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் எங்களுக்கு உதவி கிடைத்தது. அப்போது அவர்கள் காட்டிய உற்சாகத்துக்கு இன்று காரணம் காட்டுவது சாத்திய மன்று. அன்று, நாங்கள் பொது மக்களிடையே சென்று வேலை செய்ததில்லை; சென்று பேசி வேலை செய்ய முடியு மென்பதையும் நாங்கள் அறிந்ததில்லை.''

"சுதந்திர இந்தியா, சீனத்திற்கு எத்தகைய உதவிகளைப் புரியும்?'' என்று மிஸ்டர் ஜென் கேட்டார்.

"நான் கூறுகிற ஆலோசனையை இந்தியா ஏற்றுக் கொண்டால், அஹிம்சை முறையில், சீனத்திற்கு இந்தியா உதவி புரியும். ஆனால், இது நடைபெறாது என்பதை அறி

வேன். சுதந்திர இந்தியா ராணுவ மயமாக விரும்பும். எனவே, சீனத்திற்கு உதவிபுரியும் பொருட்டு இந்தியா ஆட்களையும் பொருள்களையும் சேகரித்துத் தரும்; சீனத்தில் ஆட்களுக்குப் பஞ்சமில்லை யென்றே நினைக்கிறேன். சுதந்திரமற்ற இந்தியா இன்று ஓர் ஆளைக்கூட சீனுவிற்கு அனுப்புவது முடியாத காரியம். இன்னும் சொல்லப் போனால், சுதந்திர இந்தியா ஜப்பானிடம் பேச்சுவார்த்தை நடத்தவும் முடியும். அவ் வார்த்தையை ஜப்பான் கேட்டே தீர வேண்டும்."

### இடைக்கால சர்க்கார்

"இடைக்கால சர்க்காரை நிறுவ யார் முனைந்து நிற்பார்கள்? தாங்களா, காங்கிரஸா, அல்லது முஸ்லிமா லீகா? தாங்கள் இதை அறிவிக்க முடியுமா?"

"முஸ்லிம் லீக் நிச்சயமாக முன்வருதல் கூடும். காங்கிரஸும் முன்வருதல் கூடும். யாவும் சரியாக நடக்குமாயின் இரு ஸ்தாபனங்களுமே சேர்ந்து சர்க்காரை நடத்திவரும் எந்த ஒரு கட்சியும் தனியாகச் சர்க்காரை நடத்த முன்வராது."

"இப்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் திட்டப்படியே அந்த இடைக்கால சர்க்கார் இருக்குமா?"

"அந்த அரசியல் திட்டம் மாண்டு மடிந்திருக்கும்" என்றார் காந்திஜி. "1935-ம் வருஷத்து அரசியல் திட்டச் சட்டம் மாண்டு மடிந்தே விட்டது. ஐ. சி. எஸ். வர்க்கம் ஒழிந்தே தீரும்; பின்னர் அராஜகம் ஏற்படலாம். ஆனால், நல்லெண்ணத்துடன் பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேறுவார்களே யானால், அராஜகம் ஏற்படவேண்டிய அவசிய மில்லை. வெளியிலிருந்து எத்தகைய உத்தரவையும் பெறுமல் இந்தியப் பண்புக்கு உவந்தவாறு, சுதந்திர இந்திய சர்க்கார் ஒரு அரசியல் திட்டத்தைத் தனக்கென வகுத்துக்கொள்ளும். இந்தியா, சுயாட்சி பெற்ற தனித்தனி மகாணங்களாக பிரிந்துவிடுமா, அல்லது ஒன்றாகவே இருக்குமா என்பதை என்னல் சொல்ல முடியாது. ஒரு வேளை யுத்தம் முடிந்த பிறகுதான், நிலையான அரசியல்

அமைப்பு ஏற்படலாம். இருந்தும், தற்காலிக அரசாங்கம் நடைமுறையில் இருந்துவரும். ஒருவாறு இப்போதுள்ள சர்க்காரைப் போலவே, அதன் அமைப்பு முறையும் இருக்கும். ஆனால், பெருத்த மாற்றங்கள் இருக்கும். இரண்டு வகுப்பாரும் மிகவும் மனங்கலந்து ஒத்துழைப்பார்கள். இந்த மனங்கலந்த ஒத்துழைப்பு, வெளியார் எவரும் விதித்த தாயிராது ; தங்களுக்குள் இருக்கும் மனம் ஒன்றிய முயற்சியின் விளைவாகவே உண்டாகும். எதற்கும் வெளியுத்தரவு தேவையாய் இராமல், அறிவு ஒன்றே வழிகாட்டி வரும். அதற்குவேண்டிய போதிய அறிவுத்திறன் நம்மிடையே உண்டு என்றே நான் நம்புகிறேன்."

"வைசிராய் என்ற முறையில் அவர் இருக்க முடியுமா ?"

"அப்போதுங்கூட, நாங்கள் நண்பர்களாகவே இருப்போம். ஆனால் சம அந்தஸ்தோடு நண்பர்களாயிருந்து வருவோம். பொதுஜனங்களுடன் தாமும் ஒருவராய் இருக்கக்கூடிய நன்னிலை லின்லித்கோ பிரபுவும் விரும்பி வரவேற்பார் என்பதில் சந்தேகமே இல்லை."

## இன்று கூடாதா ?

"பிரிட்டிஷார் வெளியேறுமலே, இத்தகைய காரியங்கள் இன்னும் நடைபெறலாம்தானே ?" என்று பழைய குற்றச்சாட்டைத் தொடர்ந்து மீண்டும் எமெனி கேட்டார்.

"இதற்குப் பதில் சொல்வது எளிது. சுதந்திரமாய் வாழும் மனிதன் செய்கிற காரியங்களை, கைதியாயிருக்கும் மனிதன் ஏன் செய்யக்கூடாது ? நீங்கள் சிறை சென்றவர்கள் அல்ல. நான் சிறை சென்றிருக்கிறேன். மேற்சொன்னதன் காரணத்தை நான் அறிவேன். சிறையில் அடைபடுவது என்றால், பொது வாழ்க்கைக்கு சாவு மணி அடிப்பதே யாகும். இந்தியா முழுவதுமே இன்று பொது வாழ்க்கை மடிந்துபோன நிலையில் இருக்கிறது. மூச்சுவிடுவதைக்கூட, பிரிட்டிஷ் ஆதிக்கம் கட்டுப்படுத்துகிறது. அதோடுகூட, இன்னொரு அனுபவமும் உங்களுக்கு இல்லை. பல நூற்றாண்டுகளாக, அடிமை வாழ்வு வாழ்ந்து, வருந்தும் மக்

கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்க ளல்ல நீங்கள். ஒரு போதும் சுதந்திரமாக வாழ முடியாது என்ற மனநிலை, எங்களுக்குப் பழக்கமாக ஆகிவிட்டது. சுபாஷ் சந்திர போஸைப்பற்றி நீங்கள் அறிவீர்கள். அவர் மகா தியாகி. விரும்பியிருந்தால், ஐ. ஸி. எஸ். அதிகார வர்க்கத்திலேயே, அவர் உயர்ந்த அந்தஸ்தை அடைந்திருப்பார். ஆனால், அவரோ இன்று நாடு கடத்தப்பட்டு வாழ்ந்து வருகிறார். நிர்க்கதியற்ற இந்த நாட்டின் நிலைமையை அவரால் சகித்துக்கொண் டிருக்க முடியவில்லை. எனவே, ஜர்மனியின் உதவியையும் ஜப்பானுடைய உதவியையும் நாடுவது அவசியம் என்று எண்ணிவிட்டார்.''

**சமாதானமா ?**

''சமாதானப் பேச்சுக்கு இனி இடமே இல்லை என்று தாங்கள் கூறிவிட்டீர்கள். சமாதானத்துக்குரிய நடவடிக்கை ஏதேனும் பிரிட்டிஷார் மேற்கொண்டால், அதையும் தாங்கள் அலட்சியம் செய்துவிடுவீர்களா ?'' என்பது மூவரின் சார்பாகக் கேட்ட கடைசிக் கேள்வி.

''எங்களைப் பொறுத்தவரையில், சமாதானத்திற்கு இடமில்லை என்று நாங்கள் தீர்மானித்துவிட்டோம். எங்கள் தீர்மானத்தில் சொல்லியிருப்பதுபோல், எங்கள் நம்பிக்கை முழுதுமே சிதறிவிட்டது. எனவே, சுமை எங்களை விட்டு மாறிவிட்டது. அமெரிக்கா, பிரிட்டன், சீனா, அல்லது ரஷ்யாவுங்கூட முயன்று, சுதந்திரத்திற்காகப் பரிதவிக்கும் இந்தியாவுக்காகப் பரிந்துபேசலாம். ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் ஏதாவது திட்டம் தயாரித்தால், நிச்சயமாகக் காங்கிரஸ் மகாசபையும் வேறு கட்சிகளும் அதைப் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளுதல் கூடும். 'நாங்கள் யாருடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராயில்லை. எங்கள் மன உறுதியின் துணைகொண்டே, பிரிட்டிஷாரை இந்தியாவைவிட்டு அடித்து விரட்டிவிடுவோம்' என்று நாங்கள் சொல்வது வீண்பிடிவாதமாகும். ஆகவே, காங்கிரஸ் கமிட்டி இனிமேல் கூடாது. தீர்மானங்கள் நிறைவேற்றப்படமாட்டா. நான் பத்திரிகை நிருபர்களைக் கண்டு பேசிக்கொண் டிருக்கவும் மாட்டேன்.'' —மகாதேவ தேசாய்.

# அனுபந்தம்

*பிரிட்டிஷார் வாபஸ் ஆகவேண்டியதுபற்றி, காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்த தீர்மானம்:"* (ஜூலை 14-1942)

" நாள்தோறும் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளும் இந்திய மக்கள் பெற்றுவரும் அனுபவமும் சேர்ந்து, பிரிட்டிஷாரின் ஆட்சி இந்தியாவில் உடனே முடிவடைய வேண்டுமென்ற காங்கிரஸ் மகாசபையின் அபிப்பிராயத்தை வலியுறுத்துகின்றன. மிக நல்ல முறையில் நடந்த போதிலும்கூட, அன்னிய ஆதிக்கம் பெரிதும் கேடானது என்பதும் ஆளப்பெறும் மக்களுக்கு அந்த ஆட்சி தொடர்ந்து தீமையே பயக்கும் என்பதும் உண்மை. இதுமட்டுமல்ல. தன்னைச் செம்மையான முறையில் பாதுகாத்துக்கொள்வதற்கும் மனித சமுதாயத்தை நாசப்படுத்திவரும் யுத்தத்தின் போக்கை மாற்றுவதற்கும் அடிமை இந்தியாவினுல் முடியாது; இக் காரணங்களால் பிரிட்டிஷார் வெளியேறுவது அவசியமாகிறது. எனவே, இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது, இந்தியாவின் நலத்துக்காக மட்டுமல்ல, உலகப் பாதுகாப்புக்கும் அதுவே அவசியமானதாகும். நாஸிஸம் பாஸிஸம் ராணுவ ஆட்சித்தத்துவம் இவைபோன்ற பிற ஏகாதிபத்திய ஆட்சித்தத்துவங்கள் ஆகிய அனைத்தையும் ஒழிப்பதற்கும் ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆக்கிரமிப்பதை ஒழிப்பதற்கும் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது அவசியமாகும்.

" இந்த உலக யுத்தம் ஆரம்பித்த காலமுதலே, காங்கிரஸ் மகாசபை தொந்தரவு விளைவிக்கலாகாதென்ற கொள்கையை, வேண்டுமென்றே கடைப்பிடித்து வந்திருக்கிறது. தனது சத்யாக்கிரகப் போராட்டம் பலனற்றுப் போவதாயினுங்கூட, அதை ஓர் அடையாளமென்ற அளவில் நடத்திவந்தால் போதும் என்ற எண்ணத்தில், அதை நடத்திவந்திருக்கிறது. இதனுல், தொந்தரவு விளைவிக்க

லாகாது என்ற தன் கொள்கையை முடிவான தர்க்கரீதியில் பாராட்டுவார்கள் என்றும், அதனல் உண்மையான ஆட்சி முறை பொதுஜனங்களின் பிரதிநிதிகளின் கைக்கு மாறு மென்றும் காங்கிரஸ் கருதுகிறது. இதன்மூலம், தேசம் அனைத்துமே ஒன்றுதிரண்டு, இன்று நசுக்கப்பட்டுப் போகும் நிலைமையிலுள்ள மனித சமுதாய சுதந்திரத்தை அடைவதற்கு இந்திய சமுதாயத்தாலான அளவு பணிசெய் வது சாத்தியமென்றும், காங்கிரஸ் நம்பிவந் திருக்கிறது. பிரிட்டனுடையபிடிப்பு இந்தியாவில்பின்னும் வலிவடையும் வகையில் எத்தகைய காரியமும் நடைபெருது என்றும் காங் கிரஸ் நம்பி வந்தது.

"இந்த நம்பிக்கைகள் யாவும் சிதறுண்டு போயின. இந்தியாவைப் பொறுத்தவரையில், பிரிட்டிஷ் அரசாங்கத் தின் போக்கில் எத்தகைய மாறுதலும் இல்லை என்றும், பிரிட்டிஷ் ஆட்சியின் பிடிப்பு எவ்விதத்திலும் தளராது என்றும் உளுத்துப்போன கிரிப்ஸ் திட்டங்கள் புலப் படுத்தின. சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியபோது, காங்கிரஸ் பிரதிநிதிகள் தேசிய கோரிக்கைக்கு முரணுகாதவகையில், குறைந்த அளவு நன்மையையாவது பெற முயன்ருர்கள். ஆனல், இது பயனில்லாது போயிற்று. இந்த ஏமாற்றத்தின் விளைவாக, பிரிட்டிஷாரிடம் மக்களுக்கு மனவெறுப்பு விரைவாக எங் குமே பரவி வந்திருக்கிறது. ஜப்பானியரின் வெற்றியைக் கண்டு மக்கள் வரவரத் திருப்தியும் கொள்கிருர்கள். இத் தகைய நிலை அபிவிருத்தி யடைவதைக் கண்டு, காங்கிரஸ் காரியக் கமிட்டி மிகவும் அஞ்சுகிறது. ஏனெனில், இந்த நிலை யைத் தடை செய்யாவிட்டால், ஆக்கிரமிப்பைக்கூட, எதிர்ப் பில்லாமல் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுவிடும். ஆக்கிர மிப்புகள் அனைத்தையுமே எதிர்த்துப் போராட வேண்டு மென்றும், ஆக்கிரமிப்புக்கு இடம் கொடுத்துக் கீழ்ப் படிவது இந்திய மக்களையே கீழ்மைப்படுத்திக்கொள்வ தாகும் என்றும், அதனல் அடிமைத்தனம் இன்னும் நிலைத்து நிற்க ஏதுவாகும் என்றும் காரியக் கமிட்டி கருது கிறது. மலேயா, பர்மா, சிங்கப்பூர் முதலிய இடங்களில்

நேர்ந்த அனுபவம் இந்தியாவுக்கு நேரக்கூடாதென்றும் மகாசபை எண்ணுகிறது. தவிர, இந்தியாமீது ஜப்பானே, பிற நாடுகளோ படையெடுப்பதையும் ஆக்கிரமிப்பதையும் எதிர்ந்து நிற்கவும் விரும்புகிறது. தற்போது பிரிட்டனிடம் மக்கள் காட்டும் மனவெறுப்பை நல்லுணர்ச்சியாக மாற்றி, பிரிட்டனுடன் எத்தகைய முயற்சிகளிலும் மனித சமுதாய சுதந்திரத்தையும் உலக சுதந்திரத்தையும் பாதுகாக்க மனமுவந்து இந்தியா ஒத்துழைக்கச் செய்யவும், இதனல் நேரும் இன்னல்கள் முதலியவற்றைப் பிரிட்டனுடன் இந்தியாவைப் பகிர்ந்துகொள்ளச் செய்யவும் காங்கிரஸ் எண்ணுகிறது. சுதந்திர நாடு என்ற மனக்களிப்பு இந்தியாவுக்கு ஏற்பட்டால்தான் இது சாத்தியமாகும்.

"வகுப்புவாதச் சிக்கல்களை அறுத்து எறியக் காங்கிரஸ் பிரதிநிதிகள் தங்களால் ஆனவரை முயன்றிருக்கிருர்கள். ஆனல், ஈவிரக்கமின்றிப் பிரித்தாலும் கொள்கையை அன்னிய ஆதிக்கம் விடாது கடைப்பிடித்து வருவதால், அந்த ஆதிக்கம் இருக்கும்வரை வகுப்புவாதச் சிக்கல்களைப் போக்குவது இயலாத காரியமாக இருந்துவருகிறது. அன்னிய ஆதிக்கமும் அதனுடைய தலையீடும் நின்றபிறகுதான், இப்போதுள்ள பொய்ம்மை மறைந்து உண்மைக்கு இடங்கொடுக்கும்; சகல கட்சியினரும் சகல தொகுதியினரும் ஒன்றுசேர்ந்து, இந்தியாவுக்குள்ள பிரசினைகளை ஆராய்ந்து பரஸ்பரம் ஒப்பமுடிந்த அடிப்படையைக் கொண்டு ஒரு முடிவுக்கு வரமுடியும். பிரிட்டிஷாரைப் பாதிக்கவும் அவர்கள் கவனத்தை இழுக்கவும் எண்ணியே, பெரும்பாலும் உருவாக்கப்பெற்ற தற்போதுள்ள அரசியல் கட்சிகள் யாவும், அப்போது அனேகமாய்ச் செயலற்று நின்றுவிடும். மகாராஜாக்களும் ஜாகிர்தார்களும் ஜமீன்தார்களும் சொத்துடையவர்களும் பணக்கார வர்க்கத்தினரும், தங்களுடைய செல்வமும் சொத்தும், தொழிற்சாலைகளிலும் வயல்களிலும் பிற இடங்களிலும் பாடுபடும் தொழிலாளிகளிமிருந்தே வருகின்றன என்பதையும், உண்மையாகவே, அதிகாரம் அத்தொழிலாளிகளுக்குத்தான் உரியது என்பதையும் இந்திய சரித்திரத்திலேயே அப்போதுதான் முதன்முதலாக உணர

ஆரம்பிப்பார்கள்; இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறினதுமே, பொறுப்புணர்ச்சியுள்ள ஆண்களும் பெண்களும் ஒன்றுசேர்ந்து, இந்திய மக்களுள் சகல பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் உள்ள தற்காலிக அரசாங்கமொன்றை நிறுவுவார்கள். இவ் வரசாங்கம் பின்னர் திட்டத்தை வகுக்கும். அதன் சுய நிர்ணய சபையைக் கூட்டுவதற்காக இந்தியாவிலுள்ள சகல வகுப்பினருக்கும் ஏற்ற முறையில் இந்திய அரசாங்க அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்றை இந்தச் சபை தயாரிக்கும். நேச முறையில் பிற்காலத் தொடர்பையும் ஒத்துழைப்பையும் நாடி, ஏதாவது ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டால் இரு நாடுகளும் ஒன்றுசேர்ந்து எதிர்ப்பதற்காக, சுதந்திர இந்தியாவின் பிரதிநிதிகளும் கிரேட் பிரிட்டனின் பிரதிநிதிகளும் கலந்து ஆலோசிப்பார்கள். இந்திய மக்கள் அனைவருடைய ஒருமித்த மனவுறுதியையும் பலத்தையும் பெற்று எந்த ஆக்கிரமிப்பையும் வெற்றிகரமாக இந்தியா எதிர்க்கும்படி செய்ய வேண்டுமென்பதே காங்கிரஸின் மனப்பூர்வமான ஆசையாகும்.

"இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி வெளியேற வேண்டுமென்று சொல்வதில், யுத்தத்தை நடத்துவதில் கிரேட் பிரிட்டனையோ, அல்லது நேசநாடுகளையோ எவ்வகையிலும் தத்தளிக்க வைக்கும் நோக்குமோ, இந்தியா மீது அன்னியர் படையெடுப்பதை ஆதரிக்கும் நோக்கமோ காங்கிரஸ் மகாசபைக்கு இல்லை. ஜப்பானியரோ, அல்லது அச்சு நாடுகளோடு சேர்ந்த வேறு வல்லரசோ சீனத்தில் நடத்திவருகிற போரை இன்னும் அதிக மும்முரமாகச் செய்யும் நோக்கமும் காங்கிரஸிற்கு இல்லை. அதுமட்டுமல்ல. நேசநாடுகளுக்கு இருந்துவரும் பாதுகாப்புத் திறனுக்குக் கெடுதி செய்ய வேண்டுமென்ற விருப்பமும் காங்கிரஸ் மகாசபைக்கில்லை. ஆகவே, ஜப்பானிய ஆக்கிரமிப்பையும் வேறு பல ஆக்கிரமிப்பையும் எதிர்த்து நிற்கவும், சீனத்திற்கு உதவி செய்து, சீனத்தைப் பாதுகாக்கவும் வேண்டி, நேச துருப்புகள் இந்தியாவில் தங்குவது அவசியமென்று நேசநாடுகள் கருதினால், அதற்கு இடங்கொடுக்கக் காங்கிரஸ் மகாசபை சம்மதிக்கிறது.

"பிரிட்டிஷ் ஆதிக்கம், இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டு மென்று சொல்வதனுல், இந்தியாவிலுள்ள சகல பிரிட்டிஷாருமே மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டு மென்று கருத வேண்டியதில்லை. இந்தியாவைத் தங்கள் தாயகமாக எண்ணித் தங்களையும் இந்தியப் பிரஜைகளாகக் கருதிக் கொண்டு, மற்றவர்களோடு சமதையாக வாழ்வதில் பிரியம் கொண்டுள்ள ஆங்கிலேயர்கூட வெளியேற வேண்டும் என்பது பொருளே அல்ல. நல்லெண்ணத்தோடு பிரிட்டிஷார் வெளியேறுவார்களாயின், அதன் காரணமாக, ஸ்திரமான ஒரு தற்காலிக சர்க்கார் இந்தியாவில் ஏற்பட்டு, இந்த இந்திய சர்க்காரும், ஐக்கிய நாடுகளும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைத்து, ஆக்கிரமிப்புகளை எதிர்த்து நிற்கவும் சீனவுக்கு உதவி புரியவும் ஏதுவாகும்.

"இந்தமாதிரி நடவடிக்கையில் அபாயம் உண்டு என்பதைக் காங்கிரஸ் உணரவே செய்கிறது. சுதந்திரத்தை அடைவதற்கு முயன்று நிற்கும் எந்தத் தேசமும், இத்தகைய அபாயத்தைச் சமாளித்தே தீரவேண்டும். பேராபத்தான இந்த நிலையில் இன்னும் கடுமையான அபாயங்களும் தொல்லைகளும் நேராதவாறு தேசத்தையும், அதைவிடப் பெரிதான உலக சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டி, இத்தகைய அபாயத்தைச் சமாளித்தே தீர வேண்டும்.

"ஆகையால், தன் தேசிய லட்சியத்தையடைவதற்குக் காங்கிரஸ் ஆத்திரப்பட்டுக்கொண் டிருந்தபோதிலும், இயன்றவரையில் ஐக்கிய நாடுகளுக்குத் தொந்தரவை உண்டாக்கத்தக்க எந்தக் காரியத்திலும் அவசரப்பட்டு இறங்கவோ, அல்லது ஆபத்துவரக் கூடிய காரியங்களில் ஈடுபடவோ முயலாது. எனவே, இப்பொழுது கூறும் நியாயமான அறிவுக்குகந்த இந்த ஆலோசனையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், காங்கிரஸிற்கு மிக்க மகிழ்ச்சியைத் தரும். சுதந்திரத்திற்காகவே ஐக்கிய நாடுகள் போரிடுவதாகச் சொல்கிருர்கள். எனவே, உலக சுதந்திரத்திற்கும், இந்தியாவின் நலனுக்கும், அதோடுகூட

பிரிட்டிஷார் நலனுக்கும் பிரிட்டிஷார் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வது நல்லது.

"ஆயினும், இந்த வேண்டுகோளைப் பிரிட்டிஷார் அங்கீகரிக்காவிட்டால், தற்போது இருந்துவரும் கேவலமான நிலைமையையும், அதனுல் சீர்கேடு அதிகமாகிக்கொண்டு வருவதையும், ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டுமென்ற இந்தியாவின் ஆவல் குறைந்துகொண்டு வருவதையும், பார்த்துக் கைகட்டிக்கொண்டு சும்மாயிருக்க இயலாது. அரசியல் சுதந்திரத்தையும், உரிமைகளையும் பெறுவதற்காக, காங்கிரஸ் மகாசபை 1920-லிருந்தே, அஹிம்சையைத் தனது கொள்கையாகக் கடைப்பிடித்து வந்திருக்கிறது. இவ்வளவு காலமாக, அந்தத் துறையில் சேகரித்த பலத்தையெல்லாம் கொண்டு, மனவெறுப்போடு போராட்டத்தில் இறங்கவேண்டிய கட்டாயநிலை, அப்போது காங்கிரஸ் மகாசபைக்கு ஏற்பட்டுவிடும். சர்வ வியாபகமான இந்தப் போராட்டம் மகாத்மா காந்தியின் தலைமையில்தான் நடக்கும். இந்தத் தீர்மானத்தில் கண்ட பிரசினைகள் இந்திய மக்களுக்கு மட்டுமன்றி, ஐக்கிய நாட்டினருக்கும் ஜீவாதாரமானவையாயும் யாவற்றையும் பாதிப்பவையாயும் இருப்பதால், காரியக்கமிட்டி, முடிவான அபிப்பிராயம் சொல்லும்படி, இந்தத் தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பிவைக்கிறது. இந்தத் தீர்மானத்தை ஆலோசனை செய்வதற்காக, 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 7-ந் தேதியன்று பம்பாயில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடும்."

# ஜப்பானியர் ஒவ்வொருவருக்கும்

உங்களிடம் எனக்கு எத்தகைய வெறுப்பும் இராத போதிலும், நீங்கள் சீனாவைத் தாக்குவதை நான் அடியோடு வெறுக்கிறேன் என்பதை ஆரம்பத்திலேயே, நான் தெரிவித்துக்கொள்வது அவசியமாகும். மிகவும் உன்னத நிலையிலிருந்த நீங்கள், ஏகாதிபத்தியப் பேராசை என்ற இழிந்த நிலைக்கு வந்துவிட்டீர்கள். இந்தப் பேராசையை நிறைவேற்றிக்கொள்ள உங்களால் முடியாது. இதனால் நீங்கள் ஆசியா கண்டத்தையே சின்னாபின்னப்படுத்துவதற்குக் கருவியாவீர்கள். அதன் காரணமாக உங்களையறியாமலே உலக ஐக்கியத்தையும், சகோதரத்துவத்தையும் வளரவொட்டாமல் தடைப்படுத்துபவர்களாவீர்கள்; இதனால், மனித சமுதாயம் கடைத்தேறுவதற்கே வழியில்லாது போகும்.

நான், பதினெட்டு வயதுச் சிறுவனாய் லண்டனில் படித்துக்கொண்டிருந்த காலம்முதல், காலஞ்சென்ற ஸர் எட்வின் ஆர்னால்டு உங்கள் தேசத்தின் அருஞ்சிறப்பான பண்புகளைப்பற்றி எழுதியுள்ளதை யெல்லாம் படித்து அவற்றைப் பாராட்டிவந்தேன். நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது ருஷ்யாமீது நீங்கள் கொண்ட மகத்தான வெற்றியை யறிந்து என் உள்ளம் எல்லையற்ற உவகை யடைந்தது. 1915-ம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியபின், ஜப்பானிய சந்நியாசிகள் பலரோடு பழகும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. அவர்களில் பலர் எங்கள் ஆசிரமத்தில் தங்கியிருந்திருக்கிறார்கள். ஒருவர் சேவாக்கிராம ஆசிரமத்தில் மதிக்க முடியாத ஓர் உறுப்பினராகிவிட்டார். கடமையை நிறைவேற்றுவதில் அவருக்குள்ள ஈடுபாடு, கண்ணியமான தோற்றம், தினசரித் தெய்வவழிபாட்டில் அசையாத பற்றுதல், இனிமையாய்ப் பழகுதல், எத்தகைய நிலையிலும் மனங் கலங்காமை, அவருடைய உள்ளம் அமைதிபெற்றிருக்கிறது என்பதைத் தெளிவாய்க்காட்டும் அவருடைய புன்முறுவல் முதலிய அரிய பண்புகளால் நாங்கள் அவரை மிகவும் பற்றுதலோடு நேசித்தோம். நீங்கள், கிரேட் பிரிட்டனை எதிர்த்து,

யுத்தப் பிரகடனம் செய்தபடியால், அவரை எங்களிட மிருந்து பிரித்துவிட்டார்கள். எங்கள் அன்பிற்குரிய சகபாடி ஒருவரைப் பிரிந்து, நாங்கள் வருந்துகிறோம். அவர் வைத்துவிட்டுப்போன ஒரு சிறு பேரிகையும், அன்றாடம் அவர் வழிபாடு செய்கிற நினைவும் எங்களைவிட்டு அகலாது நிற்கின்றன. அந்தச் சிறிய பேரிகையை அவர் காலை மாலை இரு வேளைகளிலும் கொட்டுவார். அந்த ஓசையைத் தொடர்ந்து, நாங்கள் பிரார்த்தனை செய்வது வழக்கம்.

இத்தகைய இனிய நினைவுகள் உங்களைப்பற்றி எனக்கு உண்டு. மற்றொரு புறத்தில், யாதொரு தீங்கும் செய்யாத சீனாமீது, காரணமில்லாமல், நீங்கள் போரிடுவதைக் கண்டு, எனது உள்ளம் மிகமிக வருந்துகிறது. மகத்தான ஒரு பெரிய புராதன தேசத்தை ஈவிரக்கமின்றி நீங்கள் சூறை யாடுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் அறிவிக்கின்றன. இவை நம்பத்தகுந்த செய்திகளானால், எனது உள்ளம் படும் துயரம் சொல்லத்தரமன்று.

உலகிலுள்ள பலம் பொருந்திய வல்லரசுகளோடு சம அந்தஸ்தை அடைய, நீங்கள் ஆசை கொண்டது நியாயமே. ஆயினும், சீனத்தை ஆக்கிரமிப்பதும், அதற்காக அச்சு நாடுகளோடு நேசம் கொள்ளுவதும், எல்லையற்ற முறையில் உங்கள் ஆசையை அளவுக்கு அதிகமாக்குவதாகிறது.

சீனாவின் ஒப்புயர்வற்ற இலக்கியத்தை உங்களுடைய சொந்த இலக்கியமாகவே ஸ்வீகரித்துக்கொண் டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட மகத்தான புராதன மக்கள் உங்கள் நாட்டிற்கு அயலில் வாழ்வதைக் குறித்து நீங்கள் பெருமை கொள்வீர்களென எண்ணினேன். அவர்களது சரித்திரம் சம்பிரதாயம், இலக்கியம் ஆகியவற்றை நீங்கள் அறிந்து கொண்ட பிறகு, அவர்களோடு நட்பு என்ற தளையால் நீங்கள் பிணிக்கப்பட்டிருக்க வேண்டுமேயொழிய, இன்றுள்ள மாதிரி அவர்களைப் பகைவர்களாய் கொள்ளவேண்டிய தில்லை.

நான் சுதந்திரமுடையவனாக இருந்து, உங்கள் நாட்டிற்கு வர எனக்கு நீங்கள் அனுமதி கொடுத்தால், எனது உடல் நலத்தையும் ஏன் எனது உயிரையுமே பொருட்படுத்

தாமல் உங்கள் தேசத்திற்கு வந்து, சீனவுக்கும் உலகத்துக்கும் செய்யும் தீங்கையும், இதனல் உங்களுக்குமே செய்யும் தீங்கையும் நிறுத்திக்கொள்ளும்படி வேண்டுவேன்.

ஆனல், அத்தகைய சுதந்திரம் எனக்கு இன்று இல்லை. உங்கள் எகாதிபத்திய வெறியையும் நாஸிஸத்தையும் நாங்கள் வெறுப்பதுபோலவே, வெறுத்துவருகிற மற்றோர் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராட வேண்டிய விசித்திரமான நிலையில், நாங்கள் இருந்துவருகிறோம். அதை நாங்கள் எதிர்க்கிறோமென்றால், பிரிட்டிஷ் மக்களுக்குத் தீங்கு விளைவிப்போம் என்பது பொருளல்ல. அவர்கள் மனத்தை மாற்றவே நாங்கள் முயல்கிறோம். ஆயுதம் தரியாமல், பிரிட்டிஷ் ஆட்சியை நாங்கள் எதிர்க்கிறோம். எங்கள் தேசத்திலுள்ள முக்கிய அரசியல் கட்சியொன்று அன்னிய ஆட்சியை எதிர்த்து, நட்புரிமையோடு, ஆனல் பயங்கரமான முறையில் போராடி வருகிறது.

இருப்பினும், அதற்காக வேறு நாட்டினரின் உதவியை நாடவில்லை. உங்களிடம், எங்களைப்பற்றித் தெரிவித்தவர்கள் கோணமாணலாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் இந்தியாவைக் கூடிய விரைவில் தாக்கப்போவது உறுதியாகையால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, நேசநாசடுகளைத் தொந்தரவு செய்கிறோம் என்று உங்களுக்குத் தெரிவித்துவிட்டார்கள். இது தவறு. பிரிட்டனுக்கு இருந்துவரும் சங்கடங்களை அனுகூலமாகப் பயன்படுத்திக்கொள்ள நாங்கள் விரும்பியிருந்தால், யுத்தம் தொடங்கிய காலத்திலேயே, மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே நாங்கள் செய்திருக்கலாம்.

பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டுமென்று கோருகிற எங்கள் இயக்கத்தைத் தவறான முறையில் அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. உண்மையில், இந்தியாவின் சுதந்திரத்தில் உங்களுக்கு அதிக அக்கறை யிருப்பதாகச் சொல்வது மெய்யானல், பிரிட்டிஷார் எங்கள் சுதந்திரத்தை அங்கீகரித்துவிடுவார்களானல், பின்னர் இந்தியாமீது படையெடுக்க உங்களுக்கு நியாய

மில்லே. மேலும், ஈவிரக்கமற்ற முறையில், சீனவில் நீங்கள் போரிடுவதாக வரும் செய்திகளும் இந்திய சுதந்திரத்தில் உங்களுக்கு அக்கரை யுண்டென்பதும் ஒன்ருேடொன்று முரணுயிருக்கின்றன.

இந்தியா உங்களே விரும்பி வரவேற்கு மென்று நம்புவீர்களாயின், நீங்கள் மிகவும் வருந்தநேரிடும். இதைப் பற்றி உங்களுக்கு எவ்விதச் சந்தேகமும் வேண்டாம் என்று நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டுமென்ற இயக்கத்தின் நோக்கமும் இலட்சியமும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமாயினும் சரி, அல்லது ஜெர்மன் நாஸிஸமாயினும் சரி, அல்லது உங்கள் ஆட்சியொத்ததாயினும் சரி எத்தகைய ராணுவ ஏகாதிபத்திய வெறியை இந்தியா தடுத்துநிற்க வன்மையுடைய தாக்குவதற்காக, இந்தியாவுக்குச் சுதந்திரம் பெறுவதே யாகும். ராணுவ வெறியையும், அதன் பேராசையையும் அடியோடு விரட்டி யொழிப்பதற்கு, அஹிம்சை முறைதான் தக்க சாதன மென்று நாங்கள் கருதியிருந்துங்கூட, உலகத்தையே ராணுவ ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வருவதை நாங்கள் பேசாது பார்த்துக் கொண்டிருந்து, இதைத் தடுக்க எதுவும் செய்யாதிருந்தோமானல், இது மிகவும் கேவலமாகும். அச்சு நாடுகள் பலாத்காரத்தை மிகவும் கண்ணியமாக மதித்து, அதை ஒரு மதமாகவே கொண்டாடுகின்றன. அத்தகைய நாடுகளேத் தோற்கடிக்க வேண்டுமானல், நேசநாடுகள் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கி யாகவேண்டும். இல்லேயேல், நேசநாடுகள் அச்சுநாடுகளேத் தோற்கடிப்பது சாத்திய மன்று என்றே நான் அஞ்சுகிறேன். உங்களுடைய ஈவிரக்கமற்ற யுத்த தந்திரமுறைகளேத் தோற்கடிக்க முடிந்தாலல்லது, உங்களேயும், உங்கள் கூட்டாளிகளேயும், நேசநாடுகள் வெல்ல முடியாது. தனிநபர் சுதந்திரமும், ஜனநாயகமும், உலகில் நிலவும் பொருட்டே நேசநாட்டினர் போராடுவதாகச் சொல்கிருர்கள். ஆனல், உங்கள் முறையை அப்படியே பின்பற்றி, அவர்கள் யுத்தத்தை நடத்துவார்களாயின், இப்படிச் சொல்லியது பொய்யாகிவிடும். அங்களுடைய ஈவிரக்க

மற்ற தன்மையைப் பின்பற்றுது தடுக்கும் ஆற்றல் அவர்களுக்கு வரவேண்டுமானுல், இந்தியாவின் சுதந்திரத்தை இப்பொழுதே அங்கீகரித்துப் பிரசாரம் செய்ய அவர்கள் முன்வர வேண்டும். அப்போதுதான், கட்டாயத்தாலும், விருப்பின்றியும் உதவ, இந்தியா சுதந்திர நாடாகித் தானே மனமுவந்து நேசநாடுகளோடு ஒத்துழைக்கும்.

நேசநாட்டினரின் சொந்த நலனை உத்தேசித்தும், அவர்கள் இதுவரை சொல்லிவந்ததுக்கு எடுத்துக் காட்டவும், நீதியின் பெயரால் நாங்கள் பிரிட்டனுக்கும், நேசநாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிருேம். ஆனுல், உங்களுக்கோ, மனித சமுதாயத்தின் பெயரினுல், இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். ஈவிரக்கமின்றிக் கொடுமையாகப் போரிடுவது, எவருக்குமே உரியதன்று என்பது உங்களுக்கு தெரியாதிருப்பதைக் காண மிக்க ஆச்சரியமடைகிறேன். நேசநாட்டினரால் உங்களைத் தோற்கடிக்க முடியாவிட்டால், வேறு யாரேனும் உங்கள் முறையை அபிவிருத்தி செய்து, உங்கள் ஆயுதத்தைக்கொண்டே உங்களைத் தோற்கடிப்பார்கள் என்பது திண்ணம். இதில் உங்களுடைய சந்ததியார் பெருமை கொள்ளத்தக்க சிறப்பு எதுவுமில்லை. கொடுமையான காரியங்களை எவ்வளவு திறமையாகச் செய்தபோதிலும், அவற்றைச் சொல்லி உங்கள் சந்ததியார் பெருமை கொள்ளுவதற்கு இடமில்லை.

நீங்கள் வெற்றியடைந்தபோதிலும், அதனுல் உங்கள் கட்சி நியாயமுடையதென்று ஆகிவிடாது. உங்களுடைய அழிக்கும் சக்தி என்பதுதான் புலப்படும். மனப்பூர்வமாகவும் நியாயமாகவும் இந்தியாவுக்கு இப்பொழுது சுதந்திரத்தை வழங்கி, ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும், வாழும் அடிமை மக்களுக்குச் சுதந்திரம் வழங்குவதற்கு இதை முதல்படியாகச் செய்துகாட்டினுலன்றி, மேலே நான் சொன்ன உண்மை நேசநாடுகள் விஷயத்திலும் பொருந்தும் என்பது தெளிவு.

நேசநாட்டுத் துருப்புகள் இந்தியாவில் தங்க சுதந்திர இந்தியா சம்மதிக்கும் என்று தெரிவித்து, நாங்கள் பிரிட்டனுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருேம். நேசநாட்

டினரின் நோக்கத்திற்கு எவ்விதத்திலும் தீங்கு செய்ய எண்ணவில்லையென்றும், பிரிட்டன் விட்டுப்போன தேசத்தை உடனே பிடித்துக்கொள்ளலாம் என்ற உங்கள் தவறான அபிப்பிராயத்தைப் போக்க எண்ணியே நாங்கள் இவ்வாறு வாக்களித்திருக்கிறோம். அத்தகைய எண்ணம் இருந்து அதைப் பின்பற்றவும் எண்ணுவீர்களாயின், பலம் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, நாங்கள் உங்களை எதிர்க்கத் தயங்க மாட்டோம். நாங்கள் நடத்தும் இந்த இயக்கம், உங்களையும் உங்கள் கூட்டாளிகளையும் நேரியவழியில் செலுத்தக் கூடுமென்று நம்பியும், உங்களுடைய ஒழுக்கப்பண்பு சீர்கெட்டுப்போகாமலும், மனிதர்களை வெறும் இயந்திரங்களாக்கி விடாமலும் செய்ய நீங்களும் உங்கள் நண்பர்களும் சென்றுகொண்டிருக்கும் நெறியினின்று உங்களைத் திருப்பக் கூடுமென்று நம்பியும் நான் உங்களுக்கு இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

எனது வேண்டுகோளுக்குப் பிரிட்டன் செவி சாய்ப்பதைவிட, நீங்கள் செவிசாய்ப்பது குறைவா யிருந்தாலும் இருக்கக் கூடும். நீதியுணர்ச்சி பிரிட்டிஷாருக்கு அறவே போய்விட வில்லையென்பதை நான் அறிவேன்; அவர்களும் என்னை அறிவார்கள். உங்களைப்பற்றி முடிவு சொல்லக்கூடிய அளவு எனக்கு அனுபவமில்லை. நீங்கள் வேண்டுகோளுக்குச் செவிசாய்ப்பது இல்லை யென்றும், ஆயுத பலத்திலேயே நம்புவது உண்டென்றும் நான் படித்திருக்கிறேன். உங்களைப்பற்றி எனக்குத் தெரியவந்ததெல்லாம் அநியாயமாய்த் தப்பான அபிப்பிராயந்தானென்றும், உங்கள் இதயத்தில் கொஞ்சம் நல்லுணர்ச்சியை எனது வேண்டுகோள் உண்டாக்குமென்றும் நான் மிக்க ஆவலோடு எண்ணுகிறேன். நல்லவற்றைக் கேட்டு நடக்கும் இயல்பு மனிதனிடம் உண்டென்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. அது காரணமாகவே இந்தியாவில் நடக்கவிருக்கும் போராட்டம் என் உள்ளத்தில் உருக்கொண்டது. அந்த நம்பிக்கைதான் உங்களுக்கு இவ் வேண்டுகோள் விடுக்கும்படியும் என்னைத் தூண்டியது.

உங்கள் நன்மையைக் கோரும் அன்பன்,

மோ. க. காந்தி

சேவாக்கிராமம், 18—7—42

100272